விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஆனி 17 செவ்வாய்க்கிழமை (02.07.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 195



கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே




மரண தண்டனை விவகாரம்

## பிரதமரிடம் கவலையை வெளியிட்ட வெளிநாட்டு தூதுவர்கள்



(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இலங்கைக்கான வெளிநாட்டு தூதுவர்களுக்கும்மிடையில் சந்திப்பொன்று நேற்றைய தினம் இடம் 23

## டிசம்பரில் மீண்டும் ஆட்சி மாற்றம்

எஸ்.பி.திஸாநாயக்க

(கண்டி)

இலங்கையில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலொன்று இடம்பெற்ற மறுநாளே, புதிய பிரதமரையும் புதிய அமைச்சரவையையும் நியமித்து சக்திமிக்கதொரு அரசாங்கத்தை ஸ்தாபிப் 23

தமிழ் அரசியல் கைதிகளை

## விடுவிக்க வலியுறுத்தி யாழ்.நகரில் ஆர்ப்பாட்டம்



(யாழ்ப்பாணம்)

இலங்கையில், நீண்டகாலமாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடு 23

# வலி.வடக்கில் மீண்டும் காணி சுவீகரிக்க முயற்சி

## எதிர்வரும் 4ஆம் திகதி அளவீட்டுக்கு இரகசியத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்குப் பகுதியில் காணி சுவீகரிப்பதற்கு இரகசிய முயற்சி மீளவும் மேற்கொள்ளப்படுகின்றது எனத் தெரியவந்துள்ளது. எதிர்வரும் 4ஆம் திகதி அளவீடு செய்ய இரகசியத் திட்டம் இடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வலி வடக்கில் 232 ஏக்கர் காணியை சுவீகரிப்பதற்கான முயற்சியின் முக்கிய கட்டமாக, காணி அளவீட்டு பணிகள் இரகசியமாக 23

## வேப்பங்குளத்தில் குழு மோதல்

இருவர் கைது

(குருமன்காடு)

வவுனியா வேப்பங்குளம் பகுதியில் அமைந்துள்ள மதுபானசாலையில் நேற்றிரவு ஏற்பட்ட மோதல் காரணமாக பொலிஸாரினால் இருவர் கைது செய்யப்பட்டனர். 23

## ரயிலுடன் மோதுண்டு மாணவன் பலி

கிளிநொச்சியில் சம்பவம்

(கிளிநொச்சி)

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி சென்ற தபால் புகையிரதத்தில் மோதுண்டு மாணவர் ஒருவர் பலியாகியுள்ளார். இச்சம்பவம் நேற்று இரவு இடம்பெற்றுள்ளது.

14 வயது இராஜேஸ் 23

தெரிவுக்குழுவின் முன் முன்னிலையாகாத ஜனாதிபதி

## பிரபாகரன் போதை கடத்தியே வருமானம் பெற்றதாக சர்ச்சைக் கருத்து

(கொழும்பு)

பாராளுமன்ற தெரிவுக்குழு முன் முன்னிலையாகாத ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் போதைப்பொருள் கடத்தியே வருமானம் பெற்றார் என நேற்று சர்ச்சைக் கருத்தை வெளியிட்டுள் 23

பொலிஸ்மா அதிபர், பாதுகாப்பு செயலரை

## நீதிமன்றில் முன்னிலைப்படுத்த சட்டமா அதிபர் உத்தரவு

(கொழும்பு)

பொலிஸ் மா அதிபர் பூஜித் மற்றும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ ஆகியோரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு சட்ட மா அதிபர் பதில் பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்கிரமரத்ன 23

## தூக்குக்கு எதிராக உயர் நீதிமன்றில் 12 மனுத் தாக்கல்

(கொழும்பு)

தூக்கிலிட்டு மரணதண்டனையை அமுல் செய்வதை தடுத்து உத்தரவொன்றினை 23

## போதை வியாபாரம் செய்ய பிரபாகரனுக்கு தேவை இருக்கவில்லை

ஜனாதிபதிக்கு சுமந்திரன் பதிலடி

(கொழும்பு)

போதைப்பொருள் வியாபாரம் நடத்த வேண்டிய தேவை விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு இருக்கவில்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குப் பதிலடி கொடுத்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன். 23

## சர்வதேசத்தின் தலையீட்டால் நாட்டின் இறைமைக்கு ஆபத்து

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன

(கொழும்பு)

இலங்கையின் உள்விவகாரங்களில் ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட சர்வதேச சமூகம் தலையிடுவது நாட்டின் இறையாண்மைக்கு எதிரான 23


வெளிநாடுகளுக்கான துரித தபால்கள்
பொதிகள் சேவை
COURIER Services
ஆகாய, கடல்மார்க்கமாக அதிவிரைவான பொதிகள் சேவை
பால்மா, கடலுணவு, இறைச்சி வகைகள், எண்ணெய் வகைகள், மருந்துப் பொருட்கள், பழவகைகள், குறுகிய வாழ்நாள் காலம் உள்ள உணவுப் பொருட்கள் அனைத்தையும்
அதிகுறைந்த கட்டணத்தில் அதிவிரைவான சேவை
Harikanan Express

20 வருடகால அச்சுத்துறை அனுபவம்
இன்று முதல் புலம்பெயர் உறவுகளுடன் உறவுப் பாலமாக...
கரிகணன்
வடக்கின் அச்சகதாரர்
(C-6835)

# சிரியாவின் நிலைமைக்கு இலங்கை தள்ளப்படும்

## விமல் வீரவன்ச எச்சரிக்கை

(கொழும்பு)

சோபா மற்றும் எக்சா உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டால், வெகுவிரைவிலேயே சிரியாவின் நிலைமைக்கு இலங்கை தள்ளப்படும் என எதிரணி பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச எச்சரிக்கை விடுத்தார்.

மேலும், இலங்கையை அமெரிக்கா கையகப்படுத்திக் கொள்ளும் திட்டத்தின் ஓர் அங்கமாகவே ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றதாகவும் அவர் கூறினார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே மகிந்த ஆதரவு பாராளுமன்ற உறுப்பினரான விமல் வீரவன்ஸ இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வின்போது தொடர்ந்தும் உரையாற்றிய அவர், அமெரிக்காவுடன் இலங்கை செய்து கொள்ளவுள்ள எக்ஸா மற்றும் சோபா உடன்படிக்கையினால், எதிர்காலத்தில் அமெரிக்காவின் காலணித்துவத்தின் கீழ் இலங்கை வருவதற்கான அபாயம் ஏற்படும் எனத் தெரிவித்தார்.

மேலும், இதனை மக்கள் புரிந்து கொள்ளக் கூடாது என்பதற்காகவே இரண்டு விதமாக இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அத்தோடு, இந்த அரசாங்கத்தின் காலத்தில் அது கைச்சாத்திடப்பட்டாலும், இலங்கையின் அனைத்து அரசாங்கங்களும் அந்த ஒப்பந்தத்துக்கு ஏற்றவகையிலேயே செயற்பட வேண்டும்என்ற சரத்துக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும், அது ஒட்டுமொத்த நாட்டுக்கே ஆபத்தாக அமையும் என்றும் தெரிவித்தார்.

திருகோணமலை துறைமுகத்தை கையகப்படுத்தும் பிரதான நோக்கில் கைச்சாத்திடப்படவுள்ள இந்த ஒப்பந்தங்களினால், அமெரிக்க இராணுவம் எவ்வேளையிலும் இலங்கையில் கால் பதிக்கலாம் என்றும் அவர்கள் இலங்கையின் சட்டதிட்டங்களுக்கு உட்பட மாட்டார்கள் என்றும் குறித்த ஒப்பந்தத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாக விமல் மேலும் கூறினார்.

அதேநேரம், இதனால் நாட்டின் விவசாய நிலங்கள், வரலாற்றுச் சின்னங்கள், பௌத்த மதத்திற்கு ஆபத்து ஏற்படும் என்றும் அவர் எச்சரித்தார்.

அதுமட்டுமன்றி, அமெரிக்காவின் இந்த சூசக செயற்பாட்டின் ஓர் அங்கமாகவே, இலங்கையில் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றதாகவும் விமல் வீரவன்ஸ சுட்டிக்காட்டினார். (ம-3)

# முல்லை புதுக்குடியிருப்பில் புதையல் தோண்டியவர்களுக்கு

## நீதிமன்றால் தண்டம் விதிப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் கடந்த 27 ஆம் திகதி அன்று புதையல் தோண்ட முற்பட்ட குற்றச்சாட்டில்கைதுசெய்யப்பட்ட பெண் உள்ளிட்ட 14 பேருக்கும் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 27 ஆம் திகதி குறித்த 14 பேரும் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது பெண் உள்ளிட்ட வயோதிபர் இருவரும் நீதவான் ஆட்பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதுடன் இவர்கள் தொடர்பான வழக்கு விசாரணை 01.07.2019 அன்று திகதியிட்டு ஏனைய 12 பேரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்நிலையில் இவர்களின் வழக்கு நேற்று நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதில் ஒவ்வொருவருக்கும் தலா இரண்டு இலட்சத்து இருபத்தி ஐந்தாயிரம் ரூபாய் தண்டப்பணம் கட்டி விடுதலையாகுமாறு நீதிமன்றம் பணித்துள்ளது. (ம-281)


3 மாத வார, வார இறுதிநாள்

இலவச ஆங்கிலப்பயிற்சி

இளைஞர் யுவதிகள், 13 வயதிற்கு மேற்பட்ட மாணவர்கள் மற்றும் ஆங்கிலம் கற்கவிரும்பும் அனைத்து வயதினரும் இணையமுடியும்.

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 06.07.2019 சனி

1.காலை 11.00 2.மதியம் 02.00

ஒவ்வொரு பிரிவிலும் 20 பேர் மட்டும்! முன்பதிவு செய்தல் அவசியம்

வாரநாள் பிரிவுகள் ஆரம்பம் : 04.07.2019 வியாழன்

1.காலை 08.30 2.காலை 10.30

Modules கட்டணம் ரூபா 1000 மட்டும் செலுத்துதல் வேண்டும்

அனுமதி, கற்கைநெறி கட்டணம், டிப்ளோமா சான்றிதழ் முற்றிலும் இலவசம்

(C-6838)

SAAMSON Experts in English Training

403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோயிலடி, யாழ்நகர்,

021 222 4282
077 621 4567


# பாராளுமன்ற தெரிவுக்குழு மீது சிறிதளவும் நம்பிக்கையில்லை



## தயாசிறி ஜயசேகர தெரிவிப்பு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதல்கள் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற தெரிவுக்குழு மீது எமக்கு சிறிதளவும் நம்பிக்கை கிடையாது. எப்படியாவது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீது பழி சுமத்த வேண்டும் என்ற நோக்கத்திலேயே தெரிவுக் குழுவின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

பொல்காவெல பிரதேசத்தில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி காரியாலத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு சட்டம் ஒழுங்கு அமைச்சை ஜனாதிபதி வழங்காத கோபத்தை அவர் தெரிவுக்குழு விசாரணைகளின் போது சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கின்றார்.

இதேபோன்றுதான் ஏனைய உறுப்பினர்களும் ஒவ்வொரு தனிப்பட்ட காரணங்களுக்காக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். எனவே தெரிவுக்குழு வின் செயற்பாடுகள் தொடர்ந்தும் நீடிக்காது. அதனால் எந்த தீர்வும் கிட்டாது என்றும் அவர் குறிப்பிட்டார். (ம-3)




# ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பான சர்ச்சைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணலாம்

## மகிந்த அமரவீர தெரிவிப்பு



(கொழும்பு)

பொதுஜன பெரமுன,சுதந்திர கட்சிக்கிடையில் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் காணப்படும் சர்ச்சைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணலாம்.

ஆனால் இந்தச் சர்ச்சையை பெரிதாக்கி இவ்விரு கட்சிகளும் பிரிந்து செயற்படுமானால் அது ஐக்கிய தேசியக் கட்சிக்கு இலகுவாக வெற்றியைப் பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பாக அமைந்து விடும் என்று பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கூட்டணி தொடர்பில் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இணைந்து அமைப்பதற்கு எதிர்பார்த்துள்ள பாரிய கூட்டணி தொடர்பான கலந்துரையாடல் இறுதி கட்டத்திலுள்ளது. இந்தக் கூட்டணியை அமைத்து வெற்றி பெற வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும் என அவர் தெரிவித்தார். (7-9)

# சீன சிகரட்டுக்களை இறக்குமதி செய்தால் ஜனாதிபதியும் நானும் அரசில் இருக்க மாட்டோம்

## அமைச்சர் ராஜித

போதைப்பொருள் பாவனையினை தீவிரப்படுத்தும் விதமாக சீன சிகரட்டுக்களை இறக்குமதி செய்தால் தானும், ஜனாதிபதியும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்க மாட்டோம்.

போதைப்பொருள் ஒழிப்பு உள்ளிட்ட பிரதான விடயங்களே ஆட்சி மாற்றத்தின் மேடைப்பேச்சாக காணப்பட்டது. வகுக்கப்பட்ட கொள்கைகளுக்கு அப்பாற்பட்டு செல்லும் போது முரண்பாடுகளே ஏற்படும் என சுகாதாரத்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

தேசிய போதைப்பொருள் ஒழிப்பு வாரத்தின் இறுதி நாள் மாநாடு கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நேற்று ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

போதைப்பொருள் ஒழிப்பிற்கு எதிரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த அரசாங்கத்தில் சுகாதாரத்துறை அமைச்சராக பதவி வகித்த வேளையில் இருந்து உலக சுகாதார ஸ்தாபனத்துடன் இணைந்து செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றார். புகைத்தல் ஒழிப்பு தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனம் 22 கொள்கை திட்டங்களை வகுத்துள்ளது. இதில் 20 கொள்கைகளை இதுவரையில் முழுமைப்படுத்தியுள்ளோம்.

கடந்த அரசாங்கத்தில் போதைப்பொருள் ஒழிப்பிற்கு எதிராக சுகாதார அமைச்சர் முன்னெடுத்து சென்ற புதிய செயற்றிட்டங்களுக்கு அரசாங்கம் எவ்வித ஒத்துழைப்பினையும் வழங்கவில்லை.

மாறாக புகைத்தல் நிறுவனங்களின் கோரிக்கைகளுக்கு அமையவே செயற்பட்டு சுகாதார அமைச்சரை நெருக்கடிக்குள்ளாக்கியது. ஆனால் தற்போது அந்நிலைமை காணப்படவில்லை.

புகைத்தல் பாவனையே போதைப்பொருள் பழக்கத்திற்கு ஆரம்ப தளத்தினை இடும். தேசிய வருமானத்தை ஈட்டிக் கொள்ளும் விதத்தில் சீன சிகரட்டை இறக்குமதி செய்யும் யோசனை நிதியமைச்சரினால் முன் வைக்கப்பட்டது . இலாபத்திற்காக மக்களின் எதிர்காலத்தை இல்லாதொழிக்க முடியாது. சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் வரும் சிகரட்டுக்களை சட்ட ரீதியில் இறக்குமதி செய்வதால் என்ன பாதிப்பு என்பதே நிதியமைச்சரின் வாதமாகும்.

எதிர்ப்புக்களின் மத்தியில் இரகசியமாக சீன சிகரட் இறக்குமதி செய்யப்பட்டால் தானும், ஜனாதிபதியும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்க மாட்டோம் என மேலும் தெரிவித்தார். (7-9)

# தேசிய பாடசாலைகளின் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு

## டப் கணனிகள் வழங்க அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

தேசிய பாடசாலைகளின் முன்னோடி செயற்றிட்டமாக மாத்திரமே உயர்தர மாணவர்களுக்கான டப் கணனிகளை பெற்றுக் கொடுப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

நாட்டிலுள்ள சகல உயர்தர பாடசாலை மாணவர்களுக்கும் டப் கணனிகளை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற ஆலோசனை 2017ஆம் ஆண்டிலேயே அமைச்சரவையில் முதன்முதலாக சமர்ப்பிக்கப்பட்டது.

கல்வி அமைச்சின் ஊடாக முன்வைக்கப்பட்ட இந்த ஆலோசனைக்கு, நாடளாவிய ரீதியில் ஒரே நேரத்தில் இதனை ஆரம்பிப்பது பொருத்தமற்றது எனவும் முதற்கட்டமாக அதனை ஒரு சில தேசிய பாடசாலைகளில் மாத்திரம் முன்னோடி செயற்றிட்டமாக ஆரம்பிக்க வேண்டுமெனவும்ஜனாதிபதியால் சிபாரிசு செய்யப்பட்டது.

குறிப்பாக அத்தியாவசிய பாடவிதானத்திற்குரிய விடயங்கள் தவிர்ந்த ஏனைய இணையத்தளங்களுக்கு இந்த டப் கணனிகளின் ஊடாக பிரவேசிப்பது தடை செய்யப்பட வேண்டுமெனவும் ஜனாதிபதி பணிப்புரை வழங்கியிருந்தார்.

அதற்கமைய கல்வி செயற்பாடுகளுக்கு மேலதிகமாக வேறு விடயங்களுக்கு பிரவேசிக்கும் ஆற்றல் தடுக்கப்பட்டு இந்த டப் கணனிகளை மாணவர்களுக்கு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமென அமைச்சரவைக்கு அறிவிக்கப்பட்டது.

இந்த முன்னோடி செயற்றிட்டத்தின் வெற்றிக்கமைய அதன் எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது. இத்தகைய செயற்றிட்டங்கள் தேசிய பாடசாலைகளில் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்பதே குறித்த ஆலோசனை பற்றிய அமைச்சரவையின் சிபாரிசாகவும் அமைந்தது.

நாடளாவிய ரீதியில் பாடசாலை மாணவர்களுக்கு டப் கணனிகளை வழங்குவதற்காக ஐந்தரை பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டது. இந்த நிதியில் குறித்த செயற்றிட்டத்திற்கான செலவின் பின்னரான மிகுதியை நாடுபூராகவும் உள்ள பாடசாலைகளில் பாரிய குறைபாடாக நிலவிவரும் மேசை, கதிரைகள் உள்ளிட்ட உபகரணங்களை பெற்றுக் கொடுக்க பயன்படுத்த வேண்டுமென்பதே இச்செயற்றிட்டம் தொடர்பிலான ஜனாதிபதியின் ஆலோசனையாக அமைந்தது.

மேலும் இச்செயற்றிட்டத்திற்கான நிதி தேவைப்பாடு எவ்வளவு என்பதையும் உறுதியாக குறிப்பிட வேண்டுமென்பதும் ஜனாதிபதியின் பணிப்புரையாக அமைந்தது. இதற்கமைய குறித்த செயற்றிட்டத்திற்காக 2017 ஆம் ஆண்டில் கோரப்பட்ட விலைமனு முன்னோடி செயற்றிட்டத்திற்கமைய மாற்றியமைக்கப்படல் வேண்டும்.

பாடசாலை மாணவர்களுக்கு புதிய தொழில்நுட்பத்துடனான அறிவினை பெற்றுக்கொடுக்க வேண்டியது அவசியமான போதிலும், அதனை மாணவர்களின் ஒழுக்கம் மற்றும் உளவியல் நிலைமைகளுக்கு பொருத்தமான வகையில் இச்செயற்றிட்டத்தினை அமுல்படுத்த வேண்டும் என்பதே ஜனாதிபதியின் கருத்தாகும் என ஜனாதிபதி ஊடகப்பிரிவால் அறிவிக்கப்பட்டுள்ளது. (9)

# நாட்டை சீர்குலைக்கவே ஆர்ப்பாட்டத்துக்கு ஞானசாரதேரர் அழைப்பு விடுத்துள்ளார்

பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் எதிர்வரும் 7ஆம் திகதி இந்த நாட்டை சீர்குலைப்பதற்கும்; பாரிய ஆர்ப்பாட்டத்திற்கும் அழைப்பு விடுத்திருக்கின்றார் எனவும், இதனை தடுக்காவிட்டால் இத்தனிமனிதன் நாட்டையும், சட்டத்தையும் கையிலெடுக்கும் சந்தர்ப்பமாக அமையும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல்லா மஹரூப் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை - கந்தளாயில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் திறப்பு விழாவும் அங்குரார்ப்பண நிகழ்வும் நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளன. இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். மேலும் கூறுகையில்,

எமது அமைச்சர்களும், இராஜாங்க அமைச்சர்களும் மற்றும் பிரதி அமைச்சர்களும், கடந்த மூன்றாம் திகதி இராஜினாமா செய்த போது இந்த அரசுக்கு பல நிபந்தனைகளை விதித்தோம்.

முஸ்லிம் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது, மத்ரஸாக்களை பாதுகாப்பது, அப்பாவி உலமாக்களை கைது செய்யப்பட்டவர்களை விடுப்பது மற்றும் முஸ்லிம் பெண்களின் ஆடைகளுக்கும் சட்ட அங்கீகாரம் வழங்க வேண்டும்.

முஸ்லிம் அரசியல் தலைவர்கள் அன்று இராஜினாமா செய்யாவிட்டால் இந்த நாட்டில் பாரிய இனக்கலவரம் ஏற்பட்டிருக்கும்.

அவசரகாலச் சட்டம் மேலும் ஒரு மாத காலம் நீடிக்கப்பட்டிருக்கின்றது. இதனால் ஞானசார தேரரின் ஊர்வலம் தடுக்கப்படல் வேண்டும்.

இவை தொடர்பாக ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும், பாதுகாப்பு அமைச்சருக்கும், பொலிஸ்மா அதிபருக்கும் இவ்விடயம் தொடர்பாக மகஜர் கையளிக்க உள்ளோம்.

இவ்விடயத்தில் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் தீவிரமாக இருக்கின்றோம். இந்த நாட்டின் பாதுகாப்பு விடயத்தில் ஜனாதிபதியும், பாதுகாப்பு அமைச்சருமான மைத்திரிபால சிறிசேனவே தீர்மானிக்க வேண்டும்.

முஸ்லிம் மக்களை பாதுகாக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதோடு, எமது முஸ்லிம் பெண்களின் ஆடை விடயம் இன்று சட்ட ரீதியாக அணியலாம் என்றொரு நிலைக்கு வந்துள்ளது.

அடுத்து வரும் தேர்தல் ஜனாதிபதி தேர்தலே. சிறந்த தலைமைத்துவமாக நாட்டிற்கு சாபக்கேடற்ற ஒரு ஜனாதிபதியை முஸ்லிம் சமூகம் ஒன்றிணைந்து கட்சி பேதமற்ற முறையில் ஒன்றிணைந்து தெரிவு செய்ய வேண்டும்.

இந்த மண்ணில் நிம்மதியாகவும், எமது உரிமைகளையும் பாதுகாக்கக்கூடிய ஒற்றுமையுள்ள பெரும் ஆதரவினை எதிர்வரும் தேர்தல்களில் நிரூபிப்போம் என மேலும் தெரிவித்தார். (7-9)

# மரண தண்டனை அமுல்படுத்தும் தீர்மானத்தை இலங்கை அரசு கைவிட வேண்டும்

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரிக்கை

(கொழும்பு)

மரண தண்டனையை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வரும் இலங்கையின் தீர்மானமானது மனித உரிமை விவகாரங்களில் பாரியதொரு பின்னடைவை ஏற்படுத்தும் எனச் சுட்டிக் காட்டியிருக்கும் மனித உரிமைகள் கண்காணிப்பகம், மரண தண்டனையை நடைமுறைப்படுத்தும் தீர்மானத்தை இலங்கை அரசாங்கம் உடனடியாகக் கைவிட வேண்டும் என்பதுடன், மனித உரிமைகள் சார்ந்த அதன் வாக்குறுதிகளை மனதிற்கொண்டு செயற்பட வேண்டும் என்றும் கூறியிருக்கிறது.

போதைப்பொருள் குற்றச்செயல்களுடன் தொடர்புடைய மரண தண்டனைக் கைதிகள் நால்வருக்கு விரைவில் அத்தண்டனையை அமுல்படுத்தவுள்ளதாகவும், அதற்குரிய அனுமதிப் பத்திரங்களில் தான் கையெழுத்திட்டுள்ளதாகவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பகிரங்கமாக அறிவித்தமையை அடுத்து சர்வதேச நாடுகள், மனித உரிமை மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் பலவும் அதற்கு தமது கண்டனத்தையும், அதிருப்தியையும் வெளியிட்டுள்ளன. அந்த வகையில் சுமார் 43 வருடங்களின் பின்னர் மீண்டும் மரண தண்டனையை நடைமுறைப்படுத்தும் ஜனாதிபதி சிறிசேனவின் தீர்மானத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து மனித உரிமைகள் கண்காணிப்பகம் அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கிறது.

மரணதண்டனையை நடைமுறைப்படுத்தும் தீர்மானத்தை இலங்கை அரசாங்கம் உடனடியாகக் கைவிட வேண்டும் என்பதுடன், கடந்த 43 வருடகாலமாக அத்தண்டனையை அமுல்படுத்தாமல் இடைநிறுத்தி வைத்திருப்பதை தொடர்ந்தும் இலங்கை பேணவேண்டும்.

இலங்கையில் அதிகரித்து வரும் போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்துவதற்காக போதைப்பொருளுடன் தொடர்புடைய குற்றவாளிகள் நால்வருக்கு மரணதண்டனையை நடைமுறைப்படுத்தப் போவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்திருக்கிறார் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் குறிப்பிட்டிருக்கிறது. (7-9)

# மரண தண்டனை நிறைவேற்றுவதில் உறுதியாக உள்ளேன் சர்வதேசத்தின் இதில் தலையிட வேண்டாம் - ஜனாதிபதி

(கொழும்பு)

போதைப்பொருள் வர்த்தகர்களுக்கு எதிராக மரண தண்டனையை நிறைவேற்றுவதில் தான் உறுதியாக உள்ளதாகவும், இதற்கு எதிர்ப்பினை வெளியிட்டு, நாட்டின் சுயாதீனத்தில் சர்வதேசத்தினர் தலையிட வேண்டாம் என தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

மேலும், ஏப்ரல் 21 ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதல்களின் பின்னணியிலும் போதைப்பொருள் வர்த்தகர்களே இருக்கிறார்கள் எனவும் தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று மேற்கண்டவாறு தெரிவித்தார். (7-9)




# விறு விறு போட்டியில் இலங்கை துறு துறு வெற்றி

## அவிஷ்க அபார சதம்

மே.தீவுகளுக்கு எதிரான உலக கிண்ண லீக் போட்டியில் அவிஷ்கா பெர்ணான்டோ சதம் கடந்து கைகொடுக்க இலங்கை அணி, 23 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. நிக்கோலஸ் பூரன் சதம் வீணானது.

இங்கிலாந்தில், 12வது ஐ.சி.சி., உலக கோப்பை கிரிக்கெட் தொடர் நடக்கிறது. செஸ்டர் லீ ஸ்ட்ரீட் நகரில் நடந்த லீக் போட்டியில் இலங்கை, மே.தீவுகள் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற மே.தீவுகள் அணித் தலைவர் ஜேசன் ஹோல்டர், 'களத்தடுப்பை' தேர்வு செய்தார்.

**நல்ல ஆரம்பம்**

இலங்கை அணிக்கு அணித் தலைவர் திமுத் கருணாரத்ன, குசல் பெரேரா ஜோடி நல்ல ஆரம்பம் கொடுத்தது. ஷெல்டன் காட்ரெல் வீசிய 3வது ஓவரில் கருணாரத்ன, 2 பவுண்டரி அடித்தார். ஷனான் கேப்ரியல் வீசிய 11வது ஓவரில் 'ஹாட்ரிக்' பவுண்டரி விளாசிய குசல் பெரேரா, 38 பந்தில் அரைச் சதமடித்தார். முதல் விக்கெட்டுக்காக 93 ஓட்டங்கள் சேர்த்த போது ஹோல்டர் 'வேகத்தில்' கருணாரத்னே (32) வெளியேறினார். குசல் பெரேரா (64) 'ரன் -அவுட்' ஆனார்.

**அவிஷ்கா அபாரம்**

நிதானமாக ஆடிய குசல் மெண்டிஸ் (39), பேபியன் ஆலன் 'சுழலில்' சிக்கினார். அலன் வீசிய 39வது ஓவரில் தொடர்ச்சியாக ஒரு பவுண்டரி, ஒரு சிக்சர் விளாசிய மத்யூஸ் (26), ஹோல்டர் பந்தில் போல்டானார். விக்கெட் ஒருபுறம் சரிந்தாலும், மறுமுனையில் பொறுப்பாக ஆடிய அவிஷ்கா பெர்ணான்டோ, விண்டீஸ் பந்துவீச்சை எளிதாக சமாளித்து ரன் சேர்த்தார். இவருக்கு ஒத்துழைப்பு தந்த திரிமான்னே, கார்லஸ் பிராத்வைட் வீசிய 45வது ஓவரில் தொடர்ச்சியாக 2 பவுண்டரி விளாசினார். அபாரமாக ஆடிய அவிஷ்கா, ஒருநாள் போட்டி அரங்கில் தனது முதல் சதத்தை பதிவு செய்தார். இவர், 104 ரன் எடுத்திருந்த போது காட்ரெல் பந்தில் ஆட்டமிழந்தார். இசுரு உதானா (3) ஏமாற்றினர்.

இலங்கை அணி 50 ஓவர்களில், 6 விக்கெட்டுக்களை இழந்து 338 ஓட்டங்கள் குவித்தது. திரிமான்னே (45), தனஞ்செய டி சில்வா (6) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் மே.தீவுகள் சார்பில் ஹோல்டர், 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

**பூரன் சதம்**

கடின இலக்கை விரட்டிய மே.தீவுகள் அணிக்கு மலிங்க தொல்லை கொடுத்தார். இவரது 'வேகத் தில்' சுனில் அம்ப்ரிஸ் (5), ஷாய் ஹோப் (5) வெளியேறினர். கிறிஸ் கெய்ல் (35), ஹெட்மயர் (29), அணித் தலைவர் ஹோல்டர் (26) சோபிக்கவில்லை. கார்லஸ் பிராத்வைட் (8) 'ரன் அவுட்' ஆனார்.

அபாரமாக ஆடிய பேபியன் ஆலன், 30 பந்தில் அரை சதமடித்தார். மறுமுனையில் அசத்திய நிக்கோலஸ் பூரன், ஒருநாள் போட்டியில் தனது முதல் சதத்தை பதிவு செய்தார். ஏழாவது விக்கெட்டுக்காக 83 ஓட்டங்கள் சேர்த்த போது அலன் (51) ஆட்டமிழந் தார். மத்யூஸ் பந்தில் பூரன் (118) வெளியேறினார். மலிங்க 'வேகத்தில்' ஒஷேன் தாமஸ் (1) அவுட்டானார்.

50 ஓவர்களில் மே.தீவுகள் 9 விக்கெட்டுகளை 315 ஓட்டங்கள் மட்டும் எடுத்து தோல்வியடைந்தது. காட்ரெல் (7), கேப்ரியல் (3) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் இலங்கை சார்பில் மலிங்க 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

போட்டியின் ஆட்டநாயகனாக இலங்கையின் அவிஷ்க தெரிவானார்.



சதம் அடித்து அசத்திய இலங்கையின் அவிஷ்க பெர்னாண்டோ

# அரையிறுதியை உறுதி செய்யுமா இந்தியா

## இன்று பங்களாதேஷுடன் மோதல்

உலகக் கிண்ணத் தொடரில் இந்திய அணி, பங்களாதேஷை சந்திக்கிறது. இதில் வென்று அரையிறுதியை உறுதி செய்யும் என எதிர்பார்க்கப் படுகிறது.

இங்கிலாந்தில் 12வது உலக கிண்ணத் தொடர் நடக்கிறது. மொத்தம் 10 அணிகள் பங்கேற்கும் இதில் இன்று இந்தியா, வங்கதேச அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன. இந்திய அணி 7 போட்டியில் 5 வெற்றி, 1 தோல்வியுடன் (1 ரத்து) 11 புள்ளிகள் பெற்றுள்ளது.

பங்களாதேஷை வெல்லும் பட்சத்தில் அவுஸ்திரேலியாவுக்கு அடுத்து இரண்டாவது அணியாக அரையிறுதிக்கு முன்னேறலாம். இதற்கேற்ப 3 சதம் விளாசிய ரோகித் சர்மா (440 ஓட்.) மீண்டும் உதவுவார் என நம்பலாம். தவானுக்குப் பதில் ஆரம்ப வீரராக வரும் லோகேஷ் ராகுல் (30, 48, 0) ஏமாற்றுகிறார். அணித் தலைவர் கோஹ்லி இதுவரை ஐந்து அரைசதம் அடித்தாலும் சதம் விளாசவில்லை.

இதன் பின் தான் இந்திய அணிக்கு சிக்கல் ஏற்படுகிறது. 4வது இடத்தில் ரிஷாப் பன்ட், அடுத்து பாண்ட்யா என வந்தாலும் 'பினிஷிங்' செய்து தருவது முக்கியம். 'சீனியர்' தோனி - கேதர் ஜாதவ் கூட்டணியின் மந்தமான ஆட்டம் அதிர்ச்சியாக உள்ளது. கடந்த போட்டியில் கடைசி 5 ஓவர்களில் 39 ஓட்டங்கள் மட்டும் எடுத்தனர். இதனால் கேதர் ஜாதவுக்குப் பதில் ஜடேஜாவுக்கு வாய்ப்பு கிடைக்கும் எனத் தெரிகிறது.

**பந்துவீச்சு எப்படி**

இங்கிலாந்துக்கு எதிராக மொஹமட் ஷமி (13 விக்.,), பும்ரா (10) என வேகக் கூட்டணி நம்பிக்கை தந்தாலும், சகால் ஓட்ட 'வள்ளல்' ஆனார். இந்த இடத்தில், உடற்தகுதி பெற்றுள்ள புவனேஷ்வர் இடம் பெற்றால், துடுப்பாட்ட வரிசை கூடுதல் பலம் பெறும். குல்தீப் 6 போட்டிகளில் 5 விக்கெட்டுக்களை மட்டும் வீழ்த்தியது ஏமாற்றமே.

**சகிப் மிரட்டல்**

பங்களாதேஷ் அணிக்கு 'தனி ஒருவனாக' கைகொடுக்கிறார் 'சகலதுறை வீரர்' சகிப் அல் ஹசன் (6ல் 476 ரன், 10 விக்.,). இது தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது. தவிர முஷ்பிகுர் (327), தமிம் இக்பால் (205) என பலரும் ஓட்டங்கள் சேர்க்க உதவுகின்றனர்.

அணியின் பந்துவீச்சுதான் பலவீனமாக உள்ளது. அணித் தலைவராக மோர்டசா 6 போட்டிகளில் ஒரு விக்கெட்தான் வீழ்த்தியுள்ளார். சயிபுதீன் (10), முஸ்தபீஜுர் ரஹ்மான் (10) விக்கெட் வீழ்த்தினாலும் ஓட்டங்களை அதிகமாக விட்டுக்கொடுக்கின்றனர்.

7 போட்டிகளில் 7 புள்ளிகள் பெற்றுள்ள பங்களாதேஷ் அணி, அரையிறுதி வாய்ப்பை தக்கவைக்க, வென்றாக வேண்டிய கட்டாயத்தில் களமிறங்குகிறது.

**2** உலகக் கிண்ண அரங்கில் இரு அணிகளும் 3 முறை மோதின. கடந்த 2007ல் மட்டும் பங்களாதேஷ் வென்றது. அடுத்து 2011, 2015 போட்டிகளில் இந்தியா வெற்றி பெற்றது.

**29** இந்தியா, பங்களாதேஷ் அணிகள் 35 போட்டிகளில் மோதியுள்ளன. இதில் இந்தியா 29, பங்களாதேஷ் 5ல் வென்றன. ஒரு போட்டி மழையால் ரத்தானது.

# ஜோகோவிச், பிளிஸ்கோவா வெற்றி

## விம்பிள்டனில் அபாரம்



ஜோகோவிச்

விம்பிள்டன் டென்னிஸ் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் செர்பியாவின் ஜோகோவிச், சுவிட்சர்லாந்தின் வாவ்ரின்கா, தென்னாபிரிக்காவின் கெவின் ஆன்டர்சன், ருமேனியாவின் சிமோனா ஹலெப், செக்குடியரசின் பிலிஸ்கோவா, இங்கிலாந்தின் ஹெதர் வோட்சன் உள்ளிட்டோர் வெற்றி பெற்றனர்.

லண்டனில், நடப்பு ஆண்டின் 3வது கிராண்ட்ஸ்லாம் தொடரான விம்பிள்டன் டென்னிஸ் நடக்கிறது.

இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் சுவிட்சர்லாந்தின் வாவ்ரின்கா, பெல்ஜியத்தின் ருபென் பெமல்மன்ஸ் மோதினர்.

ஒரு மணி நேரம், 27 நிமிடம் நீடித்த போட்டியில் அசத்திய வாவ்ரின்கா 6-3, 6-2, 6-2 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று, 2வது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு முதல் சுற்றுப் போட்டியில் 'நடப்பு சம்பியன்' செர்பியாவின் நோவக் ஜோகோவிச், ஜேர்மனியின் பிலிப் கோல்ஸ்கிரைபர் மோதினர். அபாரமாக ஆடிய ஜோகோவிச் 6-3, 7-5, 6-3 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்றார்.

மற்ற முதல் சுற்று போட்டிகளில் தென்னாபிரிக்காவின் கெவின் அண்டர்சன், ஸ்பெயினின் ராபர்டோ பாடிஸ்டா அகுட், பெலிசியானோ லோபஸ் உள்ளிட்டோர் வெற்றி பெற்றனர்.

**பிலிஸ்கோவா அபாரம்**

பெண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் செக் குடியரசின் கரோலினா பிலிஸ்கோவா, சீனாவின் லின் சூ மோதினர். முதல் செட்டை 6-2 எனக் கைப்பற்றிய பிலிஸ்கோவா, 'டைபிரேக்கர்' வரை சென்ற 2வது செட்டை 7-6 என வென்றார். முடிவில் பிலிஸ்கோவா 6-2, 7-6 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்றார்.

மற்றொரு முதல் சுற்றுப் போட்டியில் ருமேனியாவின் சிமோனா ஹலெப், 6-4, 7-5 என, பெலாரஸின் சாஸ னோவிச்சை வீழ்த்தினார்.

மற்றைய முதல் சுற்றுப் போட்டிகளில் இங்கிலாந்தின் ஹெதர் வாட்சன், அமெரிக்காவின் மடிசன் கீஸ், உக்ரைனின் எலினா ஸ்விடோலினா, அமெரிக்காவின் சோபியா கெனின் உள்ளிட்டோர் வெற்றி பெற்றனர்.



பிலிஸ்கோவா



சாவகச்சேரி பிரதேச சபையின் ஏற்பாட்டில் தேசிய போதைப்பொருள் ஒழிப்பு வார இறுதி நாள் நிகழ்வு சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் க.வாமதேவன் தலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் போதை ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி இடம் பெற்றது. செயலாளர், உபதவிசாளர், சபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள் அனைவரும் ஒன்றிணைந்து போதை ஒழிப்பு விழிப்புணர்வு தொடர்பான வாசகங்கள் எழுதப்பட்டு ஊதப்பட்ட பலூன்களை கைகளில் ஏந்தியவாறும் போதை ஒழிப்பு வாசகங்களை உரத்த குரலில் உச்சரித்தவாறும் கொடிகாமம், சாவகச்சேரி பிரதேச சபை வளாக முன்றலிலிருந்து ஆரம்பித்து பேருந்து நிலையம் சென்று அங்கிருந்து ஊதப்பட்ட பலூன்களை ஒரே நேரத்தில் பறக்க விட்டு திடசங்கற்பம் பூண்டு போதையை ஒழிப்போம் என உறுதிமொழி எடுத்து பேரணியை நிறைவு செய்தனர்.



தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் கடந்த மாதம் 18 ஆம் திகதி சமுர்த்தி வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கை போட்டி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வு பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் சண்முகராசா சிவஸ்ரீ தலைமையில் இடம்பெற்றது.

வீட்டுத்தோட்ட அபிவிருத்தியை மேம்படுத்தும் நோக்காக முதலாம் பரிசு 20 ஆயிரம், இரண்டாம் பரிசு 15 ஆயிரம், மூன்றாம் பரிசு பத்தாயிரம் வழங்கப்பட்டது.இவற்றை விட கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியாக தெரிவு செய்யப்பட்ட 39 பயனாளிகளுக்கு தலா 5 ஆயிரம் வழங்கப்பட்டது.


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

பழைமை வாய்ந்த

## ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம்
சகல காரியங்களும் வசியமுறைப்படி செய்து தரப்படும்.
(பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால்
பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

றொங்கசாமி
கண்டி, அம்பத்தன்ன -077 939 5222
Viber:076 466 4153.

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்

## இலவச யோகாசனப் பயிற்சியும் தியானமும் பண்டைய தோப்புக்கரணம்- மூளைக்கு யோகா- Brain Yoga யாவருக்கும்

சத்குரு ஜக்கிவாசுதேவ் ஈசா அறக்கட்டளை



என்ன நோயுள்ளவர்களும்,எந்தவயதானவர்களும், எந்த மதத்தவர்களும் யோகாசன பயிற்சி செய்யலாம். இதனால் நோய்கள் குறையலாம் அல்லது துப்பரவாக மாறலாம். திறம்பட நோயற்று வாழலாம்.

தோப்புக்கரணத்தை ஆய்வுசெய்து எமது மூளை சமநிலை அடைவதுடன்,கிரகிக்கும் தன்மையும் கூடி, மன உளைச்சல்,மனப்பதட்டம்,மறதி என்பவற்றுக்கு உதவுகின்றது என்று கண்டுபிடித்துள்ளார்கள்.

இடம்: சின்மயாமிஷன் நல்லூர், 9 செட்டித் தெரு,யாழ்ப்பாணம்
02.07.19 தொடக்கம் 05.07.19 வரை மாலை 6-7

உப யோகா தோப்புக்கரணம்-Brain Yoga மூச்சுப்பயிற்சி-நாடிச்சுத்தி ஓம்காரம் ஈசாகிரியா-தியானம்

நடத்துபவர்: வைத்திய கலாநிதி கௌரிபாலன் ஈசா தொன்மை வாய்ந்த ஹத்தா யோகா ஆசிரியர் வைத்திய கலாநிதி கௌரிபாலன், நான் கலாநிதி கௌரிபாலன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் 1984 தொடங்கி 1989 வரை குழந்தைப்பேறும் மகளிர் மருத்துவத் துறையில் கடமையாற்றியுள்ளேன்.சிலகாலம் இங்கிலாந்தில் கடமையாற்றி திரும்பி வந்துள்ளேன்.நான் கடந்த 12 வருடங்களாக ஈசா யோகா சற்குரு அவர்களின் மேற்பார்வைன்கீழ் பயின்று வருகின்றேன்.

பதிவுகளுக்கு 071 924 7919 வைத்திய கலாநிதி கௌரிபாலன்


## இராசி பலன்

**மீனம்:** தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், உறவினர்களின் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**மேடம்:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பகையொன்று நட்பாகலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**இடபம்:** வியாபார விருத்தியுண்டு, குலதெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சுப நிகழ்வுகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**மிதுனம்:** ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் செலவு ஏற்படலாம், உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம்.

**கும்பம்:** நட்பு வட்டம் விரிவடையும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பிறர் உதவியுண்டு.

**கடகம்:** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**மகரம்:** சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், வெற்றி தரும் செய்திகள் வந்து சேரலாம், கனிவாகப் பேசி காரியம் சாதித்துக் கொள்வீர்கள், வருமானம் திருப்தி தரும்.

**சிம்மம்:** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, தொழிலில் வருமானத்தை அதிகரிக்க புதிய வழியைக் கையாள்வீர்கள், பொதுவாழ்வில் புகழ் கூடும் நாள்.

கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | | | சூரி, புத, சந், ராகு, சுக் |
| | இராசி பலன் | | செவ், |
| | | | |
| சனி, கேது | குரு | | |

சந்திராஷ்டமம்
மூலம்

02.07.2019
ஆனி 17, செவ்வாய்க்கிழமை
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
அமாவாசை பின்னிரவு 1.31 மணிவரை
மிருகசீரிடம் முற்பகல் 8.43 மணிவரை
சுபநேரம் 10.26-11.56 மணிவரை
இராகுகாலம் 2.56-4.26 மணிவரை
அமாவாசை விரதம்

வளவன்

**தனுசு:** குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், ஏட்டிக்குப் போட்டியாக இருந்தவர்கள் மனம் மாறுவர், நீண்டநாளைய விருப்பமொன்று நிறைவேறலாம், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** எதிர்பாராத வகையில் உறவினர், நண்பர்களிடையே சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், எடுத்த காரியத்தை முடிப்பதில் கொஞ்சம் அலைச்சல்கள் ஏற்படலாம்.

**துலாம்:** சிலர் தொழில் ரீதியாக உங்களிடம் உதவி கேட்டு வரலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், வெளியூர் பயணங்களால் ஆதாயமுண்டு.

**கன்னி:** புதிய திட்டங்கள் தீட்டி தொழிலில் ஆதாயம் காண முற்படுவீர்கள், காலைப் பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

# வாகன இலக்க தகடுகளை பெற்றுக்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

தலைமை அலுவலகத்திலிருந்து யாழ்ப்பாண மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்ற வாகன இலக்கத்தகடுகளின் பட்டியல், யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் மாவட்ட செயலகத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திலும் பொது மக்களின் பார்வைக்காக அறிவிப்புப் பலகையில் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது.

மேலும் மாவட்டச் செயலக இணையத்தளத்திலும் பார்வையிடலாம். இதற்கமைய புதிதாக வாகனங்களைப் பதிவு செய்த உரிமையாளர்கள் வாகனப்பதிவுப் புத்தகம், தேசிய அடையாள அட்டை என்பவற்றையும் மாகாணங்களுக்கிடையே வாகன உரிமை மாற்றம் பெற்றவர்கள் மேற்குறித்த இரு ஆவணங்களுடன் பழைய வாகன இலக்கத்தகடுகள் மற்றும் வாகன இலக்கம் பொறித்த ஒட்டும்தாள் (Sticker) என்பவற்றையும் யாழ். மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து அலுவலகத்தில் சமர்ப்பித்து தங்கள் வாகனங்களுக்குரிய இலக்கத்தகடுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்ப்பாணம் மோட்டார்போக்குவரத்துத் திணைக்கள பிரதி ஆணையாளர் வை. பரந்தாமன் அறிவித்துள்ளார்.

**AAA-3126, AAP-0620, AAP-4602, AAT-6399, AAW-0164, ABE-0996, ABT-6141, ABT-6143, ABT-6396, ABT-6479, ABT-6773, ABT-6777, ABT-6936, ABT-6941, ABT-6949, ABT-7171, ABT-7901, ABU-4433, ABU-6111, ABV-9559, BBB-7940, BBD-8510, BBV-0335, BCU-1500, BDH-5528, BDT-4872, BDW-9637, BEN-8849, BED-8173, BES-1778, BFR-2301, BFZ-9298, BGS-1114, BHW-3927, CAC-2616, CAC-7995, CAI-0476, CAK-8994, CAR-0554, CAV-2530, CBA-8220, CBG-3663, DAC-3529, DAC-3849, DAD-1509, DAD-5095, DAG-0241, GAA-1077, GAA-1111, GC-6550, GE-8882, GH-5949, GL-8840, GN-0831, GO-5706, GR-9403, GT-5936, GV-4100, GW-6642, GW-8516, GY-9858, GY-9862, GZ-0124, HB-6825, HF-5666, HG-2476, HG-7923, HI-6714, HJ-1221, HL-1159, HN-3459, HP-5786, HX-2428, HX-2505, HZ-6908, HZ-8967, JC-5555, JD-3261, JI-0809, JJ-6005, JN-3617, JN-3634, JQ-6321, JS- 6428, JU-0205, JU-8667, JV-5923, JW-5501, JX-3929, JY-8630, JZ-6196, KA-5433, KA-9392, KB-2170, KD-8109, KE-6470, KG-0629, KG-5194, KI-3651, KJ-2370, KP-3554, KP-3759, KP-7444, KR-4730, KU-8070, KV-5777, KW-1666, KY-4352, KY-7720, KY-9388, LA-0461, LA-0627, LD-7253, LH-8990, LJ-9456, LK-7427, LM-3891, LN-1793, MB-4984, MC-9615, MI-4169, MR-2246, MT-7317, MX-9628, NA-3564, NB-6565, NC-9218, PA-5638, PB-2129, PB-4451, PB-5150, PC-3659, PH-9049, PI-7088, PP-3704, PP-7398, PP-9762, PQ-1155, PQ-7793, PR-4904, PU-3886, PV-9830, PX-3319, QA-2770, QA-3785, QB-2984, QD-0446, QD-3170, QH-1398, QI-3840, QQ-9277, RC-0831, RV-7833, SO-8737, TG-4344, TJ-6652, TJ-6657, TS-0102, TS-0104, TS-0106, TS-1827, TU-6152, TX-7003, TX-7011, UD-0540, UJ-0512, UI-5346, UL-3943, UQ-7669, VE-9396, VI-5934, VO-3014, VO-3186, VS-7059, VV-4674, VX-1360, WB-0650, WB-8000, WC-0992, WG-9436, WO-5352, WR-3777, WR-3781, WW-4620, XC-8969, XF-2338, XG-9333, XL-4086, XM-8580, ZA-9459.** (5)

# மதுபோதையில் சாரத்தியம் ரூ.26ஆயிரத்து 500 அபராதம்

(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் வாகனம் செலுத்திய மூவருக்கு சாவகச்சேரி நீதவான் நீதிமன்றம் 26 ஆயிரத்து 500 ரூபாய் அபராதம் விதித்தது. சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மதுபோதையில் உந்துருளியைச் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் மூவருக்கெதிராக சாவகச்சேரிப் போக்குவரத்துப் பொலிஸாரால் கடந்த வெள்ளிக்கிழமை வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு விசாரணையின் முடிவில் குற்றவாளி இருவருக்கும் தலா 9 ஆயிரத்து 500 ரூபா வீதமும் ஒருவருக்கு 7 ஆயிரத்து 500 ரூபாவும் நீதிமன்ற அபராதம் அறவிடப்பட்டது. (5-10-114)

# ஆளுநரின் செயலாளராகப் பொறுப்பேற்பு



வட மாகாண ஆளுநரின் செயலாளராக எஸ்.சத்தியசீலன் நேற்றுக்காலை ஆளுநர் செயலகத்தில் தனது கடமைகளை உத்தியோக பூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டார். (5-10)

# அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோட்டை ஸ்ரீ முனீஸ்வரன் தேவஸ்தான மணவாளக் கோல அலங்கார உற்சவம் நாளை 3 ஆம் திகதி புதன் கிழமை ஆரம்பமாகி 28 நாட்கள் நடைபெறும்.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை இரதோற்சவமும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (5)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சரவணை பள்ளம்புலம் அருள்மிகு முருகமூர்த்தி திருக்கோவில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 11 தினங்கள் நடைபெறும்.

இம் மஹோற்சவத்தில் எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் இரதோற்சவமும் மறுநாள் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் தீர்த்தோற்சவமும் இடம் பெறவுள்ளன. (5)

# நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். வணிகர் கழகத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் கடந்த சனிக்கிழமை வணிகர் கழக பணிமனையில் நடைபெற்றது.

இதில் தலைவராக இ.ஜனக்குமார், உப தலைவராக இ.ஜெயசேகரன், செயலாளராக சி.கேசவன், உபசெயலாளராக ச.சிவலோகேசன், பொருளாளராக சு.தினேசன் ஆகியோர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் 14 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (5)

# ஹெரோயின் வைத்திருந்த சந்தேக நபருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் நபரொருவரை எதிர்வரும் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி நீதவான் உத்தரவிட்டார்.

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டவருக்கு எதிராக கடந்த 29 ஆம் திகதி சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டபோதே நீதவான் இவ் உத்தரவைப் பிறப்பித்தார். (5-10-114)



கம்பரெலிய திட்டத்தின் கீழ் யாழ். பாராளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராஜாவின் நிதியொதுக்கீட்டில் கொட்டடி கற்குளம் வீதிப்புனரமைப்பு ஆரம்ப நிகழ்வு அண்மையில் மாநகர சபை உறுப்பினர் கலாநிதி நா.தனேந்திரன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராஜா, யாழ்.மாநகர சபை முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் இந்து மகா வித்தியாலயத்தின் மாணவர் உந்துருளித் தரிப்பிடத் திறப்பு விழா நாளை 3 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணியளவில் ஆவரங்கால் இந்து தமிழ் விருட்சத்தின் தலைவர் செ.தவராஜசிங்கம் தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் நா.சிவநேசன் கலந்து கொள்வார். (5-10-134)



கோப்பாய் பிரதேச சர்வோதய தேசோதய சபையின் ஏற்பாட்டில் மருத்துவ முகாமும் கண்ணாடி வழங்கல் நிகழ்வும் கடந்த வாரம் கோப்பாய் சமுர்த்தி வங்கியில் இடம்பெற்றது. இ.மயில்வாகனம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கோப்பாய் பிரதேச் செயலர் திருமதி.ம.சுபாஜினி, வலி.கிழக்கு பிரதேச சபை தவிசாளர் நிரோஸ் ஆகியோர் கலந்து கொண்டு மூக்குக் கண்ணாடிகள் வழங்கினர். (படங்கள்:- மயில்வாகனம்)

# கொழும்பில் ஆயுதத் தொழிற்சாலை பொலிஸாரால் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

கொழும்பில் இரகசியமான முறையில் நடத்திச் செல்லப்பட்ட ஆயுதத் தொழிற்சாலை ஒன்று பொலிஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

எல்பிட்டிய - நுகேகொட பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போது தொழிற்சாலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை சுட்டிக்காட்டி சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கஜார் என்ற பெயரில் இந்தத் தொழிற்சாலை இயங்கியுள்ளது. இங்கு துப்பாக்கிகள் தயாரிக்கும் பொருட்கள் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளன.

இதன்போது சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர் எதிர்வரும் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கு மாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பந்தேகம பிரதேசத்தை சேர்ந்த 35 வயதான நபரே இவ்வாறு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

காணொலியைப் பார்த்து ஒவ்வொரு துப்பாக்கியையும் வடிவமைக்கும் திறமை சந்தேக நபர் கொண்டிருந்ததாக பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

சந்தேக நபர் நவீன ரக துப்பாக்கிகளை இணையத்தளங்களை பார்வையிட்டு தயாரித்தமை பொலிஸாரினால் உறுதி செய்யப்பட்டுள்ளது.

பாடசாலைக் கல்வியைப் பெற்றிருக்காத குறித்த சந்தேக நபர், கணனி பயன்பாடு மற்றும் துப்பாக்கி தயாரிப்பு தொடர்பில் அபார திறமை கொண்டிருந்தவர் என விசாரணையின் மூலம் மேலும் தெரிய வந்துள்ளது. (7)

# பள்ளிவாசலிலிருந்து சடலமொன்று மீட்பு

(பொத்துவில்)

பொத்துவில் ஜெய்கா கிராமத்தில் உள்ள பள்ளிவாசலில் இருந்து சடலமொன்று கிடைத்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றைய தினம் பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய சோதனையிட்ட போது குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட சடலத்தின் தலைப் பகுதியில் காயம் காணப்பட்டுள்ளது. இதன் காரணமாக மேலதிக சோதனைக்காக விசேட சட்ட வைத்தியரிடம் சடலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர் நேற்று காலை 4 அல்லது 5 மணியளவில் உயிரிழந்திருக்கலாம் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பள்ளிவாசலில் தொழுகையில் ஈடுபடும் நபரின் சடலமே மீட்கப்பட்டுள்ளது. குறித்த நபர் பொத்துவில் ஜெய்கா நகர் இலக்கம் 26பீ என்ற விலாசத்தில் வசித்து வருபவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (7)

## பாதுகாப்புச்சபையின் பிரதானியை விசாரணைக்கு அழைக்க தீர்மானிக்கவில்லை- ஆனந்த குமாரசிறி

பாதுகாப்புச் சபையின் பிரதானி அட்மிரல் ரவீந்திர விஜேரத்னவை பாராளுமன்ற தெரிவுக்குழு முன்னிலையில் விசாரணைக்கு அழைக்க இதுவரையில் தீர்மானிக்கவில்லை என பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிறி தெரிவித்துள்ளார்.

அட்மிரல் ரவீந்திர விஜேரத்னவை பாராளுமன்ற தெரிவுக்குழு முன்னிலையில் விசாரணைக்கு அழைக்க தயாராக இருப்பதாக வெளியான அறிக்கை தொடர்பில் கருத்து வெளியிடும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எவ்வாறாயினும் பாதுகாப்புச் சபையின் பிரதானியை பாராளுமன்ற தெரிவுக்குழு முன்னிலையில் விசாரணைக்கு அழைக்க கலந்துரையாடியதாக அவர் தெரிவித்துள்ளார்.

இருப்பினும் இது தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை என மேலும் அவர் தெரிவித்துள்ளார். (7)

# காணி அனுமதிப்பத்திரம் உள்ளவர்களுக்கு உறுதிப்பத்திரம் வழங்குவதற்குத் தீர்மானம்

## அமைச்சர் கிரியெல்ல தெரிவிப்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் அரச காணிகளில் அனுமதிப்பத்திரங்களுடன் வசிக்கும் மக்களுக்கு காணி உரிமைப் பத்திரத்தை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அது தொடர்பான சட்டமூலம் ஒன்றைப்பாராளுமன்றத்தில் சபை முதல்வரும்அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல சமர்ப்பித்துள்ளார்.

இச்சட்டமூலம்முழு நாட்டிற்கும் உரிய வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1920 களில் இருந்து அரச காணிகளில் வசிப்பவர்கள் காணி உரிமைப் பத்திரமின்றி அனுமதிப்பத்திரங்களையே வைத்துள்ளனர். இவர்களுக்கு வங்கிக் கடன்களைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை உள்ளது.

மேற்படி காணிகளைத் தமது பிள்ளைகளுக்கும் பெற்றுக் கொடுக்க முடியாத நிலை உள்ளது. அவ்வாறானவர்களுக்கு அக்காணிகளுக்கான காணி உரிமைப் பத்திரங்களை வழங்குவது இச் சட்டத்தின் நோக்கமாகும்.

25 இலட்சம் மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் இந்த திட்டம் முன்னெடுக்கப் படவுள்ளதாகவும் அமைச்சர் கிரியெல்ல மேலும் தெரிவித்தார். (7)



## கல்முனையிலும் நடைபெற்ற போதைப்பொருள் நிகழ்ச்சித் திட்டம்



(கல்முனை)

போதையிலிருந்து விடுதலையான தேசம் எனும் நிகழ்ச்சித் திட்டம் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வழிகாட்டலில் போதைப்பொருள் ஒழிப்பு ஜனாதிபதி செயலணியின் நெறிப்படுத்தலின் கீழ் இந்நிகழ்ச்சித் திட்டம் பல்வேறு கட்டங்களாக அமுல்படுத்தப்பட்டுள்ளது.

கல்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் கணேஸ்வரனின் பங்குபற்றலுடன் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை உளநலப்பிரிவு தொற்றா நோய்த்தடுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.ஐ.எம்.எஸ்.இர்சாத் மற்றும் பொதுச்சுகாதார பரிசோதகர்கள் இணைந்து கல்முனை நற்பிட்டிமுனை கிட்டங்கி பிரதான வீதியில் விழிப்புணர்வு செயற்றிட்டம் ஒன்றை நேற்று திங்கட்கிழமை காலை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது வீதியில் பயணம் செய்த பாதசாரிகள், ஆட்டோச் சாரதிகள், மோட்டார் சைக்கிள் சாரதிகள் ஏனைய வாகன சாரதிகள் இடைநிறுத்தப்பட்டு வீதி ஒழுங்கு முறைகள் தொடர்பான விழிப்புணர்வு செயற்திட்டங்கள் குறித்து தெளிவூட்டப்பட்டன.

மேற்குறித்த வாகன சாரதிகளுக்கு போதைப்பொருள் தொடர்பான அறிவுறுத்தல்,தலைக்கவசம் அணிதலின் ஒழுங்கு விதிகள்,தலைக்கவசத்தின் பட்டியணிதல்,சாரதிய செயற்பாட்டில் தொலைபேசி உரையாடலில் ஏற்படும் விபத்துக்கள் தொடர்பான அறிவுரைகள் யாவும் வழங்கப்பட்டு துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன. (7)

# பொலிஸ் கான்ஸ்டபிளை தாக்கிய பாராளுமன்ற உறுப்பினரின் மகனுக்கு மறியல்

பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரை தாக்கியமை தொடர்பில் கைது செய்யப்பட்ட ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சாந்த சிசிர அபேசேகரவின் மூத்த மகனை விளக்கமறியலில் வைக்க உத்தர விடப்பட்டுள்ளது.

நாளை மறுதினம் 4 ஆம் திகதி வரையில் குறித்த நபரை விளக்கமறியலில் வைக்குமாறு சிலாபம் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த நபர் நேற்று சிலாபம் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்ததை அடுத்து கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார். தாக்குதலுக்குள்ளான பொலிஸ் கான்ஸ்டபிள் தொடர்ந்தும் சிலாபம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

பாராளுமன்ற உறுப்பினரின் வீட்டில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த போது ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தின் காரணமாக பாராளுமன்ற உறுப்பினரின் மகன் பொலிஸ் கான்ஸ்டபிள் மீது தடியினால் தாக்குதல் நடத்தியுள்ளார்.

அமைச்சர்களின் பாதுகாப்புச் சேவையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் சுசந்த அருணகுமார என்பவரே இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார். தாக்குதலுக்குள்ளான பொலிஸ் கான்ஸ்டபிள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிலாபம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

பின்னர் இது தொடர்பில் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாந்த சிசிர அபேசேகரவும் சிலாபம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றை செய்துள்ளார். சம்பவம் தொடர்பில் சிலாபம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (7)

# ஹிருணிகா பங்கேற்கவிருந்த நிகழ்ச்சியை தடுத்து நிறுத்திய ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு)

தொலைக்காட்சியொன்றில் நடைபெறவிருந்த நிகழ்ச்சியில் தாம் பங்கேற்பதனை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தடுத்து நிறுத்தியதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர குற்றம் சுமத்தியுள்ளார்.

அரசாங்க தொலைக்காட்சியின் அரசியல் நிகழ்வு ஒன்றில் பங்கேற்பதற்கே ஜனாதிபதி தடை ஏற்படுத்தியிருந்தார் எனக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை சுட்டிக்காட்டி ஆங்கில ஊடகமொன்று நேற்றையதினம் செய்தி வெளியிட்டுள்ளது. அந்த செய்தியில் மேலும்,

தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக தமக்கு அழைப்பு விடுக்கப்பட்டதாகவும், பின்னர் இறுதி நேரத்தில் தம்மை அந்த நிகழ்ச்சியிலிருந்து நீக்கியதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், ஜனாதிபதியின் நேரடித் தலையீட்டின் கீழ், தம்மை இந்த நிகழ்ச்சியில் பங்கேற்க செய்யும் சதித்திட்டம் அமுல்படுத்தப்பட்டதாகவும், தொலைக்காட்சி சேவைக்கு தொலைபேசி அழைப்பினை ஏற்படுத்தி ஜனாதிபதி இந்த உத்தரவினை பிறப்பித்திருந்தார் எனவும் ஹிருணிகா தெரிவித்துள்ளதாக அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (7)



# மலையகத் தோட்டத்தொழிலாளர்களுக்கு 50 ரூபாய் சம்பளக் கொடுப்பனவையும் நான் பெற்றுக் கொடுப்பேன்-வடிவேல் உறுதி

மலையகத்தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வை பெற்றுக் கொடுத்தது போல் 50 ரூபாய் சம்பளக் கொடுப்பனவையும் எனது அமைச்சின் ஊடாகப் பெற்றுக் கொடுக்கத் துரித நடவடிக்கை எடுப்பேன் என பெருந்தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஸ் தெரிவித்தார்.



குறித்த வாரத்திற்குள் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 50 ரூபாய் சம்பள கொடுப்பனவு தொடர்பான தீர்மானம் எட்டப்படும். இதற்கான துரித நடவடிக்கைகள் என்னால் முன்னெடுக்கப்படும். இந்த கொடுப்பனவு எனது அமைச்சின் இலங்கை தேயிலை சபையின் ஊடாகவே வழங்கப்படவுள்ளது.

பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் நவீன் திஸாநாயக்க வெளிநாடு சென்று தற்போது நாடு திரும்பியுள்ளார். இனி இது தொடர்பான பேச்சுவார்த்தைகளும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும். நான் சம்பள உயர்வை பெற்றுக் கொடுத்தேனோ அதேபோல் இதனையும் எனது அமைச்சின் ஊடாக பெற்றுக் கொடுப்பேன் என பெருந்தோட்ட கைத்தொழில் இராஜாங்க அமைச்சரும் இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கத்தின் பொது செயலாளருமான வடிவேல் சுரேஸ் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பதுளை மாவட்டம் ஹாலிஎல ஊவுஜலண்ஸ் தோட்டம் பாடசாலை வீதி பன்முகப்படுத்தபட்ட நிதி மூலம் செப்பனிடப்பட்டு மக்களிடம் கையளிக்கும் நிகழ்விற்கு விருந்தினராகக் கலந்து கொண்டு அங்கு மக்கள் மத்தியில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன் போது தோட்ட ஆலய புனரமைப்பிற்கான நிதி ஒதுக்கீட்டுக் கடிதமும் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

தொடர்ந்து பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர்,

பட்ஜெட்டில் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு நாள் சம்பளத்தில் அதிகரிக்கப்பட்ட 50 ரூபா சம்பள அதிகரிப்பை மேற்கொள்ள வேண்டும் என மலையகத்தின் ஏனைய தலைமைகள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க இந்த கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.


இந்தக் கொடுப்பனவை வழங்க அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்த போதும் எனது அமைச்சின் கீழ் இயங்கும் தேயிலை சபையின் ஊடாகவே வழங்கப்படும். அதனால் இந்தக் கொடுப்பனவை வழங்க என்னால் ஆன அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படும் என மேலும் உறுதிபடத் தெரிவித்தார். (7)

# ஹிஸ்புல்லாவை பாதுகாக்க முயற்சிப்பது நியாயமற்றது

## காவிந்த ஜெயவர்த்தன கூறுகிறார்

(கொழும்பு)

நிதிச் சுத்திகரிப்பு சட்டமூலத்தினூடாக மட்டக்களப்பு பல்கலைக்கழக தனியார் நிறுவனத்துக்கு எதிராக விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இந்த நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கென கைமாற்றப்பட்டுள்ள நிதி தொடர்பில் பரந்துபட்ட விசாரணைகள் அவசியமானதாகும். முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லா, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் என்பதற்காக அவரைப் பாதுகாக்க முயற்சிப்பது நியாயமற்றது என்று ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜெயவர்த்தன தெரிவித்தார்.



நீர்கொழும்பு பிரதேசத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு கெம்பஸ் தனியார் நிறுவனம் சட்டத்துக்கு முரணானதாகும். நிதி சுத்திகரிப்பு சட்டமூலத்தினூடாக இந்த நிறுவனத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும். இன்று அது உறுதிப்படுத்தப்பட்டும் உள்ளது.

ஆகவே இந்த தனியார் நிறுவனம் தொடர்பில் விசாரணைகள் முறையாக இடம்பெற்றனவா என்ற பிரச்சினையும் எமக்குள்ளது. இந்த நிறுவனத்தின் நிர்வாக நடவடிக்கைகளுக்கென வெளிநாட்டிலிருந்து 3 பில்லியன் ரூபா நிதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

வேலைவாய்ப்புக்களுக்காக வெளிநாடு சென்று தொழில் புரியும் தொழிலாளி சேகரித்த பணத்தை இங்கு அனுப்பும் போது, அந்த பணம் தொடர்பில் பல்வேறு விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அவ்வாறு இருக்கையில் இந்த நிறுவனத்துக்கு என பரிமாற்றப்பட்டுள்ள நிதி தொடர்பில் விசாரணைகள் மேற்கொண்டிருக்க வேண்டும். எதற்காக இந்தப் பணம் இங்கு வந்தது, எவ்வாறு திரட்டப்பட்டது, பயங்கரவாத செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்டதா? என்பது குறித்து முக்கிய அவதானம் செலுத்தியிருக்க வேண்டும்.

அந்த விசாரணைகளின் அறிக்கை குற்றப்புலனாய்வு பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்க வேண்டும். குற்றப்புலனாய்வுப் பிரிவு இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்திருக்க வேண்டும். ஆனால் இந்த நடைமுறைகள் முறையாக இடம்பெற்றனவா? என்பதில் எமக்கு சந்தேகம் எழுந்துள்ளது.

சட்டம் ஒழுங்கு அமைச்சு தற்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பொறுப்பிலேயே உள்ளது. எனவே மட்டக்களப்பு கெம்பஸ் தனியார் நிறுவனம் தொடர்பில் பரந்துபட்ட விசாரணைகளை முன்னெடுப்பது அவசியமாகும். ஜனாதிபதி இது தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டும். ஹிஸ்புல்லா ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் உறுப்பினர் என்பதற்காக அவரைப் பாதுகாக்க முயற்சிப்பது நியாயமற்றதாகும் என மேலும் தெரிவித்தார். (7)

# ஆசிரியர் பதவி வெற்றிடங்கள் இரு மாத காலத்தில் நிரப்பப்படும்

## மேல்மாகாண கல்விப் பணிப்பாளர் அறிவிப்பு

(கொழும்பு)

மேல் மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்கள் இரண்டு மாதக்காலப்பகுதிக்குள் நிரப்பப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேல்மாகாணக் கல்விப் பணிப்பாளர் சிறிலால் நோனிஸ் தெரிவித்துள்ளார்.

மேல் மாகாணத்தில் ஆசிரிய வெற்றிடங்களுக்காக பட்டதாரிகளை இணைத்துக் கொள்ளும் போட்டிப் பரீட்சை கொழும்பு, களுத்துறை, கம்பஹா மாவட்டங்களிலுள்ள 13 மத்திய நிலையங்களில் நடைபெற்றது.

இதில் 3500 பேர் தோற்றியிருந்தனர். மேல் மாகாண அரச சேவை ஆணைக்குழு மற்றும் மேல் மாகாண கல்வித் திணைக்களம் இணைந்து இந்தப் போட்டிப் பரீட்சையை நடத்தியிருந்ததாக மேலும் அவர் தெரிவித்தார். (7)

# பொலிஸ் நிலையங்களில் 24 மணி நேர அம்புலன்ஸ் சேவை




மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 8 பொலிஸ் நிலையங்களில் பொது மக்கள் சேவையாக 24 மணி நேர அவசர அம்புலன்ஸ் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வீதிப் போக்குவரத்து, மின்சாரம், தீ, நீரில் மூழ்குதல், நஞ்சு போன்றவற்றால் ஏற்படக் கூடிய விபத்துச் சம்பவங்களின்போது பொதுமக்களுக்கு உதவுவதற்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் 24 மணிநேர அவசர உதவு அம்புலன்ஸ் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதனடிப்படையில் வாகரை, வாழைச்சேனை, கரடியனாறு, ஏறாவூர், மட்டக்களப்பு, காத்தான்குடி, கொக்கட்டிச்சோலை, வவுணதீவு ஆகிய 8 பொலிஸ் நிலையங்களில் மக்களின் அவசர சேவைக்காக இந்த அம்புலன்ஸ் வண்டிகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

விபத்துச் சேவைகளுக்காக உதவி தேவைப்படும் பொதுமக்கள் 1990 என்ற சேவை இலக்கத்தினூடாகவோ அல்லது அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களின் ஊடாகவோ தொடர்பு கொண்டு அவசர உதவி அம்புலன்ஸ் சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

விபத்துச் சேவைகளுக்கு மேலதிகமாக திடீரென ஆபத்தான நோய்கள் ஏற்படும்பொழுதும் இந்த அவசர அம்புலன்ஸ் சேவையை நாட முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (7)

# தாய் மீது கொடூரமாக கல் வீச்சு தாக்குதல்

இரத்தினபுரியில் நீர் பிரச்சினைக்காக 2 பிள்ளைகளின் தாய் மீது கல் வீச்சு தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தும்பர பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த பகுதியில் ஏற்பட்டுள்ள குடிநீர் பிரச்சினை காரணமாக மக்களுக்கு இடையில் மோதல் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் அதிகரித்துள்ளன.

இந்நிலையில் இரண்டு தரப்பிற்கு இடையில் ஏற்பட்ட மோதல் ஒன்று நீண்ட தூரம் சென்றுள்ளது. இதன்போது இரண்டு பிள்ளைகளின் தாய் ஒருவரை கல்லால் தாக்கி பாரிய காயம் ஏற்பட்டதுடன் வீடு மற்றும் சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது.

இதனுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்த தாயார் தெல்தெனிய மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (7)

# அபிவிருத்தியை நோக்கிய தூரநோக்கில் இளைஞர், யுவதிகளின் ஈடுபாட்டை அதிகரிக்கும் தகவல் பரிமாற்ற பயிற்சி நெறி




(முல்லைத்தீவு)

அபிவிருத்தியை நோக்கிய தூரநோக்கில் தகவல் பரிமாற்றத்தினூடாக இளைஞர், யுவதிகளின் ஈடுபாட்டை மேம்படுத்தும் பயிற்சி நெறி விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் (**Viluthu Centre for Human Resource Development**) ஒழுங்கமைப்பில் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் சமூக இணைப்பு அலுவலர் வி.தீபாகர் தலைமையில் முல்லைத்தீவு வள்ளிபுனம் பொதுநோக்கு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இப்பயிற்சி நெறியில் முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை, உடையார்கட்டு, வள்ளிபுனம், மாணிக்கபுரம், தேவிபுரம், கைவேலி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சுமார் 30 இளைஞர்.யுவதிகள் பங்குபற்றியிருந்தார்கள்.

நவீன தொடர்பாடல் வசதிகளை குறிப்பாக சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி பிரதேச மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் தேவைகளையும் காத்திரமான முறையில் முன்வைத்து தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதற்கு முயற்சித்தல்.

பிரதேச அபிவிருத்தியை மேற்கொள்ளத் தேவையான மனப்பாங்குகளையும் பெறுமானங்களையும் அர்ப்பணிப்புக்களையும் இளைஞர்.யுவதிகள் வளர்த்துக் கொள்ளல் உள்ளிட்ட விடயங்களில் பயிற்சி நெறிகள் வழங்கப்பட்டன.

தகவல் தொழில் நுட்பத்தினூடாக பல்வேறு அபிவிருத்திகளைத் துரிதமாக மேற்கொள்ள முடியும் என்பது சாத்திய மாகியுள்ள இக்காலகட்டத்தில் யுத்தத்தால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் தீர்க்கப்படாத, கண்டு கொள்ளப்படாத ஏராளமான பிரச்சினைகள் இன்னமும் இருப்பதாக பயனாளிகள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக, யுத்தம் முடிவடைந்து ஒரு தசாப்த காலம் கடந்துள்ள போதும் இழப்பீடுகள் இன்னமும் முறைப்படி கிடைக்காமை, பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் எதிர்கொள்ளும் வாழ்வாதாரப் பிரச்சினைகள், வீதிகள் புனரமைக்கப்படாமை, அதிகரித்து வரும் போதைப் பொருள் பாவனை, சட்டவிரோத காடழிப்பு, மணல் அகழ்வு உள்ளிட்ட இன்னும் பல பிரச்சினைகள் சுட்டிக்காட்டப்படுகின்றன.

இப்பயிற்சி நெறியில் சமூக ஆய்வாளரும் எழுத்தாளருமான ஏ.எச்.ஏ.ஹூஸைன்வளவாளராக் கலந்து கொண்டார். (9)

# ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் மக்கள் முடிவின் பின்னரே எமது முடிவு

## செல்வம் எம்.பி

(குருமன்காடு)

ஜனாதிபதி தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது குறித்து மக்களின் முடிவின் பின்னரே எமது முடிவு என குழுக்களின் பிரதித் தலைவரும், வன்னிப் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எங்களைப் பொறுத்தவரை கடந்த இரண்டு ஜனாதிபதித் தேர்தல்களும் மக்கள் முடிவெடுத்த பின்பு தான் நாங்கள் அந்த முடிவுக்கு தள்ளப்பட்டோம். அதே போல் தான் அடுத்த ஜனாதிபதி குறித்தும் மக்கள் ஒரு முடிவுக்கு வருவார்கள். அதன் பின் நாம் சரியான முடிவை எடுக்க முடியும். இப்பொழுது தென்னிலங்கையில் இருக்கின்ற சிங்கள கட்சிகள் யாரை வேட்பாளராக நியமிப்பது என்ற பிரச்சினையில் உள்ளார்கள்.

அதன்பின் மக்கள் எடுக்கின்ற தீர்மானத்தின் அடிப்படையிலேயே எங்களது முடிவுகள் அமையும். பொறுத்திருந்து மக்களுடைய செயற்பாட்டுடன் ஒத்துப் போகின்ற ஒரு முடிவையே நாம் எடுப்போம் என தெரிவித்தார். (9-250)

# வடமராட்சியிலிருந்து மடுவுக்கு யாத்திரை

(கண்டாவளை)

யாழ்.வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டிலிருந்து 150 இக்கும் மேற்பட்ட யாத்திரிகர்கள் நட்டாங்கண்டலிலிருந்து பாலம்பிட்டி ஊடாக மடுநோக்கி சென்றுள்ளனர்.

மன்னார் மடுத்தேவாலயத்தின் ஆடிமாதத்திருவிழா இன்று நடைபெறவுள்ள நிலையில் யாழ். வட மராட்சி கிழக்கு கட்டைக்காடு கப்பலேந்தி மாதா பங்குக் குட்பட்ட சுமார் 150 இற்கும் மேற்பட்ட பக்தர்கள் ஆலயத்திலிருந்து புறப்பட்டு ஆனையிறவு ஏ-9 பாதையூடாக கொக்காவில் சந்தையைச்சென்றடைந்து அங்கிருந்து ஐயன்கன்குளம், தேறாங்கண்டல், மல்லாவி ஊடாக நட்டாங்கனர்டலைச் சென்றடைந்து நட்டாங்கண்டலிலிருந்து பாலம்பிட்டி ஊடாக மடுவிற்கு இவ்வாறு யாத்திரிகர்கள் சென்றுள்ளனர்.

நட்டாங்கண்டலிலிருந்து பாலம்பிட்டி வரை சென்ற யாத்திரிகர்கள் குறித்த பாதையானது சுமார் 19 கிலோ மீற்றர் நீளமான தூரம் காட்டுப் பாதை யாகவும் மக்கள் பயணிப்பதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டதாக தெரிவித்துள்ளனர். (9-315)

# இராணுவத்தின் இன்னிசை நிகழ்வு

இலங்கையில் கடந்த ஈஸ்டர் தினத்தன்று இடம்பெற்ற தற்கொலைத்தாக்குதல் சம்பவத்தையடுத்து அச்சம்பவத்திலிருந்து மக்களை மீண்டு பழைய நிலைக்குத் திரும்பவும் இனங்களுக்கிடையே ஏற்படுத்தப்பட்ட பிரிவினையை முற்றாக மாற்றிக் கொள்ளும் நோக்கிலும் வவுனியா வாழ் மக்களை மனதளவில் மகிழ்ச்சிப்படுத்தும் நோக்கிலும் இலங்கை இராணுவத்தின் 56 படைப்பிரிவின் ஏற்பாட்டில் அக்கினி இசைக்குழுவின் இன்னிசை இரவு எதிர்வரும் சனிக்கிழமை நகரசபை திறந்த மைதானத்தில் வர்த்தகர் சங்கம், வவுனியா முஸ்லிம் பள்ளிவாசல்களுடன் இணைந்து நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நகரசபை திறந்த மைதானத்தில் இலவசமாக மேற் கொள்ளப்படும் இன்னிசை நிகழ்வு தமிழ், முஸ்லிம், சிங்கள ஆகிய இனங்களுக்கிடையே ஒற்றுமையையும் ஏற்படுத்த இந்த இன்னிசை நிகழ்ச்சி உதவும் என இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். (9-299)

# புகையிரதம் மோதி பெண் பலி

செட்டிகுளம் மெனிக்பாம் பகுதியில் புகையிரதம் மோதியதில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று அதிகாலை மன்னாரிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற புகையிரதம் மோதியதில் செட்டிகுளம் பகுதியைச் சேர்ந்த நாகமணி தனலஷ்மி (வயது 65) என்பவரே உயிரிழந்துள்ளார்.

செட்டிகுளம் பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்(9-299)

# குறை'களை' பதிகம் 54

## முன்னோர்கள் விட்ட நம் அடையாளங்கள்

*தமிழர் தம் பண்பாடு அத்தனையும்*
*அழிந்து போகுதையா*
*யார் அறிவார் பராபரமே*
*வண்டியில் விளம்பரம் வாகனங்கள் பல திரிய*
*எங்கள் முன்னோர்கள் சேர்த்து வைத்த*
*பொக்கிசங்களை ஏற்றிச்செல்ல*
*ஒரு கூட்டம் திரியுதப்பா*
*யாரும் அதைத் தெரியாமல்*
*வீட்டை விட்டு அகற்றுவதற்கு*
*எதிர்பார்த்து நிற்கின்றோம்*
*பாட்டன் செய்து வைத்த சிற்பம் செதுக்கிய அலுமாரி*
*பூட்டப்பா படுத்த கட்டில்*
*பாட்டி கட்டிய சரிகைச்சாறி*
*அதுமட்டுமா அப்பா படுத்த*
*பிள்ளைத் தொட்டில்*
*பூட்டிப்பேத்தி கட்டிய காக்கொலுசு*
*இவையனைத்தையும் விட*
*எங்கள் முன்னோர்கள்*
*எதிர்கால சந்ததிக்காய்*
*இன்றைய தலைமுறைக்காய்*
*எழுதிய புத்தகங்கள்*
*பழைய புத்தகங்கள் எழுதிய கொப்பிகள்*
*இவையனைத்தும் பழையனவாசற்றுச்*
*சிந்தித்துப்பாருங்கள்*
*முன்னோர்கள் சேர்த்துவைத்த*
*தமிழர் தம் அடையாளங்களை*
*அழிவிலிருந்து பாதுகாக்க*
*விழிப்பூட்டும் அமைப்பு உருவாகட்டும்*
*பிளாஸ்ரிக், தகரம் என்று கூறி வருகின்ற*
*வியாபாரிகளிடம் விலைமதிக்கமுடியாத*
*பொருட்களை அற்ப பணத்திற்காய்*
*முப்பாட்டன் சேர்த்த சொத்துக்களை*
*அழிக்க நினைக்காதீர்*
*இன்றைய தலைமுறையே நாளைய எதிர்காலம்*
*நினைவுகள் இருக்கும் வரை எம் இன*
*அடையாளத்தை யாராலும்*
*அழித்துவிட முடியாது*

வி.விஜிதரன்

அன்பு வாசகர்களே!

இப்பகுதியில் வெளிவரும் குறை 'களை' பதிகத்திற்கு நீங்களும் உங்கள் பகுதிகளில் உள்ள குறைகளை பதிகமாக எழுதி ஆசிரியர், குறை 'களை' பதிகம், வலம்புரி, இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். (ஆ-ர்)

# பாரவூர்திகள் விபத்து; ஒருவர் படுகாயம்




(பரந்தன்)

கிளிநொச்சி பரந்தன் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தென்னிலங்கையிலிருந்து பொருட்களை ஏற்றி சென்ற பாரவூர்தியின் சக்கரத்திலிருந்து காற்று வெளியேறியதில், சடுதியாக குறித்த பாரவூர்தி நிறுத்தப்பட்டுள்ளது. குறித்த பாரவூர்திக்கு பின்புறமாக சென்ற மற்ற பாரவூர்தி பின்புறமாக மோதியதில் குறித்த விபத்து இடம் பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (9-312-315)

மன்.நானாட்டானில்

# குறிஞ்சிநகர் மாதிரிகிராமம் திறந்து வைப்பு






தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மடுக்கரை கிராமத்தில் அமைக்கப்பட்ட 211 ஆவது மாதிரிக் கிராமமான குறிஞ்சி நகர் கிராமத்தில் அமைக்கப்பட்ட 42 வீடுகளை அமைச்சர் சஜித் பிரேமதாஸ நேற்று வைபவ ரீதியாக திறந்து வைத்தார்.

2025 ஆம் ஆண்டில் யாவருக்கும் வீடு பெற்றுக் கொடுக்கும் நோக்கில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் நாடளாவிய ரீதியில் நடை முறைப்படுத்தப்பட்டு வரும் குறித்த திட்டத்திற்கு அமைவாக நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மடுக்கரை கிராமத்தில் அமைக்கப்பட்ட 211 ஆவது மாதிரிக் கிராமமான "குறிஞ்சி நகர்" கிராமத்தில் அமைக்கப்பட்ட வீடுகள் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டுள்ளன.

மன்னார் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் ஜெ.நோயல் ஜெயச்சந்திரன் தலைமையில் இடம் பெற்ற குறித்த நிக



ழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் சி.ஏ. மோகன்ராஸ்,பிரதேசச் செயலாளர்கள், வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சஜித் பிரேமதாஸ, நானாட்டான் பிரதேச சபையின் தலைவர் திருச் செல்வம் பரஞ்சோதி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹூனைஸ் பாரூக், ஐக்கிய தேசியக் கட்சியின் மன்னார் மாவட்ட அமைப்பாளர் அப்துல் சமீயு முஹம்மது பஸ்மி, முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன், உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அதனைத்தொடர்ந்து அங்கு இடம் பெற்ற நிகழ்வில் மன்னார் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையில் கடமையாற்றிய இருவருக்கு நிரந்தர நியமனம் வழங்கி வைக்கப்பட்டதோடு, தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு மூக்குக் கண்ணாடிகள் , சுய தொழில் உபகரணங்கள், கடன் திட்டம் ஆகியவை அமைச் சரினால் வழங்கி வைக்கப்பட்டன. (9-285)




# பொலிஸ் உத்தியோகத்தர்களை இணைப்பதற்கான நேர்முகத்தேர்வு



வட - கிழக்கு மாகாணத்தில் இளைஞர்,யுவதிகளை பொலிஸ் திணைக்களத்தில் இணைத்துக் கொள்வதற்கான ஆரம்ப நேர்முகத் தேர்வு நேற்று வவுனியா கண்டி வீதியிலுள்ள பொலிஸ் கட்டட தொகுதியில் இடம் பெற்றது.

பொலிஸ் திணைக்களத்தில் நிலவும் தமிழ் பொலிஸாரின் குறைபாட்டை நிவர்த்தி செய் யும் முகமாக குறித்த நேர் முகத் தேர்வு இடம்பெற்றிருந் தமை குறிப் பிடத்தக்கது.

இதுவரை காலமும் பொலிஸ் திணைக்களத்தின் ஆட்சேர்ப்பு நேர்முகத் தேர்வுகள் தென்னிலங்கையிலேயே இடம்பெற்று வந்த நிலையில்,

தற்போது இந்த நேர்முகத் தேர்வுகள் வடமாகா ணத்தின் மத்திய இடமான வவு னியாவில் நடைபெற்று வருவ துடன் தெரிவு செய்யப்படு பவர்க ளுக்கான ஆரம்ப பயிற்சி முகா மும் வட மாகாணத்திலேயே இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக் கது. (9-299)

'போதையற்ற தேசம் ஒன்றில் அடிவைப்போம்'

# வவுனியாவில் போதை ஒழிப்புப் பேரணி








(வவுனியா)

வவுனியா கண்டி வீதியிலுள்ள பௌத்த விகாரையிலிருந்து நேற்று ஆரம்பமான போதை ஒழிப்புப் பேரணி கண்டி பிரதான வீதி வழியாக மணிக் கூட்டு வீதி வழியாக திரும்பவும் பௌத்த விகாரையைச் சென்றடைந்தது.

சிவில் பாதுகாப்புப் படைப்பிரிவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற போதை ஒழிப்புப் பேரணியில் சிவில் பாதுகாப்புப் படையினர், பொலிஸார், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் என 500 ற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

குடி குடியைக் கெடுக்கும், பாலகரை குடி என்கின்ற பாதாளத்தில் தள்ளாதே, போதை அற்ற தேசத்தில் வாழ்வோம், போதை பொருளற்ற நாட்டைக் கட்டியெழுப்புவோம், மதுவிலிருந்து வாலிபரைப் பாதுகாப்போம் போன்ற போதை ஒழிப்பு எதிர்ப்பு பதாகைகளைத்தாங்கியவாறு பேரணியில் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதி செயலகத்தின் ஏற்பாட்டில் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் போதை ஒழிப்பு வேலைத் திட்டத்தின் ஓர் அங்கமாக இப் போதை ஒழிப்பு பேரணி இடம் பெற்றது. (9-299)

# ஐயன்கன்குளம் வைத்தியசாலையின் வைத்தியர் விடுதிக்கான அடிக்கல் நாட்டல்



(கண்டாவளை)

முல்லைத்தீவு ஐயன்கன்குளம் வைத்தியசாலையின் வைத்தியர் விடுதிக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று பகல் இடம் பெற்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மிகவும் பின்தங்கிய பகுதியாக காணப்படும் புத்துவெட்டுவான், பழையமுறிகண்டி, ஐயன்கன்குளம் போன்ற பகுதிகளில் வாழும் மக்களுக்கான மருத்துவ தேவைகளை வழங்கும் வைத்தியசாலையாக காணப்படும் ஐயன்கன்குளம் வைத்தியசாலையின் வைத்தியர்கள் தங்குவதற்கான வசதிகள் இல்லாத நிலை காணப்படுகின்றது.

இந்நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராசாவின் நிதியொதுக்கீட்டின் 7.5 மில்லியன் ரூபா செலவில் இவ்வைத்திய சாலைக்கான வைத்தியர் விடுதி அமைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா, முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் எம்.உமாசங்கர், துணுக்காய் பிரதேசச் செயலர் பிரபாகரமூர்த்தி மற்றும் வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (9-315)

வடக்கு கிழக்கு மாகாண

# வர்த்தக கைத்தொழில் சம்மேளன ஒன்றுகூடல்



வடக்கு- கிழக்கு மாகாணங்களுக்கான வர்த்தக கைத்தொழில் சம்மேளனத்திற்கான ஒன்றுகூடல் வவுனியா மாவட்ட வர்த்தக கைத்தொழில் சம்மேளன தலைவர் கே.அமிர்தலிங்கம் தலைமையில் வவுனியாமில் வீதியில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்த ஒன்றுகூடலில் வடக்கு மற்றும் கிழக்கில் வர்த்தகர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் , எதிர் காலத்தில் எதிர்நோக்கும் சவால்கள் , வடக்கு-கிழக்கில் உள்ள வளங்கள் , வியாபார விருத்தியை எவ்வாறு மேற்கொள்வது, பொருளாதார வீழ்ச்சியை எவ்வாறு சீர் செய்வது போன்ற பல் வேறு விடயங்கள் தொடர்பாக கலந்துரை யாடப்பட்டது.

வடக்கு-கிழக்கு சம்மேளன தலைவர் ரீ.குலதீபன் இவ் ஒன்று கூடலின் ஒருங்கிணைப்பாளராக செயற்பட்டிருந்ததுடன் இதில் வடக்கு-கிழக்கு பகுதியினை சேர்ந்த வர்த்தக கைத்தொழில் சம்மேளத்தின் தலைவர்கள், உபதலைவர்கள் , செயலாளர்கள், ஒருங் கிணைப்பாளர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (9-250-299)

# ஸார்ப் கண்ணிவெடியகற்றும் நிறுவனத்திற்கு ஜப்பானிய தூதரக பிரதிநிதிகள் விஜயம்



இலங்கையின் வடபகுதியில் மனிதாபிமான கண்ணிவெடியகற்றல் செயற்பாட்டில் ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் ஈடுபடும் ஸார்ப் (SHARP) மனிதாபிமானக் கண்ணிவெடியகற்றும் அரச சார்பற்ற நிறுவனத்திற்கு இலங்கைக்கான ஜப்பானிய தூதரக பிரதிநிதி இற்றோ பியூமி உட்பட பிரதிநிதிகள் கடந்த மாதம் சென்றிருந்தார்.

அவர் ஸார்ப் நிறுவன அலுவலகம் மற்றும் முகமாலை கண்ணிவெடியகற்றும் தளம் என்பவற்றை மேற்பார்வையிட்டார். இதன் போது கண்ணிவெடியகற்றப்பட்டு கையளிக்கப்பட்ட பிரதேசங்கள்,தற்போது வேலை நடைபெறும் பிரதேசங்கள் மற்றும் எதிர்கால திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

முகமாலைப் பகுதியில் கண்ணிவெடியகற்றலில் ஈடுபடும் ஸார்ப் நிறுவனமானது 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 2019 ஜூன் மாதம் 20ஆம் திகதி வரையான காலப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள அம்பகாமம் மற்றும் தச்சடம்பன் பகுதியிலும்,கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள முகமாலையிலும் எட்டு இலட்சத்து இருபத்து ஐந்தாயிரத்து அறுநூற்று எழுபது சதுரமீற்றர் பரப்பளவில் (825,670sqm) இருந்து பதினெட்டாயிரத்து நானூற்று நாற்பத்து நான்கு (18,444) அபாயகரமான வெடிபொருட்களை அகற்றியுள்ளதாக ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வுபெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்தார்.

தற்போது நான்கு அணிகள் கண்ணிவெடியகற்றும் பணிகளை முகமாலை பகுதியில் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (9-281)

# கல்லாறுப் பகுதியில் தொடரும் சட்டவிரோத மண் அகழ்வு; மண்ணுக்காக அகிம்சை வழியில் போராட மக்கள் முடிவு

கிளிநொச்சி மாவட்டத்தில் சட்ட விரோதமாக மணல் அகழப்படும் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாகவும் பிரதானமாக கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கல்லாறு உட்பட பல்வேறு பகுதிகளில் சட்டவிரோதமாக மணல் அகழ்வு இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொள்ளையர்களிடமிருந்து மண்ணுக்காக மீண்டும் அகிம்சை வழியில் போராட வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு மக்கள் மற்றும் விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளார்கள். மண் அகழ்வு இடம்பெற்று வரும் பகுதி வனவள பாதுகாப்பு திணைக்களத்திற்கு சொந்தமான அதே வேளை, பறவைகள் சரணாலயமும் காணப்படுகின்றது. குறித்த பகுதியில் சுமார் 5 அடிக்கு மேல் தோண்டப்பட்டு மண்ணகழ்வு இடம்பெற்று வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது. குறித்த சட்டவிரோத மண் அகழ்வு தொடர்பில் பல்வேறு தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர். நாள் ஒன்றிற்கு சுமார் முப்பது கனரக வாகனங்கள் கொண்டு மணல் அகழ்ந்து வெளி மாவட்டங்களுக்கு விற்பனை செய்து வருவதாகவும் இதனால் நாளாந்தம் பாவிக்கப்படும் வீதி, பாலம் போன்றன சேதத்திற்கு உள்ளாவதாகவும் அருகில் கடல் இருப்பதனால் இவ்வாறாக மண் அகழ்வதனால் குடிநீருடன் உவர்நீர் கலப்பதற்கான வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக ஒவ்வொரு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் மற்றும் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டங்களிலும் மக்களால் பல்வேறு



கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றபோதிலும், இவ்விடயமாக எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படுவதில்லையென பொதுமக்களால் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாது அரச அதிகாரிகள் தொடக்கம் அரசியல்வாதிகள் மற்றும் பொலிஸாருக்கும் பல முறை அறிவித்தும் கூட எவ்வித நடவடிக்கையும் இடம்பெறவில்லை. எனவே இதற்கு ஒரே ஒரு தீர்வாக கிளிநொச்சி நீதவான் நீதிமன்றால் மட்டுமே இதனை நிறுத்த முடியும் எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (9-312)

## மன்னாரில் தொடர்ந்து மீட்கப்படும் பீடி இலைகள்

மன்னார்-தலைமன்னார் பிரதான வீதி ஓலைத்தொடுவாய் காட்டுப்பகுதி மற்றும் நடுக்குடா கடற்கரை பகுதிகளில் இருந்து ஒரு தொகுதி பீடி சுற்றும் இலைகளை கடற்படையினர் நேற்று முன்தினம் மீட்டுள்ளனர்.

ஓலைத் தொடுவாய் பகுதியில் உள்ள காட்டுப்பகுதிக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 126.5 கிலோ கிராம் எடை கொண்ட பீடி சுற்றும் இலைகளை கடற்படையினர் கண்டு பிடித்து மீட்டுள்ளனர்.

இதேவேளை மன்னார் நடுக்குடா கடற்கரை பகுதியில் நேற்று முன்தினம் கடற்படையினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது 988.4 கிலோ கிராம் பீடி சுற்றும் இலைகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட பீடி இலைகள் மேலதிக விசாரணைகளுக்காக யாழ்ப்பாணம் சுங்க அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஓலைத்தொடுவாய் மற்றும் நடுக்குடா பகுதிகளில் இருந்து 1114 கிலோ 9 கிராம் எடை கொண்ட பீடி சுற்றும் இலைகளை கடற்படையினர் மீட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-285)

# வவுனிக்குளத்தின் கீழான சிறுபோக செய்கைக்கு போதியளவு நீர் உள்ளது

### நீர்ப்பாசன திணைக்களம் தெரிவிப்பு

முல்லைத்தீவு வவுனிக்குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுபோகச் செய்கைக்கு விநியோகிப்பதற்கு போதியளவு நீர் இருப்பதாக பிரதி நீர்ப்பாசனப்பொறியியலாளர் ந.சிறிஸ்கந்தராஜா தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு வவுனிக்குளத்தின் கீழ் இவ்வாண்டும் மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுபோகச் செய்கைக்கு உரிய முறையில் நீர் விநியோகம் மேற்கொள்ளப்படாமையினால் தங்களுடைய பயிர்கள் அழிவடையும் நிலையில் இருப்பதாக விவசாயிகள் குற்றம் சாட்டியிருந்தனர்.

குறிப்பாக, வவுனிக்குளத்தின் கீழுள்ள செல்வபுரம் முதலாம் வாய்க்கால் இரண்டாம் வாய்க்கால் போன்ற பகுதிகளில் பெருமளவான வயல் நிலங்கள் நீர் விநியோகம் இன்றி கருகிய நிலையில் காணப்படுகின்றது.

இதேவேளை பொன்னகர், கரும்புள்ளியான் போன்ற பகுதிகளிலும் இவ்வாறு நீர் இன்றி கருகிய நிலையில் காணப்படுகின்றன. இதனால் விவசாயிகள் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், கூட்டத்தில் எடுக்கப்பட்ட அளவைவிட, அதிகளவான நிலப்பரப்பில் இப்பயிர்ச் செய்கை மேற்கொண்டுள்ளதால் இவ்வாறு நீர் நெருக்கடி ஏற்பட்டிருப்பதாகவும் விவசாயிகள் தெரிவித்திருந்தனர்.

சிறுபோகச்செய்கைக்கு உரிய முறையில் நீர் விநியோகம் மேற்கொள்ளப்படுவதில்லை என்றும் நீர் விநியோகிக்கும் உத்தியோகத்தர் குறிப்பிட்ட சில பகுதிகளில் பாரபட்சமாக நடந்து கொள்வதாலும் இவ்வாறான பாதிப்புக்கள் ஏற்படுவதாகவும் குறித்த உத்தியோகத்தரை இடமாற்றம் செய்து வேறு ஒரு உத்தியோகத்தரை நியமிக்குமாறு 200 இற்கும் மேற்பட்ட விவசாயிகள் கையொப்பமிட்ட கடிதத்தை நீர்ப்பாசனத் திணைக்களத்திடம் வழங்கவுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் வவுனிக்குளம் நீர்ப்பாசனத்திணைக்களத்திடம் தொடர்பு கொண்டு கேட்டபோது வவுனிக்குளத்தில் 6060 ஏக்கர் நிலப்பரப்பில் கால போகச் செய்கை மேற்கொள்ளப்பட்டாலும் குளத்தின் அளவைக் கொண்டு இம்முறை 3400 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோகச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் மேலதிக விதைப்புக்கள் தொடர்பில் கமநல அபிவிருத்தி திணைக்களமே நடவடிக்கை எடுக்கவேண்டும்.

குளத்தில் இருக்கின்ற நீர் சிறு போகச் செய்கைக்கு போதுமானதாக இருந்தாலும் தற்போதைய வெப்பம் காற்று காரணமாக நீரின் ஆவியாதல் தன்மை அதிகரித்துக் காணப்படுகின்றது. விவசாயிகளும் நீரைச் சிக்கனமாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அத்துடன் உத்தியோகத்தர் மீதுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்குமிடத்து அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் பிரதி நீர்ப்பாசனப்பொறியியலாளர் ந.சிறிஸ்கந்தராஜாவை கேட்டபோது வவுனிக்குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுபோகச் செய்கைக்கு விநியோகிப்பதற்கு போதியளவு நீர் இருப்பதாக தெரிவித்துள்ளார். (9-315)

# இளைஞர், யுவதிகளுக்கான கணனி வகுப்புக்கள் ஆரம்பம்



முல்லைத்தீவு -மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவின் கீழுள்ள பாலிநகர், கொல்லவிளாங்குளம், சிவபுரம் ஆகிய கிராமங்களில் வசிக்கும் இளைஞர், யுவதிகளுக்கான கணனி பயிற்சி வகுப்பு நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.


பாராளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி ச.சிவமோகனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் ஒன்பது இலட்சத்து எழுபத்தையாயிரம் ரூபா செலவில் நேற்று முன்தினம் பாலிநகர் கிராமத்தில் வன்னிக்குறோஸ் திரிசாரணர் அமைப்பின் இணைப்பாளர் விக்கி ஆசிரியர் தலைமையில் மேற்படி நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது.

மேலும் வன்னிக்குறோஸ் நிறுவனத்தின் வன்னிமாவட்ட இணைப்பாளர் ச.ரூபன், மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் ரஞ்சனா, உதவித்திட்டமிடல் பணிப்பாளர் நளாயினி ஆகியோரால் கணனிப் பயிற்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது. (9-281)



தேசிய போதைப்பொருள் தடுப்பு வாரத்தை முன்னிட்டு போதைத்தடுப்பு வாசகங்களைத் தாங்கிய பலூன்கள் பறக்கவிடும் நிகழ்வு வவுனியா தெற்கு வலயக்கல்வி திணைக்களத்தில் நேற்று இடம்பெற்றது. வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் முத்து ராதாகிருஷ்ணன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வவுனியா தெற்கு வலய பிரதி கல்விப் பணிப்பாளர், உதவிக் கல்விப் பணிப்பாளர், ஆசிரிய ஆலோசகர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (படம்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

# போதை ஒழிப்பு விழிப்புணர்வுப்பேரணி





ஜனாதிபதியின் போதைப் பொருள் ஒழிப்பு வாரத்தின் இறுதி நாளான நேற்று முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவில் போதை ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு பேரணி ஒன்று இடம்பெற்றது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம், புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையம், புதுக்குடியிருப்பு பிரதேச சிவில் பாதுகாப்பு திணைக்களம் என்பன இணைந்து இந்த விழிப்புணர்வு பேரணியை மேற்கொண்டிருந்தனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்ட இந்த விழிப்புணர்வுப்பேரணி புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தை சென்றடைந்து அங்கு பொலிஸார் மற்றும் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இணைந்து புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் இருந்து புதுக்குடியிருப்பு நகர் வரை சென்றது.

குறித்த விழிப்புணர்வு பேரணியில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் உள்ளிட்ட பிரதேச செயலக அதிகாரிகள், சிவில் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள், புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர். (9-281)

# கண்டாவளையில் நெற்பயிர்கள் அழிவடையும் அபாயம்

### நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை

(கண்டாவளை)

வரட்சியின் காரணமாக கண்டாவளை ஆறாம் வாய்க்கால் பகுதியின் பல ஏக்கர் நெற்பயிர்கள் அழிவடையும் நிலையில் உள்ளதாகவும் ஏனைய கிளைவாய்க்கால் பகுதியில் அமைந்துள்ள வயல்களும் அழிவடையும்




நிலைமையை எதிர்நோக்கியுள்ளதாக கண்டாவளைப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக ஆறாம் வாய்க்காலின் நல்ல தண்ணிக் கிணற்றடியில் உள்ள பல ஏக்கர் வயல்கள் கைவிடும் நிலைக்கு வந்துள்ளதாகவும் உடனடியாக உயர் அதிகாரிகளும் கண்டாவளைக் கமக்கார அமைப்பினரும் விரைந்து செயற்பட்டு குறித்த அழிவினை தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு கண்டாவளை பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9)

## பாரதம்

# பேருந்து கவிழ்ந்து கோர விபத்து

# 35 பேர் பலி; 20 பேர் படுகாயம்



(காஷ்மீர்)

ஜம்மு-காஷ்மீரில் பேருந் தொன்று விபத்துக்குள்ளாகியதில் 35 பேர் உயிரிழந்துள்ளதுடன், 20 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் குறித்து டுவிட் டரில் கருத்து தெரிவித்துள்ள பிர தமர் நரேந்திர மோடி, குறித்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு இரங்கல் தெரி வித்துள்ளார்.

குறித்த விபத்துச்சம்பவம் நேற்று திங்கட்கிழமை இடம்பெற் றுள்ளது.

கிஸ்திவார் மாவட்டத்தில் உள்ள கேஸ்வன் என்ற இடத்தில் சென்று கொண்டிருந்த சிறிய ரக பேருந் தொன்றே இவ்வாறு விபத்துக்குள் ளாகியுள்ளது.

இந்த சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (7)

# ராகுலை இராஜினாமா முடிவை திரும்பப் பெறுமாறு வலியுறுத்தி தொண்டர்கள் உண்ணாவிரதம்






(டில்லி)

காங்கிரஸ் கட்சியின் தலை வர் ராகுல் காந்தி இராஜினாமா செய்யப்போவதாக செய்திகள் வெளியானதையடுத்து, இந்த முடிவை திரும்பப் பெற வலியு றுத்தி அக்கட்சி தொண்டர்கள் உண்ணாவிரதத்தில் ஈடுபட் டுள்ளனர்.

பாராளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி படுதோல்வியை சந்தித்தது. இந்த தோல்விக்குப் பொறுப்பேற்று பல்வேறு மாநிலக் கட்சித் தலைவர்களும் நிர்வாகி களும் தங்கள் பதவியை இராஜி னாமா செய்து வருகின்றனர்.

இதனையடுத்து ராகுல் காந் தியும் இந்த தோல்விக்குப் பொறுப் பேற்று தலைவர் பதவியில் இரு ந்து விலகப்போவதாக தகவல்கள் வெளியாகின.

அதன் பின்னர் நடத்தப்பட்ட காங்கிரஸ் காரிய கமிட்டி ஆலோ சனை கூட்டத்தில் ராகுல் மீண் டும் தலைவராக தொடர முடிவு செய்யப்பட்டது.

இந்நிலையில், ராகுல் காந்தி தனது இராஜினாமா முடிவில் உறு தியாக இருக்கிறார் என செய் திகள் வெளியாகின. ராகுல் இப் படி முடிவெடுத்திருந்தால், உடன டியாக திரும்பப் பெற வேண்டும் என்பதை வலியுறுத்தி டில்லியில் உள்ள காங்கிரஸ் தலைமையகத்தின் வாசலில் அக்கட்சி தொண்டர்கள் உண்ணாவிர தத்தில் ஈடுபட்டுள்ளனர். (7)

# தமிழக குடிநீர் பிரச்சினை தொடர்பில் தி.மு.க.சார்பில் சிறப்பு கவனயீர்ப்பு தீர்மானம்

(சென்னை)

குடிநீர்ப் பிரச்சினை குறித்து தி.மு.க. தலைவர் மு.க.ஸ்ரா லின் சிறப்பு கவனயீர்ப்புத் தீர் மானமொன்றை கொண்டுவந் துள்ளார்.

தமிழக சட்டப்பேரவை கூட் டத்தொடர் நேற்றுத் திங்கட் கிழமை மீண்டும் ஆரம்பிக் கப்பட்டுள்ள நிலையில், மானிய கோரிக்கைகள் மீதான விவா தங்கள் நடைபெற்றுள்ளன.

இந்நிலையில், தமிழகத்தில் நிலவும் குடிநீர்ப் பிரச்சினை குறித்து சிறப்புக் கவனயீர்ப்புத் தீர்மானமொன்றை தி.மு.க. தலைவர் மு.க.ஸ்ராலின் கொண்டுவந்துள்ளார்.

குறித்த தீர்மானத்தின் மீது உரையாற்றிய அவர், "குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண் டும்.

சென்னைக்கு நீர் ஆதார மான 4 ஏரிகளும் வறண்டு காணப்படுகின்றன. 2020 இல் சென்னையில் குடிநீர்ப் பிரச் சினை ஏற்படும் என்று நிதி ஆயோக் கூறியிருந்தது.

ஆனால் 2019 ஆம் ஆண் டிலேயே குடிநீர்ப் பஞ்சம் ஏற் பட்டுள்ளது. நிதி ஆயோக் அறிக் கையை தமிழக அரசு பொருட் படுத்தவில்லை. ஜோலார்பேட் டையில் இருந்து சென்னைக்கு குடிநீர் கொண்டு வருவது வர வேற்கத்தக்கது" என மேலும் தெரிவித்தார். (7)

# வடகொரியாவில் கா... வரலாற்றில் இட...



வடகொரியாவில் காலடி எடுத்து வைத்த முதல் அமெரிக்க ஜனா திபதியாக டொனால்ட் ட்ரம்ப் வர லாற்றில் இடம்பிடித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனா ல்ட் ட்ரம்ப்- வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னுக்குமிடை யிலான சந்திப்பு நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை வட கொரிய - தென்கொரிய எல்லையில் இடம்பெற்றது.

ஜப்பானில் நடைபெற்ற ஜி-20 மாநாட்டில் கலந்து கொண்டிருந்த அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், அங்கிருந்து தென் கொரி யாவிற்கு விஜயம் மேற்கொண் டிருந்தார்.

தென்கொரியா சென்ற அவர், தலைநகர் சியோலில் தென் கொரிய ஜனாதிபதி மூன் ஜே-இன் உடனான விசேட சந்திப்பில் ஈடுபட் டார்.

இந்தநிலையில், ஜப்பானில் இருந்து தென்கொரியா புறப்படுவதற்கு முன்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட ட்ரம்ப், இந்தப் பயணத்தின் போது வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னை சந்திக்க விருப்பம் உள்ளதாக தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து, கிம் ஜாங் உன் இந்த சந்திப்பை உறுதிப்படுத்திய நிலையிலேயே, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த சந்திப்பு இடம்பெற்றது.

அந்தவகையில், இரு நாட்டுத் தலைவர் களும் தென்கொரியா - வடகொரியா இடையே உள்ள இராணுவ நடவடிக்கை இல்லாத மண்டலத்தில் சந்திப்பில் ஈடுபட்டனர்.

இதன் போது, தென்கொரிய எல்லையில் டொனால்ட் ட்ரம்பும் வடகொரிய எல்லை யில் கிம் ஜாங் உன்னும் நின்றவாறு கைலாகு செய்து கொண்டனர்.

இதனையடுத்து, வடகொரியாவுக்கு வருகை தருமாறு கிம், அமெரிக்க ஜனாதிபதிக்கு அழைப்பு விடுத்திருந்தார். இதனை ஏற்றுக் கொண்ட ட்ரம்ப், எல்

# அரச அலுவலகம் மீ... 20 பேர் பரிதாபமா...

(காபூல்)

ஆப்கானிஸ்தான் நாட்டின் கந் தஹார் மாகாணத்தில் அரசு அலு வலகத்தின் மீது தற்கொலைப்படை பயங்கரவாதிகள் நடத்திய கார் குண்டு தாக்குதலில் 20 பேர் உயி ரிழந்தனர்.

ஆப்கானிஸ்தான் நாட்டில் விரைவில் ஜனாதிபதி பதவி மற்றும் பாராளுமன்றத்துக்கான தேர்தல் நடைபெறவுள்ளது. இதற் காக பல பகுதிகளில் புதிய வாக் காளர்களின் பெயர்களை சேர்க்கும் சிறப்பு முகாம்கள் நடைபெற்று வருகின்றன.



# ஆப்கானில் இரா... பத்து தலிபான் ...

ஆப்கானிஸ்தானின் தலிபான் பயங்கரவாதிகள் மீது நேற்றையதினம் படையினர் மேற்கொண்ட வான் வழித்தாக்குதலில் 10 பேர் பலியாகியுள்ளனர்.

பாக்டியா மாகாணத்தின் கார்டாசிரா மாவட்டத்தில் தல பான் பயங்கரவாதிகளின் இருப்பிடத்தை குறிவைத்து இராணுவ விமானங்கள் குண்டு மழை பொழிந்தன.

இதில் 10 பயங்ரவாதிகள் கொல்லப்பட்டுள்ளதாக அந்நாட்டு செய்திகள் தெரவிக்கின்றன. மேலும் பயங்கரவாதிகளின் பதுங்கு குழிகள் மற்றும் ஆயுத கிடங்குகள் நிர்மூலமாக்கப்பட்டன.

நேட்டோ படைகளின் உதவியோடு ஆப்கானிஸ் தான் படையினர் தலிபான் பயங்கரவாதிகளுக்கு எதிராக தரைவழியாகவும் வான் வழியாகவும் தொடர்ந்து தாக்குதல் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7




# ல் காலடி எடுத்து வைத்து இடம்பிடித்தார் ட்ரம்ப்



லையைகடந்து வடகொரியமண்ணில்நேற்று முன்தினம் காலடி எடுத்து வைத்தார்.

இதன்மூலம் அமெரிக்க ஜனாதிபதி என்ற பதவியில் இருக்கும் போதே, எதிரி நாடான வடகொரியாவிற்குள் காலடி எடுத்து வைத்த முதல் அமெரிக்க ஜனாதிபதி என வரலாற்றில் இடம்பிடித்தார்.

வடகொரிய எல்லையில் சிறிது தூரம் நடந்து சென்ற ட்ரம்ப், அமெரிக்காவுக்கான விஜயத்தை மேற்கொள்ளுமாறு வடகொரிய தலைவருக்கு அழைப்பு விடுத்தார். (7)

# அணுவாயுத களைவு தொடர்பில் மீண்டும் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படும்

## ட்ரம்ப்-கிம் சந்திப்பில் இணக்கம்

(பியாங்யாங்)

அமெரிக்காவும் வடகொரியாவும் அணுவாயுதக் களைவு தொடர்பான பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிக்க இணக்கம் தெரிவித்துள்ளன.

இரண்டு தலைவர்களும் வட-தென் கொரியாக்களுக்கு இடையிலுள்ள இராணுவமயமற்ற பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடத்திய வரலாற்றுச் சிறப்புமிக்க சந்திப்புக்குப் பின்னர் இந்த இணக்கம் காணப்பட்டது.

இரண்டு தலைவர்களும் சுமார் ஒரு மணிநேரம் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தனர். அடுத்த சில வாரங்களில் இரண்டு நாட்டுத் தலைவர்களும் மீண்டும் சந்திக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை வடகொரிய ஜனாதிபதியை வெள்ளை மாளிகைக்கு வரும்படி ட்ரம்ப் அழைப்பு விடுத்தபோது பியாங்யாங்கிற்கு ட்ரம்ப் வருகையளித்தால் கௌரவமாக இருக்கும் என்றும் கிம் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பும், வடகொரிய ஜனாதிபதி கிம்மும் கடந்த வருடம் ஜுன் மாதம் முதன்முறையாக சிங்கப்பூரிலும் இந்த வருடம் பெப்ரவரி மாதம் இரண்டாவது முறையாக ஹனோயிலும் சந்தித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (7)

# மீது தாக்குதல் ாக உயிரிழப்பு!



இந்நிலையில், நாட்டின் தெற்கு பகுதியில் உள்ள கந்தஹார் மாகாணத்துக்குட்பட்ட மரோப் மாவட்டத்தில் அரசு அலுவலகத்தை குறிவைத்து தற்கொலைப்படை பயங்கரவாதிகள் நேற்று முன்தினமிரவு கார் குண்டுகள் மூலம் தாக்குதல் நடத்தினர்.

இதில் அந்த அலுவலகத்துக்குள் இருந்த தேர்தல் அதிகாரிகள் 13 பேர் உயிரிழந்தனர். அதே பகுதியில் பாதுகாப்பு படையினருக்கும் பயங்கரவாதிகளுக்கும் இடையில் நடந்த துப்பாக்கிச் சமரில் பாதுகாப்பு படையை சேர்ந்த 12 பேர் உயிரிழந்தனர். (7)

# ஜப்பானிய மீனவர்கள் திமிங்கலங்களை வர்த்தகத்திற்காக இனி வேட்டையாடலாம்


(டோக்கியோ)

ஜப்பானிய மீனவர்கள் எதிர்வரும் காலங்களில் திமிங்கலங்களை வர்த்தகத்திற்காக வேட்டையாடலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக விதிக்கப்பட்டிருந்த தடை நேற்று திங்கட்கிழமை நீக்கப்பட்டுள்ளது.

உலகத் திமிங்கல பாதுகாப்பு ஆணையத்திலிருந்து ஜப்பான் விலகியதைத் தொடர்ந்து, புதிய அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இதன்படி மூன்று தசாப்தங்களின் பின்னர் 5 ஜப்பானிய திமிங்கல வேட்டை கப்பல்கள் முதல் தடவையாக வர்த்தக நோக்கில் பயணத்தை ஆரம்பித்துள்ளன.

திமிங்கல வேட்டைக்காக வழங்கப்பட்டுள்ள அனுமதி சுற்றுப் புறச்சூழல் பாதுகாப்பு ஆர்வலர்களிடையே சர்ச்சையை ஏற்படுத்தக்கூடும் என்று கருதப்படுகிறது.



இருப்பினும் ஜப்பானில் திமிங்கலங்களை வேட்டையாடும் சமூகத்தினர் புதிய அனுமதியைக் கொண்டாடி வருகின்றனர். ஜப்பானில், திமிங்கல வேட்டை நெடுநாள் பாரம்பரியமாகக் கருதப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் ஜப்பானிய கப்பல்களுக்கு மின்கே, பிரைட் மற்றும் சேய் வகைகளைச் சேர்ந்த 227 திமிங்கலங்களை மாத்திரமே பிடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.


ஜப்பான் கடந்த 1986 ஆம் ஆண்டு இறுதியாக வர்த்தக நோக்கில் திமிங்கலங்களை பிடித்து வந்த போதும், பின்னர் ஆராய்ச்சி ரீதியாகவும் அவற்றை பிடிக்க முற்பட்ட போது சர்வதேச திமிங்கல பாதுகாப்பு ஆணையம் அதற்கு தடை விதித்தமை குறிப்பிடத்தக்கது. (7)

# இராணுவத்தினர் தாக்குதல் ன் பயங்கரவாதிகள் பலி

வாதிகள் மீது ண்ட வான் னர்.

வட்டத்தில்துலி குறிவைத்து. பொழிந்தன. ட்டுள்ளதாக ன. மேலும் றும் ஆடதக்

ஆப்கானிஸ் வாதிகளுக்கு ப்பியாகவும் ருகின்றமை (7)



# இத்தாலியில் பழைமையான பாலம் வெடி வைத்து தகர்க்கப்பட்டது

(ரோம்)

இத்தாலியில் சுமார் 60 வருடம் பழைமைவாய்ந்த பாலம் ஒன்று வெடி வைத்து தகர்த்தப்பட்டுள்ளது.

மொரண்டி எனும் இந்தப் பாலம் 1960 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. சுமார் ஒன்றரை கிலோ மீற்றர் நீளம் கொண்ட இந்த பாலத்தின் ஒரு பகுதி கடந்த ஆண்டு இடிந்து வீழ்ந்ததில் அதில் சிக்கி 43 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதையடுத்து இந்தப் பாலத்தை இடித்து தள்ள முடிவு செய்யப்பட்டு, பாலத்தின் மேற்பகுதியில் வெடிபொருட்கள் வைத்து தகர்க்கப்பட்டது.



பலத்த சத்தத்துடன் இடிந்து விழுந்த பாலத்தை அதிகளவானோர் பார்வையிட்டனர்.

பாலத்தை இடித்தபோது எழுந்த தூசு காற்றில் பரவாமல் இருக்க உடனடியாக தண்ணீர் பாய்ச்சி அடிக்கப்பட்டது. இதே இடத்தில் புதிய பாலம் அமைக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# கோத்தாவுக்கு எதிராக போட்டியிடத் தயார்

## குமார வெல்கம சவால்

**(கொழும்பு)**

**கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எதிராக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தயாராக இருப்பதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார் வெல்கம தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் ஊடகச் சந்திப்பு விவாதத்தில் உரையாற்றிய போது அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

"பதுளை மாவட்ட பொதுஜன பெரமுன கட்சி தலைமையிலிருந்து நான் நீக்கப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டாலும் நான் ஒரு போதும் அந்தக் கட்சியின் உறுப்பினராக இல்லாததால் அத்தகைய நடவடிக்கை தேவையற்றது.

தாம் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பெயரளவிலான பதவிகளை விட்டு விலகி, சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து செயற்படவுள்ளேன்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீதான அதிருப்தியினால், அப்போது நான் சிறிலங்கா பொதுஜன பெரமுனவுக்கு ஆதரவளித்தேன்.

ஜனாதிபதித்தேர்தலில் தமது வேட்பாளர் யார் என்பதை சிறிலங்கா பொதுஜன பெரமுன எனக்கு அறிவித்துள்ளது.



ஜனாதிபதி வேட்பாளராக, கோத்தபாய ராஜபக்ஷ இல்லாவிடின், மீண்டும் அந்தக் கட்சியை ஆதரிக்கத் தயாராக இருக்கிறேன்.

ஓகஸ்ட் 11 ஆம் திகதி பெயரிடவுள்ள வேட்பாளரை நான் எதிர்க்கிறேன்.

நான் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்தாலும் ஜனாதிபதியின் நடவடிக்கைகளை எதிர்ப்பதற்கான உரிமை உள்ளது.

தேசிய உடை அணிபவரே அடுத்த ஜனாதிபதியாக வர வேண்டும். ஜனாதிபதி வேட்பாளராவதற்கு நானும் கூடத் தகுதியானவன் தான். அதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஒருமித்த கருத்துத் தேவைப்படுகிறது.

ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்டால், மக்களின் ஆதரவைப் பெற முடியும் என்று நம்புகிறேன்" என மேலும் அவர் தெரிவித்தார். (7)

# கீழ்மட்டத்திலுள்ளோரை மேம்படுத்தும் அரசாங்கமொன்றே இன்று தேவை

## சஜித் எதிர்பார்ப்பு



கீழ் மட்டத்திலுள்ளவர்களை உயர்வடையச்செய்யும் அரசாங்கமொன்றே இன்று நாட்டுக்குத் தேவையென அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். இதுவே இன்றைய மக்களினதும் நாட்டினதும் எதிர்பார்ப்புமாகுமென அவர் மேலும் தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள கேலியபுரவில் நிர்மாணிக்கப்படவுள்ள 2499 மற்றும் 2500 ஆவது ஸ்ரீசுமங்கள நாஹிமி கம, சிரிசகபோகம உதாகம மாதிரிக் கிராமங்களுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் சஜித் பிரேமதாஸ இங்கு தொடர்ந்தும் உரையாற்றும் போது, 2025 ஆம் ஆண்டாகும் போது 20,000 உதாகம மாதிரிக் கிராமங்களை நிர்மாணிக்கும் எமது இலக்கு நாடுபூராகவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இன்று வீடுகளைப் பெறவுள்ள 55 பயனாளிகள் இதற்கு முன்பும் எமது குசும் வீடமைப்புத் திட்டத்திலேயே வசித்து வந்தார்கள். இவர்கள் இங்கு அடிப்படை வசதிகளற்ற நிலையிலேயே வாழ்ந்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

நாடுபூராகவும் 2500 உதாகம மாதிரிக் கிராமங்களை நிர்மாணிக்க நடவடிக்கைகள் எடுத்துள்ளபோதும் இதில் 300 மாதிரிக் கிராமங்கள் அம்பாந்தோட்டை மாவட்டத்திலேயே நிர்மாணிக்கப்பட்டு வருகின்றமை விசேட அம்சமாகும்.

முன்னாள் ஜனாதிபதி எனது தந்தை அமரர் ரணசிங்க பிரேமதாஸ கம்உதாவ வேலைத் திட்டத்தினையும் ஜூன் மாதத்திலேயே முன்னெடுத்தார். இன்று இதனை முன்னெடுக்கும் போதும் பல்வேறு தரப்பினர் இதற்கு முட்டுக்கட்டைகள் இட்டாலும் நாம் இலக்கினை அடைவோம் என மேலும் தெரிவித்தார்.

# GMOAயின் தலைவராக பாதெனிய மீண்டும் தெரிவு



அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைமைப் பதவிக்கு மீண்டும் வைத்தியர் அனுருத்த பாதெனிய தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத் தேர்தல் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. இதில் போட்டியின்றி இவர் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## வைத்தியசாலை பண்பாடுகள்

நமக்கு வேண்டப்பட்ட ஒருத்தர் வைத்தியசாலையிலே அட்மிட் ஆகியிருக்கின்றார். அவரைப் பார்த்துக் கொண்டு வரலாம் என்று போறோம். அந்தச் சமயத்திலே நாம் எப்படி நடந்து கொள்வது? இதற்கு அமெரிக்க டாக்டர் ஒருவர் சில ஆலோசனைகளைச் சொல்லியிருக்கின்றார். படுத்திருக்கின்ற ஒருத்தர் சீக்கிரம் குணமாகி எழுந்திருக்கிறது அவரைப் பார்க்கின்றவர்களைப் பொறுத்தும் இருக்கின்றதாம்.

ஒரு நோயாளி ஒரு அறைக்குள்ளே தனியாக படுத்திருக்கின்றார் என்றால் அந்தத் தனிமையே அவருக்கு ஒரு சிகிச்சை மாதிரி! அந்தத் தனிமையை கொடுப்பது போல் நீங்கள் நடந்து கொள்ளக் கூடாது. திடீரென்று சொல்லாமல் கொள்ளாமல் அறைக்குள்ளே போய் அவருக்கு ஆச்சரியத்தையோ அதிர்ச்சியையோ ஏற்படுத்தக் கூடாது. கதவைத்தட்டி அனுமதி கேட்டுச் செல்வது தான் நாகரிகம்.

உள்ளே போனதும் அங்கேயிருக்கின்ற மருத்துவ சாதனங்கள், படுக்கை வசதி இதையெல்லாம் பார்த்துக் விட்டு குறை சொல்ல ஆரம்பிக்காதீர்கள். ஏதாவது குறையிருந்தால் அதை டாக்டரிடம் தாதியிடம் சொல்ல லாமே தவிர நோயாளி காதிலே விழுகின்ற மாதிரி சொல்லக் கூடாது. நமக்கு சிகிச்சை கொடுக்கின்ற கருவிகள் சரியில்லை என்று நோயாளி நினைக்க ஆரம்பித்தால் அது மிகவும் கெடுதல்.

நோயாளியின் கையை குலுக்க வேண்டுமா? அவர் உடம்பைத் தொட்டுத் தடவ வேண்டுமா? மிகவும் பக்குவமாக அதை செய்யுங்கள். உங்கள் பலத்தை எல்லாம் அங்கே காட்டிக் கொண்டிருக்காதீர்கள்.

நிதானம், பரிவு, அன்பு இதை மறந்து விடாதீர்கள். நோயாளி பக்கத்திலே உட்காருவதற்கு இடமும் வசதியும் இருந்தால் உட்கார்ந்து பேசுங்கள். நம்மைப் பார்ப்பதற்காக வந்திருக்கின்றவர் நின்று கொண்டே இருக்கின்றாரே என்கின்ற நினைப்பு நோயாளிக்கு மன வேதனையைக் கொடுக்கும். அதற்கு நாம் இடம்கொடுக்கக் கூடாது. நோயாளியிடம் ஆறுதலாக நான்கு வார்த்தை பேசுவதாக நினைத்துக் கொண்டு, ஐயோ பாவம் முன்னாடி எல்லாம் இந்த உடம்பு எவ்வளவு திடகாத்திரமாக இருந்தது. இப்ப இப்படி ஆகிவிட்டதே! என்று சொல்லக் கூடாது. அது அவருக்குத் தெரியும்.

நீங்கள் என்ன பேச வேண்டும் என்றால் இப்ப எப்படி இருக்கின்றீர்கள்? என்று உற்சாகமாக ஆரம்பியுங்கள். வைத்தியசாலை எப்படி இருக்கின்றது? ஆகாரமெல்லாம் என்ன கொடுக்கின்றார்கள்? என்று விசாரியுங்கள்.

குறை இருந்தால் நிர்வாகிகளிடம் சொல்லுங்கள். முதலில் உங்களுடன் பேசிக் கொண்டிருப்பதற்கு நோயாளி விரும்புகின்றாரா? என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

எப்பவும் நோயாளியிடம் அவருடைய நோயைப் பற்றியே பேசிக் கொண்டிருப்பது நல்லதில்லை. அவருக்கு நம்பிக்கை ஊட்டக் கூடிய வகையில் உங்கள் பேச்சு இருக்க வேண்டும். என் உதவி உங்களுக்கு ஏதுவும் தேவையா? உங்களுக்காக நான் என்ன செய்ய வேண்டும்? என்று கேளுங்கள்.

இவ்வாறு கேட்பதனால் நோயாளிக்கு தன் உடல் நலத்திலே அக்கறையுள்ள ஒருவரைப் பார்த்த தென்பும் உற்சாகமும் ஏற்படும். மன நிம்மதி கிடைக்கும். முடிந்தால்,

வைத்தியசாலை ஊழியர்களைப் பாருங்கள். நோயாளிகளிடம் நீங்கள் பார்க்கின்ற மாறுதல், முன்னேற்றம் இதையெல்லாம் சொல்லி அவருடைய நல்வாழ்விலே உங்களுக்கு அக்கறை இருப்பதைக் காட்டிக் கொள்ளுங்கள். அதனால் நோயாளியை பற்றி கவலைப்பட யாருமில்லை என்ற எண்ணம் மனதை விட்டுப் போய் விடும்.

நோயாளியிடமிருந்து எப்ப விடை பெறவேண்டும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். சில நோயாளிகளிடம் சில நிமிடம் இருந்தால் போதும். சில நோயாளியிடம் ஒரு மணி நேரம் இருக்கிறது கூட குறைவாக தெரியும்.

நீங்கள் எவ்வளவு நேரம் இருக்கின்றீர்கள் என்பது முக்கியமில்லை. உங்களால் அவருக்கு எந்த அளவு நம்பிக்கை ஏற்பட்டிருக்கின்றது? என்பதுதான் முக்கியம்.

சிலபேர் எப்படியென்றால் நோயாளி சாப்பிடுகின்றாரோ இல்லையோ பழங்கள் அது இது என்று வாங்கிக் குவித்தால் தான் நிம்மதி! அது முக்கியமில்லை. அதேபோல் நறுமணப் பொருட்கள் எதையும் எடுத்துக் கொண்டு போக வேண்டாம்.

நோயாளிக்கு டாக்டர் சிகிச்சை கொடுக்கின்ற போது அவருக்கு தைரியத்தையும் உற்சாகத்தையும் கொடுக்க வேண்டும். இவ்வளவும் அமெரிக்க டாக்டர் சொல்லியிருக்கின்ற ஆலோசனைகள். நோயாளியைப் பார்க்க போகின்றவர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று அவர் சொல்லியிருக்கின்றார்.

நோயாளியை அழைத்துக் கொண்டு போறவர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று சொன்னால் நல்லா இருக்கும். ஏனென்றால் என்னுடைய அனுபவம் அப்படி. வேற ஒன்றுமில்லை.

கொஞ்ச நாளைக்கு முன் ஒரு நண்பர் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். அவருக்குத் தெரிந்த ஒருத்தர் வைத்தியசாலையில் அட்மிட் ஆகியிருக்கின்றார். எல்லாம் விபரமாக எழுதி என்னைப் போய் பார்த்துவிட்டு எப்படியிருக்கின்றார்கள் என்று விபரம் எழுது என்று, எழுதியிருந்தார்.

நானும் போய் அவரிடம் என்னை அறிமுகப்படுத்திக் கொண்டு பேசிக் கொண்டிருந்தேன். 10 நிமிடம் பேசி விட்டு உடம்பை பத்திரமாக பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டு புறப்பட்டேன். அவர் எனக்கு ஒன்றுமில்லை என் தம்பிக்குத்தான் நெஞ்சுவலி என்றார். அவர் எங்கே என்றேன். எக்ஸ்ரே எடுக்க அழைத்துக் கொண்டு போயிருக்கின்றார்கள். இந்த பெட் சும்மாதானே இருந்தது என்று கொஞ்ச நேரம் படுத்திருந்தேன். நான் துணைக்கு வந்த ஆள்! என்றார்.

# நயினையில் வீற்றிருந்து நல்லாட்சி புரியும் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மனுக்கு




சக்திபீடங்கள் அறுபத்து நான்கினுள் ஒன்றாகப் போற்றப்படுவது நயினை ஸ்ரீநாகபூஷணி அம்மன் ஆலயமாகும். சமுத்திரத்தின் மத்தியிலே அருட்பொலிவும் ஆன்மீகச் சிறப்பும் பெற்று சரித்திர வரலாறுகளுடன் திகழ்வது நயினாதீவு. "மணிப்பல்லவம்" என்று போற்றப்படும் வரலாற்றுச் சிறப்பும் இலக்கியச் சிறப்பும் இதற்கு உண்டு. இவ் அழகிய தீவிலே அம்பிகை எழுந்தருளி அகில உலகமெல்லாம் உள்ள ஆன்மாக்களுக்கு அருள் பாலித்துக் கொண்டிருக்கிறாள். தன்னை நாடி வரும் அடியார்கள் வேண்டும் வரங்களை மனமுவந்து அள்ளிச் சொரிந்து அருளாட்சி செய்து கொண்டிருப்பவள் அன்னை நாகபூஷணி.

ஆண்டுதோறும் ஆனி மாதம் பிறந்து விட்டால் நயினையம்பதி நாகபூஷணி அம்மனின் உயர் திருவிழா நினைப்பு நன்மக்களுக்கு வந்துவிடும். திருவருள்மிக்க அருட்சக்தியாகிய நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் அடியார்களுக்கு வேண்டிய அனுக்கிரகங்களை வழங்கிக் கொண்டிருக்கின்றாள் என்பது உலகறிந்த உண்மை. பயபக்தியோடும் உளவிருப்போடும் அன்போடும் மணிப்பல்லவம் எனப்படும் நயினையம்பதிக்கு யாத்திரை செய்யும் மக்கள் தொகை நாளுக்கு நாள் பல்கிப் பெருகிக் கொண்டே வருகின்றது என்பது சர்வமத சந்நிதி நாகபூஷணியின் பேர் அருட்பிரவாகமே எனலாம். கண்ணுக்கு முன்னே காட்டியும் கனவிலே காண்பித்தும் நிகழ்த்துகின்ற அற்புதங்களைக் கண்டு அருளமுதைப் பெற்றுக் கொள்வதற்காக நயினையம்பதியில் அடியார்கள் பெருமளவில் கூடுவார்கள்.

காலாதிகாலமாக அன்னையாம் நாகபூஷணி நிகழ்த்தி வந்த, நிகழ்த்தி வருகின்ற திருவிளையாடல்கள் ஒன்றா! இரண்டா! எடுத்துச் சொல்ல, எண்ணுக்கணக்கற்றவை. நயினை அன்னை நாகேஸ்வரி எடுத்துரைக்க முடியாத அளவுக்குப் பல்வேறு அற்புதங்களைப் புரிந்த வண்ணம் நயினையில் அருளாட்சி செய்கின்றாள். நெடுங்காலம் பிள்ளைப் பாக்கியம் இல்லாதிருந்த தம்பதியர் பலர் அன்னையின் அருளினால் நன்மக்கட்பேறு வாய்க்கப் பெறுவது, தீராத பிணிகளைப் போக்குவது போன்ற அற்புதங்கள் அளவிட முடியாததாகும். நித்திய அன்னதானம் ஆலயத்திலும் உயர்திருவிழாக் காலம், தைப்பூசம் ஆடிப்பூரம் போன்ற விசேட உற்சவங்களில் அமுதசுரபி அன்னதான சபை மண்டபத்திலும் நிகழ்கின்றது. நாக வழிபாட்டுத் தொன்மையுடையதும் மணிப்பல்லவம் என்பதும் நயினாதீவு என்பதற்கான சான்றுகளும் மூலாதாரங்களும் வரலாறுகளும் நிரூபித்து நிற்கின்றன.

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் தனிப்பெருங் கருணைகளிலொன்று அம்பாள் நாகமாகவே காட்சியளிக்கும் பூர்வீகம். அம்பாளின் கருவறையிலே மூல மூர்த்தியாக இன்றும் இருப்பவை ஐந்து தலை நாகப் பிரதிஷ்டையும் அம்மன் திருவுருவமுமாகும். இன்றும் உயிர்ப்புடன் தனது இருப்பையும் திருவருட் திறத்தினையும் உலகளாவிய முறையில் மெய்ப்பித்து அருளாட்சி புரிகின்றாள் அன்னை பராசக்தி.

அம்பிகையின் திருத்தல வரலாறு வெகு இயற்கை வாய்ந்தது. நாகம் ஒன்று அம்பாளைப் பூக்கொண்டு பூஜிப்பதற்காக அனலை தீவிலிருந்து கடல் மார்க்கமாக வந்தபொழுது கருடன் ஒன்று அதனை எதிர்த்து நின்றது. அவ்வழியாகச் சென்ற வணிகன் ஒருவன் பாம்பைக் காப்பாற்றினான் என வரலாறுகள் கூறுகின்றன. வீடு சென்ற வணிகன் துயில் கொண்டு எழுந்த போது வீடு நிறைய நாக ரெத்தின மணிகள் இருந்ததாகவும் இச்செல்வம் கொண்டு வணிகனே இவ்வாலயத்தைக் கட்டுவித்தான் எனவும் சரித்திர வரலாறு உண்டு. மேற்படி கதைக்குச் சான்றாக வடகடலில் "பாம்பு சுற்றிய கல்", "கருடன் கல்" என கற்சாசனங்கள் இருக்கின்றன. நயினைத் திருத்தலத்தின் மேன்மையை இன்றும் எடுத்தியம்பியவாறு உள்ளன. வருடந்தோறும் பதினொராம் திருவிழான்று இந்தக் கற்கள் இரண்டுக்கும் விசேட பூஜை வழிபாடுகளும் தீபாராதனைகளும் இடம்பெற்று வருகின்றன. அருளின் மேன்மை்யை அடியவர்களுக்கு வழங்கி வருகின்றாள் அம்பிகை.

அம்பிகையின் ஆலயம் பெருவிருட்சமாக உயர்வு கொண்டு மிக அழகாக நிலை பெற்று பக்தியின் நிழல் தருகின்றது.

அமுதசுரபியில் அன்ன தானம் நயினை ஸ்ரீநாகபூஷணி அம்பிகையை வழிபாடு இயற்ற வருகின்ற அடியவர்கள் அம்பிகையின் அருளாசியைப் பெறுவதோடு மட்டுமல்லாது அமுதுண்டு நோய் நொடிகளற்ற நல்லாரோக்கிய வாழ்வும் பெறுகின்றனா். அந்தவகையில் திருவிழாக் காலங்களில் அம்பிகை ஆலயம் நாடி வருகின்ற பல்லாயிரக்கணக்கான அடியார்களுக்கு அன்னதானம் வழங்கும் பணிகள் சிறப்பாக இடம் பெற்று வருகின்றன. கடந்த 1960 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரையாக இப்பணிகள் சிறப்புற இடம்பெற்று வருகின்றன. அடியார்களுக்கு அருள் சுரந்து கொண்டு நயினையம்பதியில் வீற்றிருக்கும் அம்பிகை அமுதசுரபியில் அன்னபூரணியாக நின்று அமுதுசுரக்கின்றாள். 1960 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட "அமுதசுரபி" அன்னதானசபை இன்று அறுபதாவது ஆண் டில் காலடி பதிக்கின்றது. அதற்கமைவாக அமுதசுரபியின் மணிவிழா (13.07.2019இல்) நடைபெறவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

**நயினை நா.க.குமாரசூரியர்- J.P.**




## கொடியேறி வருவாயே நாகேஸ்வரி தாயாரே!

சிங்களமும் செந்தமிழும் சேர்ந்திலங்கும் ஸ்ரீலங்காவின்
உச்சியிலே வீற்றிருக்கும் உமையவளே நாகபூஷணியே!
மணிமேகலா தேவி வந்த தீவக திருத்தலத்தில்
நற்சிங்கமதில் கொலுவீற்று நாககுடை பூண்டவளே!
வேப்பிலைக்காரியே வேதனைகள் தீர்ப்பவளே!
கருநீலக் கடலலையில் காற்றோடு கலந்து எமை
கண்ணாரக் காப்பவளே காமாட்சியே! கருமாரியே!
சிவனாரின் அருகமர்ந்த புவனேஸ்வரியே பூமகளே!
நாமகளே நயினை உறை நாயகியே மனோன்மணியே!
நாடிவந்து நல்லாட்சி நற்றமிழுக்குத் தருவாயே!
கொடியேறி வருவாயே விடையேறும் பெருமானின்
வித்தகியே சிம்மவாகினியே நாகேஸ்வரி தாயாரே!

**அரியாலையூர் ஏ.வீரசிங்கம்**

## அமுதும் அருளும் சுரக்கும் நாகபூஷணி...

இரைந்தோடும் கடல் மீதில் அலைகோடி உருவாகிக்
கரையெங்கும் நுரையாக அழகாகத் தோன்றும்
குறையாத வரலாற்றுச் சிறப்போடு தமிழர்
நிலமான மணியான மணிபல்லவத் தீவில்
முறையோடு தொழுவோர்க்கு உமையம்மை
நாகபூஷணி எனவாகி அமுதோடு அருளை
நிறைவாகச் சுரக்கின்ற திறண்கான இந்த
-இருவிழியும் போதாது இன்னும் பல வேண்டும்

**சின்னையா சிவபாலன்,கோண்டாவில்**

## கொடியேற்றி எம் மக்களுக்கு நல் விடிவொன்றைத் தா தாயே!

அலைகடல் நடுவே வீற்றிருந்து-நல்
அருளாட்சி புரிபவளே!
அடியவர்கள் குறை அனைத்தும் தீர்க்கும் அன்னையே!
அகந்தையை அழித்து நல்லாற்றலைக் கொடுக்கும் தாயே!
அலைகடல் தாண்டி வந்தோம் அம்மா உந்தன் கொடியேற்றம் காண
கொடியேற்றி எம் மக்களுக்கு நல் விடிவொன்றைத் தா தாயே!

**நயினை விசு, இராசநாயகம்**

## ஆனந்தம் கொள்கிறோம் உன் கொடியாலே...

மணிமேகலையில் கொடி ஏறிடவே
மனநிறைவு பெருகி ஆனந்தமாகிடவே
மனமெங்கும் ஆனந்த சிந்து பாடிடவே
மணிபல்லவ நாயகியின் பெருவிழாவே
நாகம் தொழுத நாயகியே போற்றி
நாளும் அருளும் தேவியே போற்றி
அருள் மழை பொழிந்திடும் நாயகியே சரணம்
அடியவர் குறை தீர்த்திடும் ஆரணியே சரணம்

ஆழ்கடல் சூழ்ந்த நயினையிலே
ஆலயம் கொண்ட இராஜ இராஜேஸ்வரியே
ஆறாத் துயர் அத்தனையும் ஆற்றுபவளே!
ஆனந்தம் கொள்கிறோம் உன் கொடியாலே!

**யசிதீபன்**

# மக்களின் குடியிருப்பு முறையில் ஏற்பட்ட மாற்றமும் குடியிருப்பு நிர்மாணிக்க அனுமதி பெறும் முறையும்

02

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



1986இல் உலக குடியிருப்பு தினம் ஐக்கிய நாடுகள் சபையினால் பிரகடனப்படுத்தப்பட்டு ஒவ்வோராண்டும் ஒக்டோபர் மாதத்தின் முதலாவது திங்கட்கிழமையை உலக குடியிருப்புகள் தினத்திற்கென ஒதுக்கியுள்ளது. இதனை முன்னிட்டு ஐக்கிய நாடுகள் அமைப்பில் உறுப்புரிமை கொண்டுள்ள அனைத்து நாடுகளும் இத்தினத்தை தொனிப்பொருளாகக் கொண்டு பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

நகரத்தை விரிவுபடுத்துவது மட்டுமல்லாமல், நகர மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது இதன் நோக்கமாகும்.

இலங்கையின் 1953 ஆம் ஆண்டு முதன் முதலில் தேசிய வீடமைப்புத் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டது. இதுபடிப்படியாக வீட்டுத்திட்டங்களை அறிமுகப்படுதியது. 1978இற்குப் பின்னர்தான் இதன் வேகம் அதிகரிக்கப்பட்டது. இதற்கென தேசிய வீடமைப்பு அதிகார சபையும் நிறுவப்பட்டது. ஐ.நா. சபையும் இந்தத் திட்டத்திற்கு உதவியளித்தது. 1986 ஆம் ஆண்டை “வீடற்றவர்களுக்கு வீடு” என்று ஐ.நா. சபை பிரகடனப்படுத்தி அத் திட்டத்தின் கீழ் ஒரு இலட்சம் வீடுகள் அமைக்கப்பட்டன.

### ✹ கம் உதாவ என்ற கிராம எழுச்சித்திட்டம்

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச வீடற்றவர்களுக்கு புகலிடம் என சர்வதேச வருடத்தைப் பிரகடனப்படுத்துமாறு ஐக்கிய நாடுகளுக்கு முன்மொழிந்தார். இந்த முன்மொழிவு ஐக்கிய நாடுகளின் 37 ஆவது பொதுச் சபையில் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் 1986 ஆம் ஆண்டு வீடற்றவர்களுக்கு புகலிடம் வழங்கும் சர்வதேச வருடமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. அவர் பிரதமராக இருந்த காலப் பகுதியில் வீடற்ற, சலுகைகள் அற்ற மக்களை கருத்திற் கொண்டு ‘கம் உதாவ (கிராம எழுச்சி) என்னும் வீட்டு அபிவிருத்தி’ நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் அரசாங்கத்தினால் 100,000 வீடுகள் கட்டப்பட்டதுடன், 1,000,000 வீடுகள் எனும் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இது ஐக்கிய நாடுகள் சபையினால் சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்டதாகும்.

கம் உதாவ என்றால் முதலில் வருவது மகியங்கனை கம் உதாவ. அன்றைய காலத்தில் அமைச்சர்கள் எவரும் கால் பதிக்காத கிராமங்கள் அங்கிருந்தன. ஓலைக் குடிசையில், களிமண்ணால் வேயப்பட்ட வீட்டில், பலகை வீட்டில், சேரிப்புற வீட்டில், மழையில் நனையும் வீட்டில், சரியான முறையில் தூங்கவும் முடியாத வீட்டில் வசிக்கும் பிள்ளைகள் குடும்பங்களின் நிலை குறித்து கடுமையாக கவலைப்பட்ட தலைவரே ஆர். பிரேமதாச.

இந்த வறிய மக்கள் குறித்து தனது முதன்மை அவதானத்தை செலுத்திய தலைவரும் இவரே. தொடர்மாடி வீட்டுத் திட்டம், ஒரு இலட்சம் வீடு, 10 இலட்சம் வீடு, 15 இலட்சம் வீடு மற்றும் சர்வதேச வீடமைப்பு வருடம் போன்ற கருத்திட்டங்களை ஏழை மக்களின் கண்ணீரைப் போக்க அவர் அறிமுகப்படுத்தினார்.

10 இலட்சம் வீடமைக்கும் திட்டத்தில் கொழும்பில் தொடர்மாடி வீடுகளும் வீடற்ற குடும்பங்களுக்கு 2 பேர்ச் காணியும் 50ஆ யிரம் ரூபாய் வீட்டுக்கடனும் வழங்கப்பட்டு வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. ஆனால் இவ் வீடமைப்புத் திட்டங்கள் 35 வருடத்தை கடந்துவிட்டது. இவ் வீடுகளில் வாழ்ந்த குடும்பங்கள் மும்மடங்காக பெறுகியுள்ளன. சன நெரிசல்கள் அதிகரிக்க அதிகரிக்க அப்பிரதேசம் ஒரு சேரி மற்றும் குற்றச் செயல் பெருகி, சிறுவர்களுக்கும் பெண்களுக்கும் பாதுகாப்பற்ற பிரதேசமாகவும் சூழல், சுற்றாடல், சத்தம், கூச்சல்கள் சட்டவிரோத கொட்டில்கள் பெருகி சேரி வீடுகளாகவே இப் பிரதேசங்கள் தற்பொழுது காட்சியளிக்கின்றன.

அண்மையில் நான்கு பிள்ளைகளின் தாயார், பத்திரிகைக்கு கூறும் போது, “இந்த வீடு எங்கள் அம்மாவுக்கே கிடைத்தன. தங்கையும் நானும் மணம் முடித்த பின்னர், எங்களுக்கு இடம் போதாமல் போனது. எனக்கு நான்கு பிள்ளைகள் உள்ளனர். தங்கைக்கு இரு பிள்ளைகள் உள்ளனர். 10 பேர் வரை இந்த சிறிய வீட்டினுள் இருப்பது எப்படி? நாங்கள் வீட்டுக்கு முன் பக்கமும் பின்பக்கமும் சில பகுதிகளை சேர்த்துக் கட்டினோம்.”

அண்மையில் நான்கு பிள்ளைகளின் தாயார், பத்திரிகைக்கு கூறும் போது, “இந்த வீடு எங்கள் அம்மாவுக்கே கிடைத்தன. தங்கையும் நானும் மணம் முடித்த பின்னர், எங்களுக்கு இடம் போதாமல் போனது. எனக்கு நான்கு பிள்ளைகள் உள்ளனர். தங்கைக்கு இரு பிள்ளைகள் உள்ளனர். 10 பேர் வரை இந்த சிறிய வீட்டினுள் இருப்பது எப்படி? நாங்கள் வீட்டுக்கு முன் பக்கமும் பின்பக்கமும் சில பகுதிகளை சேர்த்துக் கட்டினோம். எங்களுக்கு வீடுகள் கிடைக்காததினாலேயே அவ்வாறு செய்தோம்” என்றார்.

இந்த திட்டங்களில் மக்கள் நலன் நிச்சயம் இருந்தாலும் காலப்போக்கில் பெறுமதியான நிலங்களை அரசு கையகப்படுத்தும் திட்டத்தின் அங்கமாக பரிமாற்றப்பட்டது. இதன் விளைவாக கொழும்பு சேரிப்புறங்களில் வாழ்ந்த மக்களின் நிலங்கள் பெறுமதி உயர்ந்திருந்த நிலையில் மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் அங்கு வாழ்ந்த மக்களை வலுக்கட்டாயமாக இராணுவத்தைக் கொண்டு அகற்றி, அவர்களுக்கு பின்னர் வழங்கப்பட்ட வீடுகள் அவர்களின் வாழ்ந்த நிலங்களுக்கும் வீடுகளுக்கும் பெறுமதியானவை அல்ல.

இலங்கையில் 21.5 சதவீதமான மக்கள் நகர மக்களாவர். இலங்கையில் ஆறு இலட்சம் மக்களுக்கு மேல் வாழ்கின்ற மாநகரமாகக் கொழும்பு விளங்குகின்றது. பகல் நேரத்தில் கொழும்பு மாநகரத்தின் சனத்தொகை கிட்டத்தட்ட இரண்டு மில்லியன் ஆகும். தெஹிவளை, கல்கிசை, கோட்டை, மொறட்டுவ, யாழ்ப்பாணம், கண்டி ஆகிய நகரங்களில் தலா ஒரு இலட்சம் மக்களுக்கு மேல் வாழ்கின்றார்கள். 50,000 மக்களுக்கு மேல் வாழ்கின்ற நகரங்களாக காலி, நீர்கொழும்பு, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய நகரங்களைக் குறிப்பிடலாம். இலங்கையில் பெரும்பாலான நகரங்கள் விவசாயப் பண்பின் அடிப்படையில் வளர்ச்சி பெற்றவையாகும்.

இன்றுள்ள நகரங்கள் பலவற்றிலும் பரவலாகச் சேரிக்குடியிருப்புக்கள் உருவாகியுள்ளன. நகரின் கட்டடப் பகுதிகளுக்கப்பால் விளிம்புகளிலுள்ள புறம்போக்கு நிலங்களிலும் கேட்பாரற்றுக் கிடக்கும் நிலங்களிலும் சேரிப் புறங்கள் உருவாகின்றன. இங்கு நகர்ப்புறக்கூலித் தொழிலாளர்கள், ஏழைகள் குடிசைகளை அமைத்து வாழ்கின்றனர். சட்டவிரோதமான இக்குடியிருப்புக்கள் அகற்றப்பட்டாலும் மீண்டும் மிகவிரைவில் அமைக்கப்பட்டு விடுகின்றன. இச்சேரிக் குடியிருப்புக்கள் ஆரோக்கியமற்ற குடியிருப்புக்களாக விளங்குகின்றன.

குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு நகரங்களின் உயர்நில மதிப்பும் அதிகரித்த வாடகையும் சுமையாக இருப்பதால் இவ்வாறான சேரிப்புறங்கள் உருவாவதற்குக் காரணங்களாக அமைகின்றன. இலங்கை அரசாங்கம் இத்தகைய சேரிப்புறங்களை இல்லாதொழிப்பதற்காகப் பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அதில் ஒன்று சேரிப்புறங்களில் வாழ்பவர்களுக்கு தொடர்மாடி குடியிருப்புகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இவை விற்கவோ, கை மாறவோ முடியாதவையாக கையளிக்கப்படுகின்றமை சிறப்பம்சமாகும். இவ்வாறும் இலங்கையின் தொடர்மாடி குடியிருப்புக்கள் அதிகரித்து வருவதை நாம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இன்றுள்ள நகரங்கள் பலவற்றிலும் பரவலாகச் சேரிக்குடியிருப்புக்கள் உருவாகியுள்ளன. நகரின் கட்டடப் பகுதிகளுக்கப்பால் விளிம்புகளிலுள்ள புறம்போக்கு நிலங்களிலும் கேட்பாரற்றுக் கிடக்கும் நிலங்களிலும் சேரிப் புறங்கள் உருவாகின்றன. இங்கு நகர்ப்புறக்கூலித் தொழிலாளர்கள், ஏழைகள் குடிசைகளை அமைத்து வாழ்கின்றனர்.
சட்டவிரோதமான இக்குடியிருப்புக்கள் அகற்றப்பட்டாலும் மீண்டும் மிக விரைவில் அமைக்கப்பட்டு விடுகின்றன.

இதே நேரத்தில் அண்மைய அமைச்சரவைக் கூட்டத்தில் வருமானம், வசதி குறைந்த 50,000 மக்கள் வாழும் இடமான மாளிகாவத்தை, வாழைத் தோட்டம் போன்ற இடங்களிலிருந்து அவர்களை அகற்றி அவ்விடங்களை வர்த்தகத் தேவைக்கு பயன்படுத்துவதற்கும் வெளியேற்றப்படும் மக்களுக்கு ஒவ்வொரு குடும்பத்திற்கும் 30 இலட்சம் செலவில் வேறு இடத்தில் தொடர்மாடி வீடுகள் அமைத்துக் கொடுப்பதற்கும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

(தொடரும்...)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

288



ரி.பி. ஜயா

## சுதந்திரத்தின் பின் இலங்கை அரசின் அரசியல் நடவடிக்கைகளும் தமிழ்த் தேசியத்தின் எழுச்சியும் (கி.பி.1948-கி.பி.1983)

மேற்படி சட்டம் இலங்கை இராணுவத்தினருக்கு மிக அனுகூலமானதாக இருந்தது. இச் சட்டத்தால் தமிழ் இளைஞரை அடக்கியொடுக்கி தமிழர் விடுதலைப் போராட்டத்தை வேருடன் அழித்து விடலாம் என ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும் அவரது அரசாங்கமும் கணக்கிட்டது.

ஆனால் தமிழ் இளைஞரின் போராட்ட வேகம் மேலும் மேலும் அதிகரித்தது. ஆயிரமாயிரம் இளைஞர்களும் யுவதிகளும் விடுதலைப் போராட்டத்தில் குதித்தனர்.

இந்நிலையில் யாழ்ப்பாண வளாகம் 1977 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாகத் தரமுயர்த்தப்பட்டது. பல தலைசிறந்த கல்விமான்கள் தெற்குப் பல்கலைக்கழகங்களிலிருந்தும் உலகின் பல பாகங்களிலிருந்தும் தமது சொந்த நாட்டிற்கும் இளந்தலைமுறையினருக்கும் கல்வியை வழங்கிச் சேவைபுரிய விருப்பத்துடன் வந்திணைந்தனர்.

பேராசிரியர்கள் கைலாசபதி, இந்திரபாலா, மகேஸ்வரன், கணேசலிங்கம், கைலாசநாதக்குருக்கள், செல்வநாயகம் போன்ற தலைசிறந்த பேராசிரியர்கள், யாழ்ப்பாண வளாகம் 1974 இல் பரமேஸ்வராக் கல்லூரியிலும் யாழ்ப்பாணக் கல்லூரியிலும் ஆரம்பித்தபோதே தமது கல்விச் சேவையை அளிக்கத் தொடங்கி இவ்வளாகம் மிகக் குறுகிய காலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக தரமுயர்த்தப்படும் அளவுக்குப் பாடுபட்டு உழைத்தவர்கள் என்பதனைத் தமிழ்த் தேசம் என்றும் மறக்காது.

1977 இல் நடைபெற்ற இனக்கலவரத்தோடு யாழ். வளாகத்தில் கல்விபயின்ற சிங்கள மாணவர் தெற்கிலுள்ள பல்கலைக்கழகங்களுக்குச் சென்றுவிட்டனர்.

யாழ்ப்பாண வளாகம் பல்கலைக்கழகமாக தரமுயர்த்தப்படுவதோடு பேராசிரியர் வித்தியானந்தன் துணைவேந்தராகப் பதவியேற்றிருந்தார். அக்காலகட்டத்தில் மேலும் பல கல்விமான்கள் தெற்குப் பல்கலைக்கழகங்களிலிருந்தும் வந்து சேர்ந்தனர்.

பேராசிரியர்கள் சிவஞானசுந்தரம், ரொனி ராஜரட்ணம், சிறிதரன், செல்வநாயகம் போன்ற தலைசிறந்த கல்விமான்கள் இவர்களுள் குறிப்பிடத்தக்கவர்களாகும்.

கலை, விஞ்ஞானபீடம், நுண்கலைப்பீடம், மருத்துவபீடம், கலை அரங்கு, புதிய வளமான நூல் நிலையம், ஆண்களுக்கும் பெண்களுக்கும் விடுதிகள், விளையாட்டு மைதானங்கள் எனச் சகல வசதிகளையும் உள்ளடக்கிய ஒரு பல்கலைக்கழகமாக யாழ்ப்பாண் பல்கலைக்கழகம் மலர்ந்தது.

அதேவேளை தமிழர் தேசியப் போராட்டச் சிந்தனைக்கும் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஒரு மையப் பீடமாக அமைந்தது. 1977 ஆம் ஆண்டு தமிழருக்கு எதிரான இனக்கலவரம் தமிழ் இளைஞரையும் யுவதிகளையும் விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்க மேலும் ஊக்குவித்தது.

இவ்வேளையில் தமிழ் இளைஞரும் யுவதிகளும் நடத்துகின்ற பல்வேறுபட்ட போரியல் உத்திகள் ஜே.ஆர். ஜெயவர்த்தனவையும் சிங்களப் பெரும்பான்மை அரசையும் சிக்கலானதொரு சூழ்நிலைக்கு நிச்சயம் ஆளாக்கியிருக்கும்.

இந்நிலையில் 1981 இல் ஜெயவர்த்தன அரசாங்கம் மாவட்ட அபிவிருத்தி சபைகள் மூலம் தமிழரைத் திருப்திப்படுத்தலாம் எனத் தப்புக் கணக்குப் போட்டது. இதே ஆண்டில் மாவட்ட சபை மசோதா பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டு அதற்கான தேர்தல் 1981 ஜூலையில் நடைபெறும் என அரசாங்கம் அறிவித்தது.

தமிழர் கூட்டணித் தலைவர்களும் மேற்படி மாவட்ட சபைத் தேர்தலில் நிற்பதெனத் தீர்மானித்து தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்விமான்கள், மாவட்ட சபை மசோதாவை ஆதரித்தனர்.

இறுதியில் இந்த மாவட்ட சபைத் திட்டத்தை அமுல்படுத்த முடியாமல் போயிற்று. இக்காலகட்டத்தில் யாழ். மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் முதன்மை வேட்பாளர் ஆ. தியாகராஜா தமிழ் இளைஞரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இன்னுமோர் சம்பவத்தில் இரண்டு பொலிஸாரும் சுட்டுக் கொல்லப்பட்டனர். இவற்றின் விளைவாக யாழ். நகரில் 1981 மே மாதம் கலவரம் மூண்டது. தமிழரின் 95 ஆயிரம் நூல்களையும் கையெழுத்துப் பிரதிகள், ஓலைச்சுவடிகள் போன்ற அரிய பொக்கிசங்களையும் கொண்டிருந்த யாழ்.நூலகம் சிங்களப் படையினரால் எரித்து சாம்பராக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் ஈழநாடு பத்திரிகையின் காரியாலயம், யாழ். சந்தை என்பவற்றுடன் ஆயிரத்துக்கும் அதிகமான வர்த்தக நிலையங்கள் என்பன தீக்கிரையாக்கப்பட்டன.

இச்சம்பவங்களின் போது ஐக்கிய தேசியக் கட்சி அமைச்சர்களான சிறில் மத்தியூ, காமினி திசாநாயக்க போன்றவர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்தார்கள் எனவும் மேற்படி அழிப்பு நடவடிக்கைகளின் பின்னணியில் அவர்களே செயற்பட்டார்கள் எனவும் பல ஆதாரங்கள் ஏற்கனவே வெளியாகியுள்ளன.

1981 மே மாதக் கலவரங்களைத் தொடர்ந்து சிங்கள, தமிழ் இனங்களுக்கிடையில் முறுகல் நிலை தீவிரமடைந்து வன்முறைகள் தெற்கிற்கும் பரவின. இந்தத் தடை தமிழருக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட இன அழிப்பு ஏற்கனவே திட்டமிட்டவையாகவும் பிரதானமாகத் தமிழர் அதிகமாகக் குடியிருந்த இடங்களை இலக்கு வைத்தவையாகவும் காணப்பட்டன.

கொள்கையற்ற சிங்கள அரசியல் பிரமுகர்களால் ஏவப்பட்ட சிங்களக்காடையர் தமிழரை மோசமாகத் தாக்கியதுடன் அவர்களுடைய வீடுகள், சொத்துக்கள் என்பனவற்றைக் கொள்ளையடித்தும் தீவைத்தும் அழித்தனர்.

1983 ஆம் ஆண்டின் ஜூலை மாத இறுதியில் இரண்டாயிரத்துக்கும் அதிகமாக அப்பாவித் தமிழர் கொல்லப்பட்டும் எரியூட்டப்பட்டும் இறந்தனர். பல தமிழ்ப் பெண்கள் சிங்களக் காடையரால் பாலியல் பலாத்காரத்துக்கு ஆளாக்கப்பட்டனர்.

பல மில்லியன்கள் பெறுமதியான வர்த்தக நிலையங்கள், கடைகள், தொழிற்சாலைகள் தீக்கிரையாக்கப்பட்டும் பாரிய அழிவுகளுக்கும் உள்ளாக்கப்பட்டன.

(தொடரும்)

கல்முனை விவகாரம்

# முஸ்லிம்களின் பொருளாதாரத்தை கேள்விக்குறியாக்கும்- மன்சூர்

(கல்முனை)

கல்முனை வடக்கு தமிழ் உப பிரதேச செயலகத்தை தரமுயர்த்துவது, கல்முனை முஸ்லிம்களின் பொருளாதாரத்தை கேள்விக் குறியாக்குமென திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.எம்.மன்சூர் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம்களுக்கு எதிரான அநீதிகளுக்கு தீர்வு வழங்காமல், பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்துவது கல்முனையில் பெரும்பான்மையாக வாழும் முஸ்லிம்களுக்கு பாரிய இழப்பை ஏற்படுத்தும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தென்கிழக்கின் முக வெற்றிலை கல்முனையாகும். முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட வர்த்தகப் பூமியாகவும் இது திகழ்கின்றது. இதனை விட்டுக்கொடுக்க முடியாது. இவ்விவகாரத்தை முஸ்லிம்களின் தேசியப் பிரச்சினைகளுள் ஒன்றாகக் கொண்டு சென்று நியாயமாகத் தீர்வைப் பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.



கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை தரமுயர்த்துவது தொடர்பில் விளக்கமளிக்கும் கூட்டமொன்று நேற்று முன்தினம் சம்மாந்துறை பத்ர் ஜும்ஆப் பள்ளிவாசலில் இடம் பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (7)

# நாட்டில் சட்டவிரோத மதுபான நுகர்வு 300 வீதத்தால் உயர்வடைந்துள்ளது

உலக சுகாதார ஸ்தாபனம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கையில் சட்டவிரோத மதுபான நுகர்வு சுமார் 300 வீதத்தினால் உயர்வடைந்துள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் குற்றம் சாட்டியுள்ளது.

கடந்த 2003 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் நாட்டில் சட்டவிரோத மதுபான நுகர்வு இவ்வாறு 300 வீதமாக உயர்வடைந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறெனினும் இந்த குறிப்பிட்ட காலப்பகுதியில் சட்டரீதியான மதுபான நுகர்வானது 50 வீதத்தினால் மட்டும் உயர்வடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் மொத்த மதுபான நுகர்வில் 40 வீதமான அளவு சட்டவிரோத மதுபானங்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.


ஹலால் திணைக்களம் உரிய முறையில் சட்டத்தை அமுல்படுத்தத் தவறியதன் காரணமாக இவ்வாறு அதிகளவானவர்கள் சட்டவிரோத மதுபானத்தை உற்பத்தி செய்வதாகவும் அதிகளவானோர் அதனை நுகர்வதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (7)

# அம்பாந்தோட்டையிலுள்ள 6500 ஏக்கர் காணிகளை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யத்திட்டம்

மக்களுடன் போராட்டத்தில் இறங்கவுள்ளதாக நாமல் கருணாரத்ன தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் அம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள 6500 ஏக்கர் காணிகளை சீனா மற்றும் சைப்பிரஸ் ஆகிய நாடுகளுக்கு விற்பனைக்குத் தயாராகி வருவதாக அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனம் தெரிவித்துள்ளதால் இந்த நாட்டின் பாரம்பரிய நிலங்களையுழ் வியாபார நிலையங்களையும் வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்வதற்கு எதிராக அம்பாந்தோட்டை மக்களுடன் போராட்டத்தில் இறங்கவுள்ளதாக சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளர் நாமல் கருணாரத்ன தெரிவித்தார்.



நேற்று முன்தினம் அம்பாந்தோட்டை மயுரபுர பிரதேசத்தில் இடம்பெற்ற பொதுக்கூட்டமொன்றில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார். (7)

# போலிக்கடன் அட்டைகளை தயாரித்த சீனப் பிரஜைகள் இருவர் கைது

(கொழும்பு)

கொழும்பு, கொள்ளுப்பிட்டி பகுதியில் போலிக் கடன் அட்டைகளைத் தயாரித்த குற்றச்சாட்டின் கீழ் இரண்டு சீனப் பிரஜைகள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்றைய தினம் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து போலிக் கடன் அட்டைகளைத் தயாரிக்க பயன்படுத்தும் இயந்திரமும் போலிக் கடன் அட்டைகளும் மடிக் கணனி என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்துடன் கைது செய்யப்பட்ட இவர்களை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1764


### யமுனா

பார்த்துக் கொண்டிருக்கும் உறவைவிட காத்துக் கொண்டிருக்கும் உறவுக்குத்தான் பாசம் அதிகம்




### தீபன்

எனக்கு ஒரேயொரு ஆசைதான் எனக்கு எவ்வளவோ கஷ்டம் வந்தாலும் எந்தக் காரணத்துக்கும் என் சொந்தக்காரங்க முன்னாடி மட்டும் உதவின்னு நிக்கிற சூழ்நிலை வந்திடக்கூடாது




### விஷ்ணு

வெங்காயம் மட்டும்தான் கண்களைக் கலங்க வைக்கும் ஒரே பொருள் என்று யாராவது சொன்னால் ஒரு தேங்காயை எடுத்து மண்டையில அடிங்க கண்ணு கலங்குதா இல்லையான்னு பாத்திடலாம்



### வெங்கடேஷ்

இன்னைக்கு ஒருநாள் மட்டும் யாரும் எந்தப் பிரச்சினையும் பண்ணாதீங்க... ஏன்னா என் ஆயுதம் எல்லாம் பூஜையில் இருக்கும்.. ஏதாவதென்னா உங்களைக் காப்பாற்ற என்னால முடியாது மன்னிக்கனும்




### சந்தோஷ்

டாக்டர் எனக்கு அடிக்கடி முன்கோபம் வருது... எவ்வளவு நாளா இப்படி இருக்கு? எவ்வளவு நாளா இருந்தா உனக்கென்னடா முண்டம் டாக்டர்:



### வனிதா

முடிச்சுக்களை அவிழ்க்க முடியாவிட்டால் தோய்ந்து போய்விடாதே... உன் முயற்சியால் அது தேய்ந்து போய்விடச் செய்... இது உன் வாழ்க்கைக்கும் தான்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

### சந்தேக நபர்கள் உயிரிழந்தமையால்

# கதிர்காமர் படுகொலை வழக்கு முடிவுக்குக்கொண்டுவரப்பட்டது

### கொழும்பு மேல் நீதிமன்றம் அறிவிப்பு



முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் படுகொலை வழக்கை முடிவுக்குக் கொண்டு வருவதாக கொழும்பு மேல்நீதிமன்றம் அறிவித்துள்ளது. இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்டிருந்த சந்தேக நபர்கள் அனைவரும் இறந்து விட்ட நிலையிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

கதிர்காமர் கொலை வழக்கில் கடந்த 15 ஆண்டுகளாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேக நபரான முத்தையா சகாதேவன் (வயது-62) என்பவர், கடந்த மாதம் 22 ஆம் திகதி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மரணமானார்.

இவர் மரணமானதற்குப் பின்னர், HC 42/26/2008 என்ற இலக்கமுடைய கதிர்காமர் கொலை வழக்கை தொடர்ந்து நடத்துவதில்லை என்று மேல் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.


2005 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 12 ஆம் திகதி, இலங்கையின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர், குறி பார்த்துச் சுட்டதில் மரணமானார் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

## இலங்கை-தாய்லாந்துக்கு இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து

சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்யும் வகையில் இலங்கைக்கும் தாய்லாந்துக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிகையொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபைக்கும் தாய்லாந்து சுற்றுலாத்துறை அதிகாரிக்கும் இடையில் இந்த புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகியுள்ளது.

இலங்கையிலிருந்து தாய்லாந்துக்கு செல்லும் பௌத்த சுற்றுலாப் பயணிகளுக்கு அங்குள்ள பௌத்த புனித தலங்களைப் பார்வையிட வசதிகள் செய்து கொடுப்பதற்கும், தாய்லாந்திலிருந்து இலங்கைக்கு வரும் பௌத்த சுற்றுலாப் பயணிகளுக்கு இங்குள்ள பௌத்த புனித ஸ்தலங்களைப் பார்வையிட வசதிகள் செய்து கொடுப்பதும் இந்த ஒப்பந்தத்தில் பிரதான இடத்தைப் பெற்றுள்ளதாகவும் இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரியொருவர் தெரிவித்தார். (7)

# போதைப்பொருளுக்கு எதிரான ஊர்வலம்








நுவரெலியா- நானுஓயா பகுதியில் போதைப்பொருளுக்கு எதிரான ஊர்வலமும் வீதி நாடகமும் நடைபெற்றுள்ளது.

நானுஓயா பகுதியை சேர்ந்த தமிழ்- சிங்கள மாணவர்களால் நானுஓயா நகரில் குறித்த ஊர்வலம் நேற்றுத் திங்கட்கிழமை நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் போதைப் பொருட்களுக்கு எதிரான பதாகைகளை ஏந்தி ஊர்வலமாக சென்றதுடன் வீதி நாடகமொன்றையும் நடத்தியுள்ளனர்.

போதைப் பொருட்களால் ஏற்படும் விளைவுகள் மற்றும் அதனைத் தடை செய்வதற்கு மாணவர்கள் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து வீதி நாடகம் ஊடாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(7)

## வாய்த்தர்க்கம் முற்றி மோதலாகியதில் காதைக்கடித்து துண்டாக்கிய நபர்

### திருமண வீட்டில் களேபரம்

திருமண வீடொன்றில் இருவருக்கிடையில் ஏற்பட்ட மோதலில் ஒருவரின் காதைக் கடித்து துண்டாக்கிய சம்பவமொன்று பள்ளக்கட்டுவைப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்றுள்ளது.

பள்ளக்கட்டுவை நகரின் புறநகர்ப்பகுதியில் வீடொன்றில் திருமண வைபவ உபசாரங்கள் இடம் பெற்றுக்கொண்டிருந்தன. அதன் போது இருவருக்கிடையில்பழைய குரோதமொன்றினை முன்னிலைப்படுத்தி ஏற்பட்ட வாய்த்தர்க்கம் மோதலாகியது. இதையடுத்து குறித்த மோதலில் இருவரில், ஒருவரின் வலது பக்க காதைக் கடித்து துண்டாடியுள்ளார்.

இதனால் அவருக்கு பலத்த இரத்தம் வெளியேறிய நிலையில் அங்குள்ளவர்கள் அவரை துண்டாடப்பட்ட காதுடன் எல்ல அரச வைத்தியசாலையில் அனுமதித்தனர். இது தொடர்பில் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற புகாரையடுத்து விரைந்த பொலிஸார் காதைத் துண்டாடிய நபரைக் கைது செய்துள்ளனர். (7)

# செய்தித்துளிகள்

## நீரில் மூழ்கி ஒருவர் பலி

(மாத்தளை)

மாத்தளை கலேவெல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தேவஹுவ நீர்த்தேக்கத்தில் நீரில் மூழ்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மாத்தளை கலேவெல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தேவஹுவ நீர்த்தேக்கத்தில் நீராடுவதற்குச் சென்ற 65 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரே இவ்வாறு நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக கலேவெல பொலிஸார் தெரிவித்தனர். (7)

## வெளிநாட்டு துப்பாக்கியுடன் மூவர் கைது

(கொழும்பு)

கொழும்பு - கிராண்ட்பாஸ் பகுதியில் வெளிநாட்டுத் துப்பாக்கியுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திட்டமிட்ட குற்றத் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஜோர்ச் பெரேரா மாவத்தையிலேயே குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொகரெல்ல - இப்பாகமுவ பகுதியைச் சேர்ந்த 21-42 ஆகிய வயதுக்கு இடைப்பட்ட மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

திட்டமிட்ட குற்றத்தடுப்பு பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (7)

## கண்டி - கலஹா பாதுகாப்பு வனப்பகுதியில் பெருந்தொகையான வெடிபொருட்கள் மீட்பு

(கலஹா)

கண்டி - கலஹா பாதுகாப்பு வனப்பகுதியில் பெருந்தொகையான வெடிப்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கலஹா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாதுகாப்பு வனப்பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் பெருந்தொகையான வெடிபொருட்கள் காணப்படுவதாக நேற்று முன்தினம் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமையவே வெடிபொருட்கள் மீட்கப்பட்டதாக கலஹா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினரும் பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட இந்தச்சோதனை நடவடிக்கைகளிலே 4 - ஜெலனைட் குச்சிகள், 1 கிரோ கிராம் அமோனியா, சாதாரண வெடித்தலுக்கு பயன்படுத்தும் 14 மீற்றர் நீளமான வெடிமருந்து நூல் உள்ளிட்ட பெருந்தொகையான வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.


யாராவது இப்பகுதியில் இந்த வெடிப்பொருட்களை கைவிட்டுச் சென்றிருக்கலாம் எனத் தெரிவித்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 140 | 80 | 80 | 120 |
| உருளைக்கிழங்கு | 150 | 110 | 130 | 140 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 420 | 500 |
| தக்காளி | 100 | 60 | 70 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 140 | 110 | 100 |
| கோவா | 80 | 80 | 80 | 80 |
| கரட் | 140 | 120 | 120 | 60 |
| பூசணி | 120 | 100 | 150 | 120 |
| புடோல் | 80 | 80 | 80 | 100 |
| வாழைக்காய் | 100 | 70 | 70 | 100 |
| சின்ன வெங்காயம் | 140 | 180 | 170 | 200 |
| பெரிய வெங்காயம் | 120 | 110 | 110 | 120 |
| பாகற்காய் | 200 | 130 | 200 | 240 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 60 | 80 | 80 |
| பயற்றங்காய் | 150 | 60 | 140 | 120 |
| லீக்ஸ் | 140 | 120 | 80 | 80 |
| பீற்றூட் | 80 | 70 | 70 | 100 |
| குடமிளகாய் | 160 | 120 | 120 | 280 |
| முருங்கைக்காய் | 200 | 140 | 200 | 240 |
| டோஞ்சி | 160 | 120 | 110 | 160 |
| கத்தரித்தம்புள்ள | 100 | 60 | 60 | 80 |
| கீரை -1பிடி | 40 | 30 | 20 | 30 |
| தேசிக்காய் | 250 | 220 | 250 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 35 | 25 | 20-40 |
| இராசவள்ளி | 200 | 150 | 100 | 160 |
| வெங்காயப்பூ | 150 | — | 200 | 240 |
| முள்ளங்கி | 80 | 60 | 40 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 20 | 30 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 40 | 60 | 110 | 80 |




# குட்டி யானை கணேசனுக்கு பிறந்தநாள்



அன்று குட்டி யானை கணேசனுக்கு பிறந்த நாள், அவனோட நண்பர்களுக்கு ஏதாவது கொடுக்க வேண்டும் என்று அப்பா, அம்மாவிடம் கேட்டுக் கொண்டிருந்தான்.

அப்பா யானை இரண்டு வாழைத்தார்களை பறித்துக் கொடுத்தது. குட்டி யானை கணேசனுக்கு ஒரே சந்தோசம், அவனுடைய நண்பர்களுக்கு வாழைப்பழம் என்றால் உயிர். அதனால் இரண்டு வாழைத்தார்களையும் தன் குட்டித்தும்பிக்கைகளில் கஷ்டப்பட்டுத் தூக்கிக்கொண்டு சென்றது.

வழியில் நரியார் வழிமறித்து "குண்டு கணேசா" என்ன கொண்டு போகிறாய்? என்று கேட்டது. குட்டி யானை கணேசனும், என்னோட நண்பர்களுக்கு பழம் கொண்டு போகிறேன் என்று சொன்னது. அப்படியா ரொம்ப சந்தோசம். எனக்கும் இரண்டு சீப் பழம் கொடு என்றது. ஹூகூம் அதெல்லாம் முடியாது. என்னோட நண்பர்களுக்கு மட்டும்தான் கொடுப்பேன் என்று சொன்னது. நான் உன்னைவிட மூணு கிளாஸ் அதிகமா படிக்கிறேன், எனக்கே கொடுக்க மாட்டேங்கிறயா? என்று மிரட்டியது., குட்டி கணேசன் பயந்து கொண்டு சரி சரி இந்தா இரண்டு சீப் பழம் மட்டும்தான் என்று சொல்லி நரியாரிடம் கொடுத்துவிட்டு வேகமாக நடந்தது.

கொஞ்சத் தூரம் சென்றதும் வழியில் குரங்கு குசலா வந்துகொண்டிருந்தாள். அவள் குட்டி கணேசன் வகுப்பில்தான் படிக்கிறாள். என்ன தும்பி கணேசா வாழைப்பழத்தை எடுத்துட்டு எங்கே போகிறாய்? நான் என் நண்பர்களைப் பார்க்கப் போறேன் என்று பதில் சொன்னது குட்டி யானை கணேசன். அப்படியா ரொம்ப மகிழ்ச்சி, அதுக்கு வாழைப் பழம் எதுக்கு எடுத்துட்டு போறே? அதுவா எனக்கு பிறந்த நாள் அதுக்குத்தான் என்று குட்டியானை கணேசன் சொன்னான். ரொம்ப மகிழ்ச்சி, நானும் உன்னுடைய வகுப்பில்தானே படிக்கிறேன். எனக்கும் இரண்டு சீப் பழம் கொடுத்துட்டு போ, என்று கேட்டது. முதலில் மறுத்த குட்டி யானை கணேசன் சரி இந்தா என்று பரிதாபப்பட்டு இரண்டு சீப் பழங்களை கொடுத்தது.

அடுத்ததாக கரடியார் எதிரில் வந்து குட்டி யானை கணேசனிடம் வாழ்த்துச்சொல்லி இரண்டு சீப் பழங்களை கொடுக்கச்சொன்னது. குட்டி யானை கணேசனும் வேறு வழியில்லாமல் இரண்டு சீப் பழங்களை கொடுத்தது.

அதற்குப்பின்னால் வரிசையாக மான், ஓநாய், முயல், காட்டுப்பன்றி என்று வாழ்த்துச்சொல்லி, "எனக்கு இரண்டு சீப் பழம் கொடு" என்று வாங்கி சென்றன. இப்படி எல்லாருக்கும் கொடுத்து, கொடுத்து, கொண்டு போன இரண்டு வாழைத்தார் பழங்களும் தீர்ந்து போய்விட்டன. குட்டி கணேசனுக்கு அழுகை தாங்க முடியவில்லை. "கோ"வென" அழுதுகொண்டே தன் நண்பர்களை பார்க்காமல் மறுபடியும் வீட்டுக்கு ஓடி வந்துவிட்டது.

அப்பா யானையும் அம்மா யானையும் மகன் குட்டி யானை கணேசன் அழுதுகொண்டே ஓடி வருவதை பார்த்து பதற்றத்துடன் என்ன கணேசா எதற்கு அழுதுகொண்டே ஓடி வருகிறாய்? என்று கேட்டன. அதற்கு குட்டி யானை கணேசன் தான் கொண்டு போன பழங்களை எல்லோரும் வாங்கிக்கொண்டதையும் கடைசியில் ஒரு பழம் கூட இல்லாமல் தீர்ந்துவிட்டதால் நண்பர்களைப் பார்க்காமல் ஓடி வந்து விட்டதை அழுது கொண்டே சொன்னது.

இவ்வளவுதானா! இதற்கா அழுவது, எல்லோருக்கும் கொடுத்து உதவுவது நல்லதுதானே, அதுவும் உன் பிறந்த நாளைக்கு இப்படி எல்லோருக்கும் கொடுத்து உதவினால் புண்ணியம் தான் கிடைக்கும். கவலைப்படாதே, உனக்கு வேணும் என்கிற அளவுக்கு பழங்கள் தருகிறேன் என்னுடன் வா. என்று அப்பா யானை குட்டியானை கணேசனை அழைத்தது. அப்பொழுது வெளியில் ஒரே சத்தம் என்னவென்று அப்பா, அம்மா, குட்டி யானை கணேசன் ஆகியோர் எட்டிப்பார்த்தனர். வெளியே நரி, கரடி, மான், குரங்கு மற்றும் குட்டி யானை கணேசனிடம் பழம் வாங்கியவர்களும் கூடவே குட்டி யானை கணேசனின் நண்பர்கள் ஆகியோர் கைகளில் பரிசுப்பொருட்களுடன் நின்று கொண்டு 'ஹப்பி பர்த்டே கணேசா" என்று சொல்லிக் கொண்டு வந்து பரிசுப் பொருட்களை அதன் கையில் கொடுத்தனர்.

இதைப்பார்த்த குட்டி யானை கணேசனுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை, பெருமையாக தன்னுடைய அப்பாவை பார்க்க "பார்த்தாயா கணேசா நாம் ஒருவருக்கு கொடுத்தால் அது பல மடங்கு நமக்கே வரும்" பழம் கொடுத்தற்கு அழுதாயே, உனக்கு இப்பொழுது எத்தனை பரிசுப்பொருட்கள் வந்துள்ளன பார்த்தாயா, நம் வீட்டில் உள்ள எல்லாப் பழங்களையும் கொண்டு போய் அவர்களுக்கு கொடு என்று அன்புடன் சொல்ல, குட்டியானை கணேசன் அனைவரையும் இருக்கச் சொல்லி ஓடி ஓடி பழங்களை கொடுத்து மகிழ்ந்தது.

(அனைவருக்கும் கொடுத்து உதவினால் உங்களுக்கு இரு மடங்காய் அதன் பலன்கள் திரும்பக் கிடைக்கும் என்பதை தெரிந்து கொள்ளுங்கள் குழந்தைகளே).

## விடுகதைகளும் விடைகளும்

- மழை நேரத்தில் வெட்ட வெளியில் மின்னும் விளக்கு. அது என்ன?

**மின்னல்**

- சரியென்றாலும் அழிப்பான், தவறென்றாலும் அழிப்பான். அவன் யார்?

**ரப்பர்**

- ஒலி கொடுத்து அழைப்பான், உரையாடலில் திளைப்பான். அவன் யார்?

**டெலிபோன்**

- ஆட்டிவிட்டால் ஆடுவான், ஆட்டாவிட்டால் தொங்குவான். அவன் யார்?

**ஊஞ்சல்**

- மண்ணெடுத்து கூடு கட்டும், மரம் அரித்து உயிர் வாழும். அது என்ன?

**கறையான்**

## மாடுகளைப் பற்றி சில அரிய தகவல்கள்

- மாடுகள் ஒன்றுகூடி வாழும் விலங்குகள். மனிதர்களைப் போல் மாடுகள், தங்களுக்கு பிடித்திருக்கும் சக மாடுகளுடன் ஒன்றுசேரும். பிடிக்காத மாடுகளைவிட்டு விலகும்.
- சிவப்பு, பச்சை ஆகிய நிறங்களை மாடுகள் பிரித்துக் காண இயலாது.
- மாடுகளின் இதயத் துடிப்பு விநாடிக்கு 60 முதல் 70 வரை இருக்கிறது.
- மாடுகளின் சராசரி உடல் எடை சுமார் 545 கிலோகிராம்.
- மாடுகளின் கண்கள் 360 டிகிரிக்குச் சற்றுக் குறைவான அளவில் சுற்றிப் பார்க்க முடிகிறது.
- மாடுகளைப் படிகளை ஏற வைப்பது சுலபம். அவற்றைப் படிகளில் இறங்க வைப்பது மிகக் கடினம்.
- நாள்தோறும் மாடுகள் 150 லீற்றர்வரை தண்ணீர் குடிக்கும்
- மனிதர்களைப் போல் பசுமாடுகள் கர்ப்பமாகும்போது தங்களது குட்டிகளைச் சுமார் 9 மாதங்கள் சுமக்கின்றன.
- மாடு என்ற சொல் தமிழில் மற்றொரு பொருள், செல்வம். "கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவர்க்கு மாடல்ல மற்றை யவை" என்ற குறளில் "மாடு" எனும் சொல் செல்வத்தைக் குறிக்கிறது.

எதிர்காலத்தைப் பற்றி கவலைப்படாதவனுடைய நிகழ்கால வாழ்க்கை இனிக்காது.

- யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நீங்கள் சொல்வதும் செய்வதும் உங்களுக்கே நியாயமா?

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 16ஆவது பேராளர் மாநாடு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

அதில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர், தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா உட்படப் பலரும் உரையாற்றியிருந்தனர்.

அதிலும் மாவை சேனாதிராசா மற்றும் இரா. சம்பந்தர் ஆகியோரின் உரைகள் அவர்கள் இன்னமும் 1972களிலேயே இருக்கிறார்கள் என்பதை உணர முடிந்தது.

தமிழ் மக்களின் சமகால மனநிலை எப்படியாக இருக்கிறது என்பதைக்கூட அவர்கள் அறிந்து வைத்திருக்கவில்லை என்று நினைக்கும்போது, அவர்கள் பாவங்களா? அல்லது தமிழினம் பாவப்பட்டதா? என்ற எந்த முடி வுக்கு வருவதென்பது பற்றித் தெரியவில்லை.

ஆயுதம்தான் பலம் என்று இலங்கை அரசு கருதுமாக இருந்தால், அதுபற்றியும் பரிசீலிப்போம் என கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தர் கூறியதை நினைக்கும்போது எங்காவது கட்டாந்தரையில் நின்று கதறிக் குழற வேண்டும் போல் இருக்கிறது.

விடுதலைப் புலிகள் போராட்டம் நடத்திய போது, வன்னியில் நடந்த இறுதி யுத்தத்தின் போதெல்லாம் அரசாங்கத்துடன் சேர்ந்து நின்று அன்றைய ஜனாதிபதி கொடுத்த தேநீரைக் குடித்து சிரித்து மகிழ்ந்தவர்கள்,

இப்போது ஆயுதம் ஏந்திப் போராடுவது பற்றிப் பரிசீலிக்க வேண்டி வரும் என்று கூறுவ தாக இருந்தால், அது எத்துணை வஞ்சகத் தனம் என்பதை இனியும் எங்கள் தமிழ் மக்கள் உணராவிட்டால் யார் தான் என்ன செய்ய முடியும்.

கடவுளே திருகோணமலையைத் தாரை வார்த்துக் கொடுத்த சம்பந்தர் அவர்கள் அரசாங்கத்திற்கான ஆதரவை வழங்குகின்ற எந்தச் சந்தர்ப்பத்திலும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை பற்றியோ, காணாமல் போனவர்களுக்கான தீர்வு பற்றியோ, நில ஆக்கிரமிப்புப் பற்றியோ எந்த நிபந்தனையையும் உடன்பாட்டையும் அரசுடன் ஏற்படுத்தாமல், எழுந்தமானமாக அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கினார்.

இவ்வாறு ஆதரவு வழங்கியதால்தான் பிரதமர் ரணிலின் அரசாங்கம் நிலைத்துள்ளதென தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசாவும் கூறியிருக்கிறார்.

நிலைமை இதுவாக இருக்கையில், ஆயு தம் ஏந்திப் போராடுவது பற்றியும் பரிசீலிக் கப்படும் என்று இரா.சம்பந்தர் கூறுகிறார் எனில் இதைவிட்ட நயவஞ்சகத்தனம் வேறு எதுவுமாக இருக்க முடியாது.

என்ன செய்வது தமிழ் அரசியல் தலைமையின் தற்போதைய தலைவர் என்றிருக்கக் கூடியவரின் இந்த உரையை அவதானிக்கும் வெளிநாட்டு இராஜதந்திரிகள்; இந்த யுகத்தில் தமிழ் மக்களுக்கு விமோசனம் கிடைக்காது என்ற முடிவுக்கு நிச்சயம் வருவர்.

# மகிந்தவின் வழியில் செல்ல ஜனாதிபதி முயற்சி செய்கிறார்

## முஜிபுர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷவின் வழியில் செல்வதற்கே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முயற்சிக்கிறார்.

அதன் காரணமாகவே 19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை நீக்கும் தீர்மானத்துக்கு வந்துள்ளார்.

தொடர் முரண்பாடுகளுடன் ஜனாதிபதியுடன் ஆட்சியை முன்னெடுக்க முடியாது என்று பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தனிப்பட்ட தேவைகளுக்கு ஏற்ப அரசியலமைப்பு திருத்தங்களை மாற்றியமைக்க முடியாது. 19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை நீக்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஒரு போதும் இடமளிக்கப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

அலரி மாளிகையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேலும் தெரிவித்ததாவது,

19 ஆவது அரசியலமைப்பு திருத்தம் , நாட்டில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்திய திருத்தமாகும். இதனூடாக சுயாதீன ஆணைக் குழுக்கள் உள்ளிட்ட பல்வேறுபட்ட ஜனநாயக உரிமைகளையும் பெற்றுக் கொண்டுள்ளோம்.

இவ்வாறு இருக்கையில் இந்த அரசியலமைப்பு திருத்தத்தை நீக்குவதற்கு ஐக்கிய தேசிய கட்சி இடமளிக்காது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் தற்போது மகிந்தவின் வழியில் பயணிக்கவே முயற்சிக்கிறார்.

அதன் காரணமாகவே 19 ஆவது அரசியலமைப்பை நீக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு ஜனாதிபதி வந்துள்ளார் என அவர் மேலும்தெரிவித்தார். (7)

# வவுனியாவில் நடைபாதை வியாபாரத்திற்குத் தடை

வவுனியா நகரில் மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் நடைபாதை வியாபாரத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கிலும், நடைபாதை வியாபாரிகளுக்கு இறுதி எச்சரிக்கை வழங்கும் நடவடிக்கையிலும் நேற்று நகரசபை உத்தியோகத்தர்கள் ஈடுபட்டிருந்தனர்.

நடைபாதையில் வைக்கப்பட்டிருந்த மரக்கறிகளை அகற்றியுள்ளதுடன் இனி வரும் காலங்களில் நடைபாதையில் வியாபார நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால் அவர்களுக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

ஹொறவப்பொத்தான வீதி, இலுப்பையடி, சந்தை சுற்றுவட்ட வீதியில் மக்களின் போக்குவரத்திற்கு இடையூறுகள் ஏற்படுத்தி நடைபாதையில் சுகாதாரத்திற்கு தீங்கான முறையில் மரக்கறிகள், பழங்கள் மற்றும் உணவுப் பொருட்களை விற்பனை செய்த வியாபாரிகளுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொதுமக்கள் நடைபாதையில் வியாபாரம் மேற்கொள்ளப்படும் போது பொதுமக்கள் பெரிதும் அசௌகரியங்களுக்குள்ளாகி வருகின்றமை தொடர்பில் தமக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டையடுத்தே இந் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளதாகவும் இந் நடவடிக்கையை மேற்கொண்ட நகரசபை ஊழியர்கள் தெரிவித்தனர். (9-299)

# அலங்கார உற்சவம்

வவுனியா பெரியார் குளம் ஸ்ரீமுருகன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. 15 நாட்கள் இடம் பெறும் அலங்கார உற்சவம் எதிர்வரும் 17 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவுடன் நிறைவடையும். (9)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை மணிவரை யாழ். பிரதேசத்தில சுன்னாகம், கந்தரோடை, மல்லாகம், ஏழாலை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், தெல்லிப்பழை, நீதிமன்ற கட்டடத்தொகுதி, மல்லாகம், சுன்னாகம் மக்கள் வங்கி, சுன்னாகம் கார்கில்ஸ் பூட்சிற்றி, இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், மாலுசந்தி, பாரதிதாசன் படிப்பகம், முத்துமாரியம்மன் கோவிலடி, நாவலடி, வியாபாரிமூலை, இன்பருட்டி சுப்பர்மடம், இலகடி, காந்தியூர், மந்திகை, உபயகதிர்காமம், வறாத்துப்பளை, புனிதநகர், கற்கோவளம், மாதனை, நெல்லண்டை, வெளிச்சவீடு, சிவப்பிரகாசம், 3ஆம் குறுக்குத் தெரு, பருத்தித்துறை நகரம், பருத்தித்துறை இலங்கை போக்குவரத்து சபை, சாரையடி, கிராமக்கோடு, தம்பசிட்டி, கல்லூரி வீதி, வி.எம் வீதி, சாளம்பை, பருத்தித்துறை அரச வைத்தியசாலை, கற்கோவளம் ஜெயந்தா இன்டஸ்ரியல் பார்க் பிறைவேற் லிமிட்டட், வல்லிபுரம் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் சபை, றாபின்ஸ் வைத்தியசாலை, சாரு & சகாலு பிறைவேற் லிமிடட், நெல்லண்டை வெளிச்சவீடு சங்கானை, பண்டத்தரிப்பு, விழிசிட்டி, தொல்புரம், சுழிபுரம், கள்ளவேம்படி, வடலியடைப்பு, சில்லாலை, சாந்தை, விளான், பெரியவிளான், இளவாலை, மாரீசன்கூடல், சேந்தாங்குளம் , மாதகல், காஞ்சிபுரம், ஐம்புகோளப்பட்டினம், குசுமாந்துறை, காட்டுபுலம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (9)

# விபத்தில் சிறுவன் மரணம்; சந்தேகநபருக்கு மறியல்

(திருமலை)

திருகோணமலை - கண்டி பிரதான வீதியின் பாலம் போட்டாறு பகுதியில் இடம் பெற்ற விபத்தில் 12 வயது சிறுவன் உயிரிழந்தமை தொடர்பில் இளைஞரொருவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு நேற்று திருகோணமலை நீதிமன்ற நீதவான் சமிலா குமாரி ரத்நாயக்க முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போதே சந்தேக நபரை எதிர்வரும் ஒன்பதாம் திகதி வரையில் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

விபத்தில் போட்டாறு பகுதியைச் சேர்ந்த சதுன் மதுசங்க என்ற சிறுவனே உயிரிழந்துள்ளதுடன், இது தொடர்பில் கடவத்தை - கொழும்பு பகுதியை சேர்ந்த 19 வயது இளைஞரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.(7)

# யாழ். வர்த்தகர்களுக்கு எதிராக 63 வழக்குகள்; ரூ.447500 அபராதம்

(யாழ்ப்பாணம்)

கடந்த மாதம் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் சட்டங்களை மீறிய யாழ். வர்த்தகர்களுக்கு எதிராக 63 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு 4 இலட்சத்து 47 ஆயிரத்து 500 ரூபாய் அபராதம் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டதாக வட மாகாணப் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் பணிப்பாளர் முகமட் சாவிக் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஜூன் மாதம் முழுவதும் யாழ். நீதவான் நீதிமன்றப் பகுதியை உள்ளடக்கிய வர்த்தக நிலையங்களில் பாவனையாளர் அதிகார சபைஉத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போது பாவனையாளர் சட்டங்களை மீறும் வகையில் செயற்பட்ட வர்த்தகநிலைய உரிமையாளர்களுக்கு எதிராக யாழ். நீதவான் நீதிமன்றில் தொடுக்கப்பட்ட வழக்கின் அடிப்படையில் குறித்த அபராதம் அறவிடப்பட்டதாக அவர் தெரிவித்தார். (5-10)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- நீங்கள் அழியாத பேரின்பத்தின் பங்குதாரர்கள். புனிதமும், பூரணத்துவமும் கொண்டவர்கள்.
- உழைப்பின் வடிவமாகத் திகழும் சிங்கத்தின் இதயம் கொண்டவனே ஆண்மகன். அவனை திருமகளும் நாடி வருவாள்.
- நான் என்னும் அகந்தை மறையும் போது தான், பெரிய வெற்றிகளை வாழ்வில் அடைய முடியும்.
- எழுந்து நின்று போராடு. ஒரு அடி கூட பின்வாங்க வேண்டாம். எது வந்தாலும் போராட்டம் தொடரட்டும்.

# பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டி
# இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயம் சம்பியன்




வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களிற்கான உடற்பயிற்சி போட்டியில் இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலய அணி சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்கள், பெண்களிற்கான உடற்பயிற்சி போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஊர்காவற்றுறை சென் அன்ரனிஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் பெண்கள் பிரிவில் இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயம் சம்பியன் கிண்ணத்தை பெற்றதோடு கரம்பன் சிறிய புஸ்பம் மகளிர் மகா வித்தியாலய அணி வெள்ளிப் பதக்கத்தையும் வேம்படி பெண்கள் உயர்தப் பாடசாலை வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றியது. (க-60)

## தீவக கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டம் சம்பியனாகியது அல்லைப்பிட்டி சென்.பிலிப்ஸ்



தீவுப்பகுதிக்குட்பட்ட அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் மகுடம் சூடியது அல்லைப்பிட்டி சென்.பிலிப்ஸ் அணி.

அல்லைப்பிட்டி சென்.பிலிப்பு நேரியார் ஆலய வருடாந்த ஆலய வருடாந்த திருவிழாவை முன்னிட்டு தீவுப்பகுதிக்கு உட்பட்ட அழைக்கப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்டத் தொடரின் இறுதிப்போட்டி கடந்த 29 ஆம் திகதி அல்லைப்பிட்டி சென்.பிலிப்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இவ் இறுதி ஆட்டத்தில் பலம் வாய்ந்த அல்லைப்பிட்டி சென்.பிலிப்ஸ் அணியை எதிர்த்து சமபலம் பொருந்திய புங்குடுதீவு பாரதி அணி மோதியது. பரபரப்பாக நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் முதல் பாதியாட்டம் இரு அணிகளாலும் கோல்கள் எதுவும் பெறப்படாமல் சமநிலையில் முடிந்தது. இரண்டாவது பாதியாட்டம் மிக விறுவிறுப்பாக நடைபெற்றபோது 53 ஆவது நிமிடத்தில் அல்லைப்பிட்டி சென். பிலிப்ஸ் அணி சார்பாக அருண்ராஜ்சினால் முதலாவது கோல் பெற்றுக் கொடுக்கப்பட்டது. பின்னர் மறுபடியும் 59 ஆவது நிமிடத்தில் சென். பிலிப்ஸ் அணி சார்பாக நிதர்சன் இரண்டாவது கோலும் பெறப்பட்டு அல்லைப்பிட்டி சென்.பிலிப்ஸ் அணியின் வெற்றி உறுதி செய்யப்பட்டது. ஆட்ட நேர முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் அல்லைப்பிட்டி சென்.பிலிப்ஸ் அணி மகுடம் சூடியது. இப் போட்டியில் ஆட்ட நாயகனாக அருனன்ராஜ் தெரிவு செய்யப்பட தொடர் ஆட்ட நாயகனாக நிதர்சனும் சிறந்த கோல் காப்பாளராக அன்ரனி சார்ஸ்சும் தெரிவு செய்யப்பட்டனர். (க)

## எல்லேயில் மகுடம் சூடியது நெல்லியடி மத்திய கல்லூரி




வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்களிற்கான எல்லே போட்டியில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான எல்லே போட்டியின் இறுதியாட்டம் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இறுதியாட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றிக்ஸ் கல்லூரி 40 பந்துகள் நிறைவில் 12 விக்கெட்டுகளை இழந்து 3 ஓட்டங்களைப் பெற்றது. அவ்வணி சார்பாக காஸ்ரோ, கொலிங்டன், றொமின்சன் ஆகியோர் தலா ஒரு ஓட்டத்தை பெற்றனர்.

பதிலுக்கு 4 ஓட்டம் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய நெல்லியடி மத்திய கல்லூரி அணி 10 பந்துகளில் 2 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. அவ்வணிசார்பாக பிரதீசன், அம்சன், சாகீர், சாருசன் ஆகியோர் தலா ஒரு ஓட்டத்தை பெற்றனர்.

இதில் மூன்றாமிடத்தை கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி பெற்றது. (க-60)

# மைதானம் சிறிது என்பதால் சுழல்பந்து எடுபடவில்லை
## தோல்வி குறித்து ஹோலி



உலகக்கோப்பை தொடரில் இங்கிலாந்து அணிக்கெதிரான தோல்விக்கான காரணத்தை இந்திய அணியின் தலைவர் ஹோலி கூறியுள்ளார்.

இங்கிலாந்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் போட்டியில் இந்திய அணி, இங்கிலாந்திடம் மோசமான தோல்வியை சந்தித்தது.

இதனால் இந்திய அணியின் தோல்விக்கு காரணம் என்ன என்பதை முன்னணி வீரர்கள் பலரும் கூறி வருகின்றனர்.

இந்நிலையில் இந்திய அணியின் தலைவரான ஹோலி, இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சி மிகவும் முக்கியமான ஒன்றாக இருந்தது.

அதுமட்டுமின்றி, ஒருபுறம் பவுண்டரியின் அளவு மிகவும் குறைவாக இருந்தது. அதாவது வெறும் 59 மீற்றர் தூரம் மட்டுமே இருந்தது.

இதனால் இந்தச் சிறிய பவுண்டரியில் ரிவர்ஸ் ஸ்வீப் மற்றும் ஸ்வீப் போன்ற ஷாட்களால் சிக்சர் அடித்தால் சுழற்பந்து வீச்சாளரால் என்ன செய்ய முடியும்.

அத்துடன் ஹர்திக் மற்றும் ரிஷப்பொண்ட் விளையாடியபோது எங்களுக்கு நல்ல வாய்ப்பு இருந்தது. அவர்கள் இருவரும் சிறப்பாக விளையாடி அணியை வெற்றி இலக்கை நோக்கி அழைத்துச் சென்றனர்.

இவர்கள் இருவரின் ஆட்டத்தைக் கண்டு இங்கிலாந்து வீரர்களே சற்று பீதியடைந்திருப்பர். அவர்கள் ஓய்வறையிலும் இவர்களைப் பற்றி கண்டிப்பாக பேசுவார்கள்.

அவர்கள் அவுட் ஆன பிறகு சீரான இடைவேளையில் விக்கெட்டுகளை இழந்தது அணியின் தோல்விக்கு முக்கிய காரணமாக அமைந்துவிட்டது என்று கூறியுள்ளார். (க)

## உயர் நீதிமன்றில்...

பிறப்பிக்குமாறு உயர் நீதிமன்றத்தில் 12 அடிப்படை உரிமை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

நேற்று மாத்திரம் 11 மனுக்களும் கடந்த வெள்ளிக்கிழமையன்று ஒரு மனுவுமாக இந்த 12 மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள கைதிகள் சிலரும் சிவில் சமூக பிரதிநிதிகள் சிலரும் இந்த மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

மரண தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டுள்ள சிறைக்கைதிகளில், ஜனாதிபதியின் உத்தரவுக்கு அமைய நால்வரை தேர்ந்தெடுத்து தூக்கிலிட்டு தண்டனையை நிறைவேற்றுவது சட்டத்துக்கு முரணானது எனவும், அதனூடாக சிறைக் கைதிகளின் அடிப்படை உரிமை மீறப்படுவதாகவும் அந்த 12 மனுக்களிலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. (ம-3)

## பிரதமரிடம்...

பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பின்போது வெளிநாட்டு தூதுவர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மரணதண்டனை நிறைவேற்றம் தொடர்பான தீர்மானத்துக்கு கவலை வெளியிட்டுள்ளனர். (ம-3)

## விடுவிக்க வலி...

விக்க வேண்டும் என்று வலியுறுத்தி, யாழில் நேற்று போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் யாழ். மத்திய பேருந்து நிலையம் முன்பாகவே இந்த கவனயீர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டது.

இதன்போது அரசியற் கைதிகளை நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டும் என்றும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க வேண்டும் என்றும் பிரதானமாக வலியுறுத்தப்பட்டது.

அதேநேரம், 'பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் தமிழர்களைக் கொல்லாதே' என்றும் 'சகாதேவனின் மரணத்திற்கு நீதி வேண்டும்' என்றும் போராட்டக்காரர்களினால் கோஷங்களும் இதன்போது எழுப்பப்பட்டன.

இந்தப் போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரான செல்வராசா கஜேந்திரன், கட்சியின் சட்ட ஆலோசகரான சட்டத்தரணி சுகாஷ், கட்சியின் மகளிர் அணித் தலைவி உள்ளிட்ட கட்சியின் உறுப்பினர்கள், அரசியல் கைதிகளின் உறவினர்கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## நீதிமன்றில் முன்...

வுக்கு உத்தரவிட்டுள்ளார்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பாக இவர்கள் இருவரும் கொலைக்குற்ற சந்தேக நபர்களாக கருதுவதற்கான ஆதாரங்கள் உள்ளன என்பதனாலேயே சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

இலங்கையில் நடத்தப்பட்ட தீவிரவாத தாக்குதல் சம்பவமானது தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக பல்வேறு அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இதுதொடர்பாக இந்தியப் புலனாய்வுப் பிரிவு ஏப்ரல் 4ஆம் திகதியன்றே எச்சரிக்கை விடுத்தும், பாதுகாப்பு பிரதானிகள் அதனை அலட்சியப்படுத்தியமையாலேயே இவ்வாறான அழிவு இடம்பெற்றுள்ளதாக பல்வேறு தரப்பிலிருந்தும் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

இந்த நிலையிலேயே, கொலைக்குற்ற சந்தேகநபர்களாக கருதுவதற்கான ஆதாரங்கள் உள்ளமையினால் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ ஆகியோரை நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களை அடுத்து, பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உத்தரவுக்கமைய பதவியிலிருந்து இராஜினாமா செய்திருந்தார்.

எனினும், இராஜினாமா செய்ய முடியாது என மறுப்புத் தெரிவித்திருந்த பொலிஸ் மா அதிபர் பூஜித, கட்டாய விடுமுறைக்கு உட்படுத்தப்பட்டார். இதற்கு எதிராக அவர் உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-3)

## போதை வியா...

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே சுமந்திரன் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

"விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் நடத்திய போராட்டத்திற்கு தமிழ் மக்களின் ஆதரவு இருந்தது.

குறிப்பாக புலம்பெயர் தேசங்களில் இருந்து தமிழர்கள் அதற்கு பெருமளவான நிதிப் பங்களிப்பை செய்திருக்கிறார்கள். இந்த வரலாறு தெரியாமல் ஜனாதிபதி இப்படி கூறுவது முற்று முழுதான தவறு. அதனை நான் வன்மையாக கண்டிக்கிறேன்.

இது ஆயுதப் போராட்டத்தை கொச்சைப்படுத்தும் ஒரு பொய்த்தகவல். இப்படி ஒரு குற்றச்சாட்டு முன்னர் ஒருபோதும் இருந்ததில்லை" எனத் தெரிவித்தார். (ம-3)

## பிரபாகரன்...

ளார்.

மேலும் ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி பயங்கரவாத தாக்குதலின் பின்னணியில் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் தொடர்புபட்டிருப்பதாக ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தெரிவித்தார்.

30 வருட கால யுத்தத்தை நாம் முடிவுக்கு கொண்டு வந்துள்ளோம். இந்த யுத்தத்தில் ஈடுபட்டிருந்த விடுதலைப்புலிகளும் பிரபாகரனும் போதைப்பொருள் மூலமே வருமானத்தை பெற்றனர். தற்பொழுது சர்வதேச ரீதியில் பயங்கரவாதிகள் இந்த போதைப்பொருள் மூலம் வருமானத்தை பெற்று வருகின்றனர் என்றும் ஜனாதிபதி கூறினார்.

போதைப்பொருள் குற்றவாளிகளுக்கு மரணதண்டனை நிறைவேற்றுவதை எதிர்ப்போர் நாட்டில் எதிர்கால இளம் சமூகத்தினரை சீரழிக்கும் போதைப்பொருள் பாவனையை தடுப்பதற்காக எத்தகையவற்றை செய்துள்ளார்கள் என்றும் ஜனாதிபதி கேள்வி எழுப்பினார்.

போதையிலிருந்து விடுதலை பெற்ற நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வழிகாட்டலில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள போதைப்பொருள் ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டத்தை மேலும் பலப்படுத்தும் வகையில் கடந்த 23ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட தேசிய போதைப்பொருள் ஒழிப்பு வாரத்தின் இறுதி நாள் நேற்றாகும். இதன் பிரதான மகாநாடு நேற்று கொழும்பு, சுகததாச விளையாட்டரங்கில் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்றது.

அங்கு உரையாற்றிய போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார். (ம-3)

## சர்வதேசத்தின்...

செயல் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தேசிய போதைப்பொருள் ஒழிப்பு வார செயற்றிட்டத்தின் இறுதி தின நிகழ்வு நேற்று சுஹததாச உள்ளக விளையாட்டரங்கில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரைக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மரண தண்டனையினை அமுல்படுத்தினால் ஜி. எஸ்.பி வரிச்சலுகை உள்ளிட்ட சர்வதேச சலுகைகள் இரத்து செய்யப்படும் என்று ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட சர்வதேச சமூகம் குறிப்பிடுவது எமது நாட்டின் சுயாதீனத்தன்மைக்கு விடுக்கும் அச்சுறுத்தல்களாகவே காணப்படும்.

மரண தண்டனையினை நிறைவேற்றுவதாக தீர்மானித்தமை நாட்டு மக்களின் தனிப்பட்ட நலன்களை மையப்படுத்தியே தவிர எவ்வித அரசியல் நோக்கங்களுக்கும் அல்ல என்பதை சர்வதேச அமைப்புக்கள் புரிந்து கொள்ள வேண்டும். தேசிய சுயாதீனத்தன்மைக்கு சர்வதேச சமூகங்கள் தலையிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

மரண தண்டனை விடயத்தில் சர்வதேசத்தில் மட்டுமல்ல உள்ளூர் அரசியல் கட்சிகளும் எதிர்ப்பினை தெரிவிப்பது பொருத்தமற்றதாகும்.

போதைப்பொருள் வியாபாரமே எதிர்காலத்தில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தும். ஒரு நாட்டை அழிக்கும் சக்தி போதைப்பொருள் வியாபாரத்தில் உண்டு. விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் போதைப்பொருள் கடத்தல்காரர்களுடன் நேரடி தொடர்பு கொண்டு இருந்தமையின் ஊடாகவே ஆயுதங்களை பெற்றுக் கொண்டு 30 வருட கால சிவில் யுத்தத்தை முன்னெடுத்துச் சென்றார் என்றும் அவர் தெரிவித்தார். (ம-30)

## வேப்பங்குளத்...

வேப்பங்குளத்தில் அமைந்துள்ள மதுபானசாலையில் சில நபர்களுக்கிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடு மோதலாக மாறியது.

குறித்த மோதலில் ஈடுபட்டிருந்த நபர்கள் மதுபானசாலைக்குள் மோதலில் ஈடுபட்டிருந்ததுடன் வெளியிலும் மோதலில் ஈடுபட்டிருந்தனர். இதனையடுத்து அவ்விடத்தில் சற்று பரபரப்பான நிலைமை காணப்பட்டது.

சம்பவ இடத்திற்கு விரைந்த நெளுக்குளம் பொலிஸார் அவ்விடத்தில் நிலவிய பதற்றத்தினை நீக்கியதுடன் மதுபான சாலையினை மூடுமாறு ஊழியர்களுக்கு வேண்டுகோள் விடுத்தமையினையடுத்து மதுபானசாலை இழுத்து மூடப்பட்டது. அத்துடன் சந்தேகத்தின் பேரில் இருவரை கைது செய்து பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து சென்றனர். (ம-250)

## டிசம்பரில்...

போம் என ஒருங்கிணைந்த எதிரணி பாராளுமன்ற உறுப்பினரான எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

கண்டியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், 'நவம்பர் 23 ஆம் திகதிக்கு முன்னர் நாட்டில் ஜனாதிபதித் தேர்தலொன்றை நடத்த வேண்டும். அந்த ஜனாதிபதித் தேர்தல் ஊடாக சக்தி மிக்கதொரு ஜனாதிபதியொருவர் நியமிக்கப்படுவார்.

அதற்கு அடுத்த நாளே நாம் புதிய பிரதமருடனும் புதிய அமைச்சரவையுடனும் சக்தி மிக்கதொரு அரசாங்கத்தை ஸ்தாபிப்போம். எனவே, டிசம்பர் மாதத்தில் இலங்கையில் மீண்டும் பலமானதொரு அரசாங்கம் ஸ்தாபிக்கப்படும் என்பதை நான் உறுதியுடன் இங்கு கூறிக்கொள்கிறேன்.

இன்று 19ஆவது திருத்தச்சட்டத்தால் ஒட்டுமொத்த நாடே பலவீனமடைந்துள்ளது. இதனை பெருமையுடன் கொண்டுவந்து நிறைவேற்றிய ஜனாதிபதியே, இன்று இதனை இல்லாதொழிக்க வேண்டும் என கூறியுள்ளார்.

உண்மையில், இந்த திருத்தத்தால் நாட்டின் நிர்வாகமே ஒட்டுமொத்தமாக சீர்குலைந்துள்ளது. நாட்டின் தலைவருக்கு ஸ்திரமான முடிவொன்றை எடுக்க முடியாத நிலைமை காணப்படுகிறது.

இவ்வாறான பிரச்சினைக்குரிய அரசியலமைப்பில்தான் நாம் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்' என தெரிவித்துள்ளார். (ம-3)

## வலி.வடக்கில்...

மேற்கொள்ளப்பட்டபோது, தமிழ் அரசியல் தலைவர்கள், செயற்பாட்டாளர்கள், மக்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, அளவீட்டை தடுத்து நிறுத்தியிருந்தனர்.

கடற்படைக்கு 167 ஏக்கரும், சுற்றுலா அதிகாரசபைக்கு 65 ஏக்கரும் சுவீகரிப்பதற்கான அந்த திட்டத்திற்கு எதிராக, தமிழ் அரசியல் தலைவர்கள் பலரும் பாராளுமன்றத்திலும் ஜனாதிபதி, பிரதமரிடமும் கருத்து தெரிவித்திருந்தனர். தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, ஈ.பி.டி.பி என்பன பாராளுமன்றத்திற்குள் எதிர்ப்பு தெரிவித்திருந்தன. ஜனாதிபதி, பிரதமருடனான சந்திப்பில் கூட்டமைப்பு அதற்கு எதிர்ப்பு தெரிவித்திருந்தது.

இந்த நிலையில், காங்கேசன்துறை ஜனாதிபதி மாளிகை உள்ளிட்ட 65 ஏக்கர் காணியை எதிர்வரும் 4ம் திகதி அளவீடு செய்யும் இரகசிய திட்டம் தீட்டப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

எனினும், அதற்கான முன்னறிவித்தல் அந்த காணி உரிமையாளர்களான பொதுமக்களிற்கு அனுப்பப்படவில்லை. அநேகமாக இன்று அந்த அறிவித்தல் பொதுமக்களிடம் கிடைக்கலாமென தெரிகிறது. குறுகிய அவகாசத்தில் அறிவித்தல் வழங்கி அளவீடு செய்யும் திட்டமாக இது இருக்கலாமென கருதப்படுகிறது.

இதேவேளை, இன்று 2ம் திகதி வலிவடக்கு பிரதேச செயலகத்தில் இந்த காணி சுவீகரிப்பு தொடர்பான சம்பிரதாயமான கூட்டமொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எனத் தெரிய வந்துள்ளது.

புராதன வழிபாட்டிடங்கள், சமாதி உள்ளடங்கலாக தனியாருக்கு சொந்தமான காணிகள் இவ்வாறு சுவீகரிக்கப்படவுள்ளன. (ம-3)

## ரயிலுடன்...

வரன் லதுசான் என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி பரந்தன் பகுதிக்கும் கிளிநொச்சி புகையிரத நிலையத்திற்கு இடையில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

கொவிசெத
திகதி 2019.07.01
சீட்டிழுப்பு இலக்கம் 2165
V 05 20 22 64

மஹஜன சம்பத
திகதி 2019/07/01
சீட்டிழுப்பு இலக்கம் 3950
Q 9 8 5 4 8 7

மெகா பவர்
திகதி 01/07/2019
சீட்டிழுப்பு இலக்கம் 400
K 09 07 19 20 34

சுபிரி வாசனா
திகதி 2019/07/01
சீட்டிழுப்பு இலக்கம் 1439
12 01 16 37 51 59 35

# சமாதானம்மிக்க நாட்டை கட்டியெழுப்ப மக்களிடையே மொழியறிவு மேம்பட வேண்டும்

## ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் இனங்களுக்கிடையே நம்பிக்கை, ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர புரிந்துணர்வு ஏற்படுவதற்கு மொழியறிவு முக்கியமானதாகும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நேற்று முற்பகல் கொழும்பு, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற அரசகரும மொழிகள் தின விழாவில் கருத்துத் தெரிவிக்கும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அரசகரும மொழி கொள்கையை வினைத்திறனான முறையில் நடைமுறைப் படுத்தும் நோக்கில் அரசகரும மொழி கொள்கையை நடைமுறைப்படுத்தும் வாரம் நேற்று முதல் ஜுலை 05ஆம் திகதி வரை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதுடன், இதன் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக முன்னேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சினால் இந்த நிகழ்ச்சித்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

இதன்போது மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி நல்லிணக்கத்தை நனவாக்குவதற்கு மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்



நடைமுறை ரீதியில் அமுல்படுத்தப்பட வேண்டும் என தெரிவித்தார்.

அரசகரும மொழி கொள்கை தொடர்பில் இலங்கை நிர்வாக சேவையின் சிரேஷ்ட அதிகாரிகள் இதுவரையிலும் போதிய கவனம் செலுத்தாதமையினால் ஏற்பட்டுள்ள நிலைமையை இதன்போது தெளிவுபடுத்திய ஜனாதிபதி, தனது தாய்மொழிக்கு மரியாதையளிப்பதைப் போன்றே ஏனைய மொழிகளையும் அறிந்துகொள்ள வேண்டியது முக்கியமாகும் என தெரிவித்தார்.

நாட்டு மக்களிடையே அச்சமும் பயமும் அவநம்பிக்கையும் தோன்றியுள்ளமைக்கு அவர்களுக்கிடையே சரியான புரிந்துணர்வு இல்லாமையே காரணமாகும் எனவும் அனைத்து மக்களும் சமாதானமாகவும் சந்தோசமாகவும் வாழ்வதற்கான சுதந்திரமான நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு மாணவர்கள் மற்றும் பொதுமக்களிடையே மொழியறிவை மேம்படுத்துவது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பினால் பங்களிப்பு வழங்கப்படும் மொழிக் கணக்காய்வு அறிக்கையை சமர்ப்பித்தல் மற்றும் மும்மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்ட படிவங்களை இணையத்தளத்தில் வெளியிடும் நிகழ்வும் இதன்போது இடம்பெற்றது.

தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சர் மனோ கணேசன், அமைச்சின் செயலாளர் ஏ.எஸ். எம்.எஸ். மஹாநாம, கனேடிய உயர்ஸ்தானிகர் டேவிட் மெக்கினன் ஆகியோரும் கொழும்பு பல்கலைக்கழக சிங்கள மொழி கற்கைகள் பிரிவின் தலைவர் பேராசிரியர் சந்தகோமி கோபறஹேவா, கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடத்தின் முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் என். செல்வக்குமாரன் உள்ளிட்ட பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் கல்விமான்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (ம-3)


**வேலையாட்கள் தேவை**

மேசன் வேலை – மின் இணைப்பு, பிளம்பிங் மற்றும் வெல்டிங்வேலை தெரிந்தவர்கள் தேவை. சம்பளம் நாளாந்தம் ரூபாய் 1,500/= லிருந்து ரூபாய் 1,700/= மதிய உணவு வழங்கப்படும்.

(9439) தொடர்பு : 077 953 0496

**கணக்காளர்கள் தேவை**

பருத்தித்துறை வீதி, புத்தூர் கிழக்கில் அமைந்துள்ள மணியம் Building இல் ஸ்ரீ கௌதமன் ஹாட்வெயாரில் கணக்காளராக பணிபுரிய பணியாளர்கள் தேவை.

தொடர்பு : 077 691 1089 (C-6836)

**துரித தபால்கள் பொதிகள் சேவை**

11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு UK - 600/= Germaney - 700/= France - 700/=

திருமுருகன் கொம்நெற்
321, K.K.S.Road, Jaffna.
கிளை : திருநெல்வேலி, நெல்லியடி.
0777 554 528 (9193)

**பதவி வெற்றிடங்கள்**

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டத்தினருக்கு பல்வேறுபட்ட 08 பதவி வெற்றிடங்கள் உள்ளன.

- Team Supervisor
- Adminstration
- Warehouse and distribution

➢ பயிற்சி அளிக்கப்பட்டு நிரந்தர தொழில் வாய்ப்புண்டு.
➢ வயதெல்லை 18 - 35 ➢ 20 பேர் மட்டும்
● O/L தகைமை உள்ளதாயின்

இன்றே தொடர்பு கொள்க – 077 157 1699 (9440)

**காணி விற்பனைக்கு**

பலாலி வீதி புன்னாலைக்கட்டுவனில் 12 பரப்பு தோட்டக் காணி முழுமையாகவோ / பகுதியாகவோ விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 077 683 4296, 076 714 5107

(9397)


# ஜனாதிபதித் தேர்தலை தாமதப்படுத்த கூட்டு எதிர்க்கட்சி அனுமதிக்காது

## மகிந்த அபேவர்தன தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலை தாமதப்படுத்தும் நோக்கத்துடன் மாகாண சபை தேர்தலை நடத்த அரசாங்கம் முயற்சிக்கிறது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன குற்றம் சாட்டியுள்ளது.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த மகிந்த யாப்பா அபேவர்தன, தற்போது நாட்டில் ஆட்சி மாற்றத்தை கொண்டுவரும் தேர்தலுக்கே அவசியம் உள்ளது என சுட்டிக்காட்டினார்.

அடுத்த சில வாரங்களுக்குள் மாகாண சபை தேர்தலை நடத்த அரசாங்கம் முயற்சிக்கிறது. இந்த நடவடிக்கைக்கு கூட்டு எதிர்க்கட்சி முற்றிலும் எதிர்ப்பை தெரிவிக்கும் என அவர் கூறினார்.

மேலும் எந்தவொரு சூழ்நிலையிலும் ஜனாதிபதி தேர்தலை தள்ளிவைக்க கூட்டு எதிர்க்கட்சி அனுமதிக்காது என்றும் மகிந்த



யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார். (ம-3)

## கசிப்பு வைத்திருந்த நபரை

# எதிர்வரும் 15ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு

(கொழும்பு)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு உட்பட்ட மூங்கிலாற்று பகுதியில் சட்டவிரோதமாக உற்பத்தி செய்யப்பட்ட கசிப்புடன் ஒருவரை புதுக்குடியிருப்பு பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

மூங்கிலாற்று பகுதியில் சட்டவிரோத கசிப்பு வியாபாரம் இடம்பெற்று வருவதாக புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளதை தொடர்ந்து நேற்று முன்தினம் குறித்த பகுதிக்கு சென்ற புதுக்குடியிருப்பு பொலிஸார் 15 லீற்றர் கசிப்பினை உடமையில் வைத்திருந்த ஒருவரை கைது செய்திருந்தனர்.

இவரை முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் நேற்று முன்னிலைப்படுத்திய போது இவரை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ம-3,281)


**CCTV பொருத்துதல்**



(9437)

வடமாகாணம் முழுவதிலும் தரமான கண்காணிப்புக் கமராக்களை நியாயமான விலையில் பொருத்திக் கொள்ளலாம். ஏற்கனவே பொருத்தப்பட்ட கமராக்கள் தொடர்பான திருத்த வேலைகளும் செய்து கொடுக்கப்படும்

V-CON IT PARK
077 3767 899 ☎ 021 221 1818

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

**ராஜ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: ராஜ் - 077 679 6623 (9402)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

**விரைவு பொதிகள் சேவை**
விசேட விலை குறைப்பு

UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
(C-6817)

DELIVERY IN 3-5 DAYS

0768226240

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

V2 TRAVELS

பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

தகுதி - 30 வயதிற்கு உட்பட்டவர்கள் - O/L, A/L எடுத்தவர்கள் விரும்பத்தக்கது

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் V2 TRAVELS

● பயிற்சிக்கால கொடுப்பனவு 7'500/-
● சம்பளம் -15'000/- (C-6839)

0768226243
v2vacancies@gmail.com